
வாய்க்கால் பக். 5


வென்றால் பிரதமர் பதவியேற்கத் தயார் பக். 6


பாக். அரசுடன் பேச்சுக்கள் பக். 7


தோற்றது இந்தியா பக். 23


இன்றைய காலநிலை

கூடிய வெப்பநிலை 28 °c

குறைந்த வெப்பநிலை 24 °c

மழையுடன் கூடிய காலநிலை எதிர்பார்க்கப்படுகின்றது.


# உதயன்

பக்கம் : 24

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

UTHAYAN - A Lively National Tamil Daily

சுடர்: 29 | கதிர்: 076 | வள்ளுவர் ஆண்டு: 2045 | தை 28, திங்கள் 10.02.2014


# சுயாதீன சர்வதேச பொறுப்புக்கூறல் பொறிமுறையை உருவாக்குங்கள்

## இலங்கை தொடர்பில் அமெரிக்க செனட்டில் தீர்மான வரைவு ஐ.நாவில் சமர்ப்பிக்க உள்ள தீர்மானத்தின் முன்னோடி

கொழும்பு, பெப்ரவரி 10

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை அரசு மீது கொண்டுவரப்பட உள்ள பிரேரணைக்கான முன்னோடி வரைவு அமெரிக்க செனட்டில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் நடந்த போர்க் குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் அமெரிக்கா மற்றும் சர்வதேச சமூகம் இணைந்து சுயாதீனமான சர்வதேச பொறுப்புக் கூறல் பொறிமுறை ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்று அந்தத் தீர்மான வரைவு வலியுறுத்தி உள்ளது.

வடகரோலினா மாநிலத்துக்கான செனட்டர் ரிச்சர்ட் புர், இலங்கை தொடர்பான தீர்மானத்தின் வரைவை அமெரிக்க செனட்டில் கடந்த 6ஆம் திகதி சமர்ப்பித்தார்.

'நீடித்த சமாதானத்தை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான - இலங்கைக்குள் இன்நல்லிணக்கம், மீள்குடியமர்வு, உள்ளக ரீதியில் மீளக்கட்டியெழுப்புதல் என்பவற்றுக்கு ஆதரவை வெளிப்படுத்தல்' என்ற தலைப்பில் தீர்மான வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது. செனட்டர்கள் றொபேர்ட் காஸி, பற்றிக் லெகே, ஷெரோட் பிரவுண், பார்பரா பொக்ஸர், ஜோன் கார்னின் ஆகியோர் இந்தத் தீர்மான வரைவுக்கு இணை அனுசரணை வழங்கி அதனை செனட்டில் சமர்ப்பித்தனர்.

> "மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் ஏனைய மனித உரிமை மீறல்கள் என்பன குறித்து சுயாதீன மான சர்வதேச பொறுப்புக் கூறல் பொறிமுறை ஒன்று அமெரிக்கா மற்றும் சர்வதேச சமூகத்தால் உருவாக்கப் படவேண்டும்

போரின் போதும் அதன் பின்னரும் இரு தரப்புகளாலும் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் ஏனைய மனித உரிமை மீறல்கள் என்பன குறித்து சுயாதீனமான சர்வதேச பொறுப்புக் கூறல் பொற்றிமுறை ஒன்று அமெரிக்கா மற்றும் சர்வதேச சமூகத்தால் உருவாக்கப்படவேண்டும் என்று தீர்மான வரைவு கோருகின்றது.

அதில் மேலும் கோரப்பட்டுள்ள முக்கிய விடயங்களாவன:

ஊடகங்கள், சர்வதேச மனிதாபிமான தொண்டு அமைப்புகள், மனித உரிமைகள் குழுக்கள் என்பன இலங்கையின் எப்பகுதிக்கும் சுதந்திரமாகச் சென்று வருவதற்கு இலங்கை அரசு அனுமதிக்க வேண்டும்.

போர்க் கைதிகள் மற்றும் அரசியல் கைதிகள் தடுத்து வைக்

21 ஆம் பக்கம் பார்க்க

## 20 ஆவது தடவையாக தோண்டப்படுகிறது மன்னார் புதைகுழி

மன்னார், பெப். 10

மன்னார் திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழி 20ஆவது தடவையாக மன்னார் நீதிவான் ஆனந்தி கனகரட்ணம்

21 ஆம் பக்கம் பார்க்க

## மு.கா. ஆதரிக்காது

கொழும்பு, பெப்ரவரி, 10

இலங்கை தொடர்பில் சர்வதேச விசாரணைகளுக்கு தாம்ஒருபோதும்ஆதரவளிக்கப் போவதில்லை என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

21 ஆம் பக்கம் பார்க்க

## வாஜ்பாய் அரசு போன்றே நாமும் செயற்படுவோம்

### ஈழ விடயம் குறித்து வைகோவிடம் மோடி உறுதி

சென்னை,பெப்.10

ஈழத் தமிழர் விடயத்தில், வாஜ்பாய் அரசு பின்பற்றிய நடைமுறையையே பா.ஜ.கவும் பின்பற்றும் என்று அந்தக் கட்சியின் பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி குறிப்பிட்டதாக ம.தி.மு.க பொதுச் செயலாளர் வை. கோபாலசாமி தெரிவித்தார்.

சென்னை அருகே வண்டலூரில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் பங்கேற்ற பா.ஜ.கவின் பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி வந்திருந்தார். அங்கு உரையாற்றிய பின்னர், இரவு கிண்டியில் உள்ள ஐ.டி.சி. கிராண்ட் சோழ நட்சத்திர விடுதியில் தங்கியிருந்தார்.



மோடிக்கு பொன்னாடை போர்த்தி ஆரத்தழுவுகிறார் வைகோ.

இதன்போது மோடியை, ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோபாலசாமி சந்தித்து பேசினார். மோடிக்கு அவர் பொன்னாடை அணிவித்து பின்னர் இருவரும் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில்

21 ஆம் பக்கம் பார்க்க

## சர்வதேச விசாரணைக்கு பிரிட்டன் மீள வலியுறுத்து

லண்டன்,பெப்.10

இலங்கையில் நல்லிணக்கம் ஏற்படுவதற்கு, போர்க் குற்றம் தொடர்பில் வெளிப்படையான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று பிரிட்டன் மீளவும் வலியுறுத்தியுள்ளது. பிரிட்டன் நாடாளுமன்றத்தில், வெளிவிவகார பொதுநலவாயத்துறை அமைச்சர் ஸுவைவர் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இலங்கையில் மனித உரிமை நிலைநாட்டப்பட வேண்டும். அங்கு நடந்தேறிய போர்க் குற

21 ஆம் பக்கம் பார்க்க

## ஐ.நா. உதவிச் செயலாளர் ஸு நாளை வருகிறார் வடக்குக்கு

கொழும்பு,பெப்.10

இலங்கைக்கு வருகை தந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் உதவிச் செயலாளர் ஹஒலியாங் ஸு நாளை செவ்வாய்க்கிழமை ஒரு நாள் பயணமாக வடபகுதிக்கு வருகை தரவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பயணத்தின் போது இலங்கையின் மானிட அபிவிருத்திக்கு, ஐ.நாவின் உதவி



ஸு வைக் கொழும்பில் வரவேற்றார் நண்டி

21 ஆம் பக்கம் பார்க்க

## தனது முதலாவது திருமணத்தை மறைத்து திருட்டு மணம் செய்ய முயன்றவர் கைது

### ஒரு குழந்தையின் தந்தையால் ஏமாற்றப்பட இருந்த பெண் தாலி கட்டச் சற்று முன் தப்பினார்

யாழ்ப்பாணம், பெப். 10

ஏற்கனவே திருமணம் முடித்து ஒரு குழந்தைக்குத் தந்தையான நபர் அதை மறைத்து இரண்டாவது தடவையாகத் திருமணம் செய்யமுற்பட்ட சமயம் தாலிகட்டுவதற்குச் சில நிமிடங்களுக்கு முன்னர் மாட்டிக்கொண்ட அதிர்ச்சியூட்டும் உண்மைச் சம்பவம் நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

கடைசி நேரத்தில் உண்மை தெரிய வந்ததனால் திருமணம் இடையில் நிறுத்தப்பட்டது. மணமகனை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர் பெண்வீட்டுக்காரர்கள். இந்தச் சம்பவம் யாழ். நகரை அண்மித்து கே.கே.எஸ் வீதியில் சிவலிங்கப்புளியடியில் நேற்று இடம்பெற்றது.

தான் ஏற்கனவே திருமணம் செய்த விடயத்தை மறைத்ததுடன் மட்டுமல்லாது 5 லட்சம் ரூபா பணத்தைச் சீதனமாகப் பெற்றுக்கொண்டே இரண்டாவது தடவையாக திருமணம் செய்ய முற்பட்டுள்ளார் கைது செய்யப்பட்ட நபர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:

21 ஆம் பக்கம் பார்க்க

## ஆவா குழுவைத் தொடர்ந்து 'டிலு' குறூப் நேற்றுக் கைது

### இராணுவச் சீருடையும் அவர்களிடமிருந்து மீட்பாம்

யாழ்ப்பாணம், பெப். 10

யாழ். குடாநாட்டில் வாள்களுடன் சுற்றித் திரிந்த 'ஆவா' குழு கைது செய்யப்பட்ட நிலையில் அதேபோன்று 'டிலு குறூப்' என்ற பெயரில் இயங்கிய 9 பேர் கொண்ட மற்றொரு அடாவடிக் குழுவைத் தாம் கைது செய்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். கத்தி, வாள் உள்ளிட்ட ஆயுதங்கள் மற்றும் இராணுவச் சீருடைகள் என்பவற்றை இவர்களிடம் இருந்து தாம் மீட்டுள்ளனர்

21 ஆம் பக்கம் பார்க்க

# போர்க்குற்ற விசாரணை நடத்தும் அக்கறை மஹிந்தவுக்கு இல்லை

## *நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை குற்றச்சாட்டு*

கொழும்பு, பெப். 10

இலங்கையின் இறுதிக் கட்டப் போரில் இடம்பெற்றதாகக் குற்றஞ்சாட்டப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பில் முறையான விசாரணை நடத்தும் அக்கறை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு கிடையாது என நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்தப் பத்திரிகை எழுதியுள்ள ஆசிரியர் தலையங்கத்தில்தெரிவித்துள்ளதாவது:

இலங்கையில் ஊடகவியலாளர்களுக்கு எதிராக மஹிந்த அரசு மேற்கொண்டு வரும் அழுத்தங்கள், அச்சுறுத்தல்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. எனினும் அந்தக் குற்றச்சாட்டுக்களை ஏற்பதற்கு அரசு தயாராக இல்லை.

இரத்தக் களரியான இறுதிப் போரின் கடைசிக் கட்டத்தில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள், மனித உரிமைகள் மீறல் குறித்துக் கண்டறிய நம்பிக்கையானதும் சுயாதீனமானதுமான விசாரணை ஒன்றை ஆரம்பிக்குமாறு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க அமெரிக்கா மீண்டும் முயற்சித்து வருகிறது.

இது குறித்து அரச அதிகாரிகள் மற்றும் சிவில் சமூகத்துடன் கலந்துரையாடல்களை நடத்த அமெரிக்க அரசின் மூத்த பிரதிநிதியை இலங்கைக்கு அனுப்பி வைத்தமை காலத்திற்கு ஏற்ற செயற்பாடாகும்.

ஐ.நா. சபை செயலர் பான் கீ மூன் நியமித்த ஆணைக்குழுவின் அறிக்கையில், இலங்கையின் இறுதிப் போரில் 40 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டனர் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கொல்லப்பட்டவர்களில் அதிகளவானோர் அரசின் எறிகணைத் தாக்குதல்களிலேயே கொல்லப்பட்டுள்ளனர். எனினும் இதற்குப் பொறுப்புக் கூற வேண்டியவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க இலங்கை அரசு தவறியுள்ளது. இது மாத்திரமின்றி அந்த விடயம் தொடர்பில் சர்வதேச சமூகம் எடுக்கும் எந்த முயற்சிகளுக்கும் இலங்கை அரசு ஒத்துழைப்பதாக இல்லை.


The New York Times

அரச படையினரும், விடுதலைப் புலிகளும் மேற்கொண்ட போர்க் குற்றங்களைக் கண்டறிய விசாரணைகளை நடத்துமாறுகோரி ஐ.நா. மனித உரிமைகள் சபை இதுவரை இரண்டு யோசனைகளை முன் வைத்தது. ஆனால் இந்த இரண்டு யோசனைகளையும் இலங்கை அரசு புறந்தள்ளியுள்ளது. இந்த நிலையில் மூன்றாவது தீர்மானம் ஒன்றைக் கொண்டுவர அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக தெற்கு மற்றும் மத்திய ஆசிய நாடுகளுக்கான அமெரிக்காவின் உதவி ராஜாங்க செயலர் நிஷா தேசாய் பிஸ்வால் இலங்கைக்குப் பயணம் செய்துள்ளதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தெரிவித்தது.

சர்வதேச அழுத்தங்கள் காரணமாக உள்நாட்டில் சில முன்னேற்ற நடவடிக்கைகள் இலங்கை அரசு எடுத்திருப்பதை அறிய முடிகிறது. குறிப்பாக பல வருடங்களாக அரசினால் புறக்கணிக்கப்பட்டு வந்த, தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு மாகாண சபைக்கு தேர்தல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தவகையில் மனித உரிமை மீறல்கள், போர்க் குற்றங்கள் தொடர்பில் இலங்கை அரசு சர்வதேசத்துக்கு பதிலளிக்க வேண்டிய கடப்பாடு உள்ளது. அதற்கு ஒத்துழைக்க வேண்டியது அந்த அரசின் கட்டாயமாகும்- என்றுள்ளது. (ஐ)



அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அட்டாளைச்சேனைப் பகுதியில் மீனவர் ஒருவரின் கரைவலையும் தோணியும் இனந்தெரியாதோரால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. நேற்று முன்தினம் நண்பகல் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. (ஐ-10)

# ஜெனிவா தீர்மானத்தை நிராகரிக்கும் இலங்கை

## *டில்லி கைகொடுக்கும் எனவும் அரசு நம்பிக்கை*

கொழும்பு, பெப். 10

ஜெனிவாக் கூட்டத்தொடரில் அமெ ரிக்காவால் கொண்டு வரப்படும் பிரே ரணையைத் தோற்கடிப்பதற்கான முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுவரும் இலங்கை அரசு, தமது முயற்சி கைகூடாமல் தீர்மானம் நிறைவேற்றப்படும் பட்சத்தில் அதை நிராகரிப் பதற்கு முடிவெடுத்துள்ளது. இதனை நேற்று 'உதயனி'யிடம் உறுதிப்படுத்திய வெளிவிவகார பிரதி யமைச்சர் நியோமல் பெரேரா, ஜெனி வாவில் இலங்கை சார்புப் போக்கை இந்தியா இம்முறை கடைப்பிடிக்கும் என நம்புவதாகவும் கூறினார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 25ஆவது கூட்டத்தொடரில் இலங்கை அரசுக்கு எதிராக முன் வைக்கப்படும் பிரேரணை நிறைவேற் றப்படும் பட்சத்தில், அந்தத் தீர்மா னத்தை ஏற்று அதில் முன்வைக்கப்பட்டுள்ள சரத்துகளை - சிபாரிசுகளை நடைமுறைபடுத்துவதற்கு இம்முறை அரசு இணங்குமா என்றும் ஜெனிவாப் பிரேரணை விவகாரத்தில் இந்தியா எத்தகைய நிலைப்பாட்டை இம்முறை எடுக்கும் என்றும் பிரதியமைச்சரிடம் 'உதயன்' வினவியபோதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அதேவேளை, இலங்கையின் நல் லிணக்கக்குழுவின் பரிந்துரைகளை ஐ.நா. மனித உரிமைகள் சபை ஏற்றுக்கொண்டுள்ளது. அவற்றை அமுல்படுத்தி வருகின்றது. இதுவரையில் 85 சதவீதமானவை நிறை வேற்றப்பட்டுள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே, ஜெனிவாவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆணைக் குழுவின் அறிக்கை இருக்கையில் அங்கு நிறைவேற்றப்படும் தீர்மானத்தை அரசு இம்முறையும் நிராகரிக்கும். அத்துடன், அயல்நாடு என்ற அடிப்படையில் இந்தியா சிறந்த முடிவை எடுக்கும் என அரசு நம்புகிறது. ஜெனிவாவில் அதன் சிறந்த பங்களிப்பு கிடைக்கும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும் என்றும் அவர் கூறினார். (ஐ-சி)



நேற்றைய கலந்துரையாடலில் கலந்துகொண்ட மக்கள்

# மன்னாரில் மதுக்கடையை மூடக் கோரி ஆர்ப்பாட்டம்

## *எதிர்வரும் 17 இல் ஏற்பாடு*

மன்னார், பெப். 10

மன்னார் பெரியகடை கிராமத்தில் மக்கள் குடியிருப்புக்கு அரு கில் தனியார் வீடொன்றில் அமைக்கப்பட்டுள்ள மது விற் பனை நிலையத்தை அகற்றுமாறுகோரி அந்தப் பகுதி மக்கள் எதிர்வரும் 17 ஆம் திகதி எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்த விருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

மன்னார் பெரியகடை பகுதியில்மக்களின் குடியிருப்புகளுக்கு மத்தியில் தனி நபர் ஒருவர், தென்பகுதியைச் சேர்ந்த அரசியல் வாதிகளின் ஆதரவுடன் கடந்த வருடம் மது விற்பனை நிலையம் ஒன்றை அமைக்க நடவடிக்கைகள் மேற்கொண்டு வந்தார். இந்த நிலையில் பெரிய கடை மாதர், கிராம அபிவிருத்திச் சங்கத்துடன் இணைந்து பெரிய கடை கிராம மக்கள் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் ஆர்ப் பாட்டம் நடத்தினர்.

இந்த நிலையில் குறித்த மது விற்பனை நிலையம் திறக்கும் பணிகள் நிறுத்தப்பட்டிருந்தது. இந்த நிலையில் கடந்த 6 ஆம் திகதி அது திடீரென இயங்க ஆரம்பித்துள்ளது.

மக்கள் எதிர்ப்புக்களுக்கு மத்தியில் இந்த மது விற்பனை நிலையில் திறக்கப்பட்டுள்ளதால் அரனை உடனடியாக மூடுமாறு வலியுறுத்தியே மீளவும் தாம் இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக மக்கள் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பான கூட்டம் ஒன்று நேற்று பெரியகடை பொது மண்டபத்தில் நடை பெற்றது. இதன் போது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், எஸ்.வினோநோகராதலிங்கம், வடமாகாண அமைச்சர் பா.டெனிஸ்வரன், மன்னார் நகர சபையின் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம், உபதலைவர் ஜேம்ஸ் ஜேசுதாஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர். இந்தக் கூட்டத்தில் மக்கள் போராட்டத்துக்கு தாம் ஆதரவு அளிப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்தது. (ஐ-56)

# 13 திருத்தம் குறித்து அஞ்சத் தேவையில்லை

கொழும்பு, பெப். 10

13 ஆவது திருத்தச்சட்டத்தை இலங்கை அரசு அமுல்படுத்தியிருந் தால் இன்று ஜெனிவா பிரேரணைக்கு அஞ்சி சீனா உள்ளிட்ட நாடுகளிடம் தஞ்சம் கோரவேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்தது.

அத்துடன், அரசு 13 ஆவது திருத்தத்தை உடனடியாக நடைமுறைப் படுத்த வேண்டும் என்றும் அக்கட்சி வலியுறுத்தியது.

அரசின் இதுபோன்ற செயற்பாடுகள் தொடர்பில் வினவிய போதே ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப் பினரும் கட்சியின் வெளிவிவகா ரங்களைக் கையாளுபவருமான லக்ஷ்மன் கிரியெல்ல மேற்கண்டவாறு சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஜெனிவாக் கூட்டத்தொடரில் இலங் கைக்கு எதிராக பிரேரணை வரவுள்ளமை தற்போது உறுதியாகி விட்டது. ஆகவே, அரசு இந்தப்பிரேரணை வருவதற்கு என்ன காரணம் என்று தெரிந்துகொண்டு அதற்கான தீர்வை முன்வைக்க வேண்டும்.

அமெரிக்கா போன்ற நாடுகள் இலங்கைக்கு எதிராக பிரேரணை கொண்டுவருவதற்கு, சர்வதேசத்திற்கு அரசு 13 ஆவது திருத்தத்தை நடை முறைப் படுத்துவதாக தெரிவித்த வாக்குறுதியே முக்கிய காரணமாக இருக்கிறது - என்றார். (ஐ-சி)

# படுகொலைக்குக் காரணமானோர் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவர்

## *ஜனாதிபதி ஆணைக்குழு உறுதி*

கொழும்பு, பெப். 10

காணாமற்போனோர் கொலை செய்யப்பட்டுப் புதைக்கப்பட்டுள்ளதாக நம்பப்படும் இடங்கள் தொடர்பில் உரிய வகையில் விசாரணை நடத்தி, புதை குழிகள் கண்டறியப்பட்டால் அவற்றைத் தோண்டுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு உறுதியளித்துள்ளார், காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை நடத்தும் ஆணைக்குழுவின் தலைவர் பராக்கிரம பரணகம. நல்லாட்சிக்கான மக்கள் இயக்கத்தினருடனான சந்திப்பின்போது அவர் இந்த உறுதிமொழியை வழங்கினார் என்று அதன் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இலங்கையில் இடம்பெற்ற படுகொலைகளுக்கு காரணமானவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என நல்லாட்சிக்கான மக்கள் இயக்கம் ஆணைக்குழுத் தலைவரிடம் வலியுறுத்தி உள்ளது.

காணாமற்போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக் குழுவுக்கும் நல்லாட்சிக்கான மக்கள் இயக்கம் தலைமையிலான கூட்டணிக்கும் இடையிலான இரண்டாம் கட்ட சந்திப்பு கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பிலுள்ள ஆணைக் குழுவின் தலைமையகத்தில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்புக் குறித்து நல்லாட்சிக்கான மக்கள் பிரதிநிதிகள் கருத்துத் தெரிவித்ததாவது:

காணாமற்போனோர் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டுள்ளதாக நம்பப்படும் இடங்களை சம்பந்தப்பட்டோரிடம் உரிய விசாரணைகள் செய்து கண்டறிய வேண்டும், அதன் மூலம் உயிரிழந்தவர்கள் உறவினர்கள் சமய சடங்குகளை செய்வதற்குச் சந்தர்ப்பம் வழங்க வேண்டும்.

அத்தோடு பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குரிய நட்டஈடு வழங்குவதோடு படுகொலைகளுக்கு காரணமானவர்களைச் சட்டத்தின்முன் நிறுத்தவேண்டும் எனவும் வலியுறுத்தினோம்.

இந்தக் கோரிக்கைகளை ஆணைக்குழுவின் தலைவர் முழுமையாக ஏற்றுக்கொண்டார். புதைகுழிகளை உடனடியாக தோண்டுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள தயாராக இருக்கிறார் எனவும் தெரிவித்தார்.

மேலும் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டவர்களை அடையாளம் காணும் முகமாக புதைகுழிகளில் கண்டெடுக்கப்படும் எச்சங்களை மரபணுப் பரிசோதனை செய்வதற்கான சகல செலவினங்களையும் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி திட்ட நிறுவனம் ஏற்றுக்கொள்ள முன்வந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இது தொடர்பிலான சில சட்ட ரீதியான நடவடிக்கைகளை நல்லாட்சிக்கான மக்கள் இயக்கம் மேற்கொள்ள வேண்டும் எனவும்அவர்கேட்டுக்கொண்டார்.

இந்தச் சந்திப்பில் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் பராக்கிரம பரணகம, அதன் இணைப்பாளர் கெலி, கூட்டணி சார்பாக வட மாகாண சபை உறுப்பினர் அஸ்மின் அய்யூப் மற்றும் அப்துர் ரஹ்மான் உட்பட் பலர் கலந்து கொண்டனர். (ஐ-10)

# நல்லூர் பகுதியில் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், பெப். 10

யாழ்.நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்குப் பின்புறமாக தனியார் கட்டடத்தை அண்மித்து முதியவர் ஒருவரின் சடலத்தை மீட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்.தட்டாதெருவைச் சேர்ந்த எம்.சுந்தரமூர்த்தி (வயது - 70) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார். சம்பவ இடத்துக்குச் சென்ற நீதிவான் சடலத்தைப் பார்வையிட்டார். சடலம் உடற்கூற்றுப் பரி சோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ஐ-4-7)

# 'சுணை' நீரால் பாதிக்கப்படும் பாஷையூர் கடற்றொழிலாளர்

## *தடுப்பு நிவாரண மருத்துவ வசதியை ஏற்படுத்தித் தருமாறு மீன்பிடி அமைச்சருக்குக் கடிதம்*

கொழும்புத்துறை,பெப்.10
பாஷையூர் கடற்றொழிலாளர் கடற்றொழிலில் ஈடுபடும் போது யாழ்.குடாக் கடலில் அடிக்கடி சுணை நீர் (நச்சு நீர்) தாக்கத்துக்கு உட்பட்டு பெரும் உடல் உபாதை களை எதிர்கொள்வதுடன் உயிரிழப்பைக்கூட சந்திக்க நேரிடுகிறது. அதற்கான தாக்கத் தடுப்பு நிவாரண மருத்துவ வசதிக ளையும் ஏற்படுத்தித் தருவது டன் நச்சு நீர் தொடர்பான ஆய் வையும் மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

பாஷையூர் புனித அந்தோனியார் கிராமிய கடற்றொழில் அமைப்பால் வட மாகாண சபை மீன்பிடி, போக்குவரத்து விவகார அமைச்சர் பா.டெனீஸ்வரனுக்கு இது தொடர்பான கோரிக்கை கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மீனவர் அமைப்பால் விடுக்கப்பட்ட கோரிக்கை கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்.குடாக்கடலை அண்மித்த ஆழம் குறைந்த 90 வீத கற்பாறைகளைக் கொண்ட கடற் பகுதியில் நச்சு நீர் அல்லது சுணை நீர் என்று கூறப்படுகின்ற கண்களுக்குப் புலப்படாத பதார்த்தம் உடலில் படுவதால் இந்தத் தாக்கம் ஏற்படுகின்றது. முதலில் அரை செ.மீ. பகுதியிலேயே நச்சு நீர் தாக்கியது உணரப்படும்.

சிறிது நேரத்தில் உடல் முழுவதும் அதன் தாக்கத்தின் வேதனை பரவி பெரும் உபாதைகளை ஏற்படுத்துகிறது. இந்தத் தாக்கம் ஒரு சிலருக்கு மரணத்தைக் கூட ஏற்படுத்தியுள்ளது. பூநகரி கல்முனைக் கடற் பகுதியில் இதன் தாக்கம் தற்போது அதிகமாகக் காணப்படுகிறது.

கடந்த மாதம் மட்டும் 10இற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர். மேற்படி தாக்கத்தின் விளைவாக தொழிலாளர்களுக்கு ஏற்படும் கொடிய வேதனைகளாவன:-

- கண்ணுக்குத் தெரியாத இந்த சுணை நீர் பட்டவுடன் நெருப்புச் சுட்டது போன்ற உணர்வு உடன் உணரப் படும்.
- 30 நிமிடத்துக்குள் உடல் முழுவதும் தாங்க முடியாத வேதனை பரவி 24 மணி நேரம் வரை தணியாது தாக்கத்தின் செறிவிற்கேற்ப 2, 3 நாள்கள் வரை நீடிக்கும்.
- ஒரு மணி நேரத்தினுள் நாக்கு, உதடு, கண் இமை கள், வியர்வைத் துவாரம் போன்ற மென்மையான பகு திகளில் ஊசியால் குத்துவது போன்ற வேதனை உணரப் படும்.
- தொடர்ச்சியாக இருமலும், தும்மலும், மூக்கில் நீரும், கண்ணீரும், நாவில் அதிக உமிழ் நீரும் உண்டாகும்.
- ஓரிடத்தில் நிலை கொள்ள முடியாததுடன் சிறுநீர், மலம் கழிக்கவும் முடியாது போகும்.
- சாப்பிட்டால் வேதனை இரட்டிப்பாகும்.
- தென்மேற்கு பருவக் காற்று காலங்களில் வீதிகளில் பெரும்பாலும் இந்தத் தாக்கம் ஏற்படுவதில்லை.

எனவே மேற்கூறிய அனுபவக் குறிப்புக்களை முன்னிறுத்தி ஆய்வுகளை மேற்கொண்டுதடுப்புமுறைகளையோ அல்லது தாக்கத் துக்கு உடன் நிவாரண மருந்துகளை அறிமுகம் செய்து தொழிலாளர்கட்கு உதவ ஆவன செய்யுமாறு கேட்கப் பட்டுள்ளது.

இதன் பிரதிகள் யாழ்.அரச அதிபர், போதனா வைத்திய அதிகாரி, கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.(வ-135)

## ஜீ.ஜீ.நினைவு தின நிகழ்வு



*குருநகரில் அமைந்துள்ள ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் உருவச் சிலைக்கு நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி மலர்மாலை அணிவிக்கின்றார்*

யாழ்ப்பாணம்,பெப் 10
அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் நிறுவுநர் அமரர் ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் 37 ஆவது நினைவு தின நிகழ்வுகள் நேற்றுக் காலை 9 மணிக்கு குருநகரில் உள்ள அவரது உருவச் சிலை முன்றலில் இடம்பெற்றன.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சொலமன் சிறில் தலைமையில் நடைபெற்ற அஞ்சலி நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி, வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான தர்மலிங்கம் சித்தார்த்தன், கேசவன் சயந்தன், யாழ். மாநகர சபை உறுப்பினர் மேரியம்மா, வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைத் தலைவர் வியாகேசு உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதேவேளை நாடாளு மன்ற முன்னாள் உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்தார். இதன்போது முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன், மன்னார் மாவட்ட தமிழ் காங்கிரஸ் அமைப்பாளர் பெனடிற் கலந்து கொண்டனர். (வ-135-51-23-9)

## கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய திருவிழாவுக்கு விசேட பஸ்சேவை

வலி. வடக்கு, பெப். 10
கீரிமலை, நகுலேஸ்வரர் ஆலய வருடாந்த கொடியேற்றம் எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆகும். அதனையொட்டி அன்றைய தினம் விசேட பஸ் சேவைகளை காங்கேசன்துறை வீதி மாவிட்டபுரம் ஊடாக கீரிமலை வரை நடத்துவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய வருடாந்த திருவிழா குறித்த கலந்துரையாடல் வலி. வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலாளர் தலைமையில் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

ஆலய தர்மகர்த்தா சபை உறுப்பினர்கள், பிரதேச சபையின் தலைவர் மற்றும் உயர் அதிகாரிகள், தெல்லிப்பழை சுகாதார வைத்தியதிகாரி, சுகாதாரப் பரிசோதகர்கள் தனியார் மினி பஸ் சங்க உறுப்பினர்கள் இலங்கை போக்குவரத்துச் சபையின் அதிகாரிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

கொடியேற்றத்துக்குச் செல்லும் அடியவர்களின் நன்மை கருதி 14ஆம் திகதி கொடியேற்றத் தினத்தன்று மாவிட்டபுரம் வரை நடைபெறும் 769 ஆம் இலக்க தனியார் மினி பஸ் சேவையை கீரிமலை வரை நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது. (வ-86)

14ஆம் திகதி கொடியேற்றத் தினத்தன்று மாவிட்டபுரம் வரை நடைபெறும் 769 ஆம் இலக்க தனியார் மினி பஸ் சேவையை கீரிமலை வரை நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

## கோழிக்குஞ்சுகள் வழங்கல்

வலி. வடக்கு, பெப். 10
அச்சுவேலி பண்ணையில் உற்பத்தி செய்யப்படும் கலப்பு இன கொல்லைப்புற கோழிக் குஞ்சுகள் எதிர்வரும் 19 ஆம் திகதி உடுவில் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட மக்களுக்கு உடுவில் கால்நடை அபிவிருத்தி சுகாதாரத் திணைக்களத்தில் வழங்கப்படவுள்ளன.

குறிப்பிட்ட கலப்பு இன கொல்லைப்புற கோழிக் குஞ்சுகள் தேவைப்படுவோர் சுன்னாகம் கொத்தியாலடியில் அமைந்துள்ள கால்நடைகள் அபிவிருத்தி சுகாதாரத் திணைக்களத்தில் எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கால்நடைகள் சுகாதார வைத்தியதிகாரி ரி.விமலகுமார் அறிவித்துள்ளார். (வ-86)


## வியாபார உரிமம் பெற பெப்.20 வரை காலக்கெடு

யாழ்ப்பாணம்,பெப்.10
நல்லூர் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட வர்த்தக நிலையங்களுக்கு இந்த ஆண்டுக்கான வியாபார உரிமத்தை எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறும்-

தவறின் சட்ட நடவடிக்கைக்கு முகம் கொடுக்க நேரிடும் என்றும் உரிமையாளர் களுக்கு நல்லூர் பிரதேச சபை அறிவித்துள்ளது. (ஓ-7)

# செம்மணி வெட்டவெளியில் நடக்கும் 'அந்தரங்கம்'

## *கலாசாரச் சீரழிவின் உச்சத்தில் குடாநாடு*



*ஹைஏஸ், ஓட்டோவில் மறைந்திருக்கும் மர்மம் 'என்னவோ...'?*

யாழ்ப்பாணம், பெப்.10
வடக்கில் கலாசாரச் சீரழிவுகள் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றன. யாழ்.குடாநாடு அதில் முந்திக் கொண்டு நிற்கிறது. தமிழ் மக்களைச் சீரழிக்கும் நடவடிக்கைகள் இங்கு சச்சிதமாக நடைபெற்று வருகின்றன.

மாணவர்கள், இளைஞர்கள் போதைவஸ்து பாவனை, மதுப் பழக்கம் போன்றவற்றிலும் இளசுகள் பாலியல் ரீதியில், கலாசாரச் சீரழிவுகளுக்கு ஆளாகி வருகின்றனர். நாகரிகம் என்ற பெயரில் வேறு எத்தனையோ சீரழிவுகள் .

மேலே காணப்படும் படங்கள் நல்லூர் செம்மணிப் பகுதியில் எடுக்கப்பட்டவை. செம்மணி புதை குழி விவகாரம் முன்னர் பிரசித்தமாக இருந்தது. இப்போது அந்தப் பகுதி இளமட்டங்களின் 'உல்லாசபுரி'யாக மாறிவருகிறது. அந்தப் பகுதியில் கலாசாரச் சீரழிவுகளுக்குப் பஞ்சமில்லை.

அங்கு வாகனங்களில் வரும் 'ஜோடி'கள் பகிரங்கமாக - வெட்ட வெளியில் - பகல் வேளைகளிலும் வெட்கம், கூச்சம் ஏதுமின்றி, 'அந்தரங்கமான' விவகாரங்களைப் பகிரங்கமாகச் செய்கின்றனர்.

மதியம் மற்றும் மாலை வேளையில் ஒன்று கூடும் இளைஞர் கும்பல் வீதியில் நின்றவாறே பகிரங்கமாக மது அருந்துகின்றனர். வீதியால் செல்லும் பெண்களுக்கு மது போதையில் நின்றவாறு மதுப் போத்தல்களைக் காட்டி ஆபாச வார்த்தைகளை அள்ளி வீசுகின்றனர். இதனால் இந்த வீதியால் பகலில் கூட பெண்கள் தனி யாக பயணம் செய்ய அஞ்சு கின்றனர்.

இதேவேளை மதிய வேளைகளில் ஓட்டோ, 'ஹைஏஸ்' வாகனங்களில் வரும் சிலர் 'அந்தரங்க'ச் செயல்களைப் பகிரங்கமாகச் செய்கின்றனர்.

கடந்த வாரம் ஓட்டோ ஒன்றில் வந்த ஜோடி ஒன்று தகாத செயலில் ஈடுபட முயன்ற வேளை வீதியால் வந்த பயணிகள் சிலரால் அடித்துத் துரத்தப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இளைஞர், யுவதிகள் மயானங்களை இழி செயல்களுக்கு பயன்படுத்துவது பெரும் வேதனையளிப்பதாக முதியவர் ஒருவர் கவலை தெரிவித்தார்.

எனவே, இந்த விடயத்தில் பொலிஸார் மட்டுமல்லாது அந்தப் பிரதேச மக்கள் மற்றும் அரச அதிகாரிகள் இணைந்து இவர்களைப் பிடித்து நீதிமன்றம் ஊடாக தண்டனை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பலராலும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஓ-288)

## ஆனந்தபுரம் கிராமத்துக்கு குடிதண்ணீர் வழங்க ஏற்பாடு

**மக்களுக்கு 12 மாதங்களுக்கு குடிதண்ணீரை வழங்க வேண்டிய கட்டாய தேவை பிரதேச சபைக்கு ஏற்பட்டிருந்தது.**

குடிதண்ணீர்த் தாங்கிகளுக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் பொறுப்பேற்றுக் கொண்டதைத் தொடர்ந்து ஆனந்தபுரம் மக்களுக்குக் குடிதண்ணீரை வழங்குவதற்கான ஒழுங்குகளைப் புதுக்குடியிருப்பு பிரதேசசபைசெயலாளர் மேற்கொண்டுள்ளார்.

புதுக்குடியிருப்பு பிரதேசத்திலுள்ள ஆனந்தபுரம் கிராமம் கடற்கரையை அண்மித்து இருப்பதால் அங்கு வசிக்கும் மக்களுக்கு 12 மாதங்களுக்கு குடிதண்ணீரை வழங்க வேண்டிய கட்டாய தேவை பிரதேச சபைக்கு ஏற்பட்டிருந்தது.

இதையடுத்து அந்தக் கிராமத்தில் பத்துக்கும் மேற்பட்ட தண்ணீர்த் தாங்கிகள் வைக்கப்பட்டு பிரதேச சபையால் குடிதண்ணீர் வழங்கப்பட்டு வந்தது. அங்கு வைக்கப் பட்டிருந்த தண்ணீர்த் தாங்கிகளில் 6 தாங்கிகள் மாயமாய் மறைந்ததுடன் இரு தாங்கிகள் விஷமிகளால் சேதமாக்கப்பட்டிருந்தன. இதனால் மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த குடிதண்ணீர் பிரதேச சபையால் முற்றாக நிறுத்தி வைக்கப்பட்டது.

இது குறித்துப் பாதிக்கப்பட்ட மக்கள் புதுக்குடியிருப்பு பிரதேச செயலரின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர். தண்ணீர்த் தாங்கிகளின் குடிதண்ணீர் பாதுகாப்பை யாராவது பொறுப்பேற்க முன் வந்தால் மட்டுமே குடிதண்ணீர் வழங்கப்படும் என்று பிரதேச செயலர் தெரிவித்திருந்தார்.

அதையடுத்து கிராம அபிவிருத்திச் சங்கம் அங்கு வைக்கப்படும் தண்ணீர்த் தாங்கிகளுக்கு பொறுப்பேற்பதாக உத்தரவாதம் அளித்தமையைத் தொடர்ந்து ஆனந்தபுரம் மக்களுக்கு குடிதண்ணீர் வழங்குவதற்கான ஒழுங்குகளைப் பிரதேச செயலர் மேற்கொண்டுள்ளார். (வ-115)



பினாங்கு மாநில முதலமைச்சர் ராமசாமி

நீதிக்கான நடைபயணக்குழு

## ஈழத்தமிழர் அழிப்புக்கு முற்றுப்புள்ளி வைப்போம்

### *நடை பயண வீரர்களை வாழ்த்தியபோது பினாங்கு மாநில முதலமைச்சர் தெரிவிப்பு*

கோலாலம்பூர், பெப்.10

ஈழத்தமிழர்கள் நிலம் பறிக்கப்பட்டு அவர்கள் அழிக்கப்படுகிறார்கள். இதற்கு நாம் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றும் சர்வதேச சமூகத் திடம் நீதி கேட்டு ஐ.நா நோக்கி பயணம் செய்யும் வீரர்களுக்கு மலேசியாவில் உள்ள பினாங்கு மாநில முதலமைச்சர் பேராசிரியர் ராமசாமி வாழ்த்துத் தெரிவிக் கின்றார்.

எதிர்வரும் மார்ச் மாதம் 10 ஆம் திகதி நடைபெற இருக்கும் மாபெரும் பேரணிக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

தமிழரின் உரிமைக் குரலாக 11 ஆம் நாளாக ஐ.நா. நோக்கி தொடருகின்ற நீதிக்கான நடை பயணம் கடந்த பெப்ரவரி மாதம் 29 ஆம் திகதி நெதர்லாண்ட் நாட்டில் டென் ஹாக் நகரில் அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்துக்கு முன்பாக ஆரம்பமான ஐ.நா. நோக்கி நீதிக்கான நடைப் பயணமானது வெற்றிகரமாக நேற்றுமுன்தினம் பெல்ஜியத்தை வந்தடைந்தது..

நடைபயணத்தில் ஈடுபட்டுள்ள மனித நேயப்பணி யாளர்களுக்கு தனது ஆதரவை வழங்கும் முகமாக சீரற்ற காலநிலையான போதும் பிரிட்டனில் இருந்து வருகை தந்து தமிழ் இன உணர்வாளர் ஒருவர் நடை பயணத்தில் ஈடுபட்டு தனது ஆதரவை வழங்கியுள்ளார்.

பெல்ஜியம் வாழ் தமிழ் உறவுகளும் நடைபயணத்தை முன்னெடுக்கின்ற மனித நேயப்பணி யாளர்களை உரிமையுடன் வரவேற்று அவர்களை உபசரித்து தமது தார்மிக ஆதரவை வழங்குகின்றனர். (வ)

## ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் பால்மாவுக்குத் தட்டுப்பாடு

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் பால்மாவுக்கு இன்னமும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

ஒட்டுசுட்டான், கற்சிலைமடு, முத்துஐயன்கட்டு பண்டார வன்னி பேராறு, மன்னா கண்டல், கெருடமடு ஆகிய இடங்களிலுள்ள நிலையங்களில் பால்மாக்களுக்குத் தட்டுப்பாடு நிலவி வருவதால் இந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் முல்லைத்தீவு செல்ல வேண்டியுள்ளது.

பால்மாக்களின் விலை உயர்த்தப்பட்ட போதிலும் அவற்றுக்குத் தட்டுப்பாடு காணப்படுகின்றது.

இதேவேளை பால்மாக்களின் விலை உயர்த்தப்பட்டுள்ள போதிலும் பாலின் கொள்வனவு விலை உயர்த்தப் படவில்லை என கால் நடையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு கறவை மாடுகள் வழங்கப்பட்ட போதிலும் பாலைக் கொள்வனவு விலையில் மாற்றம் இல்லை.

இதனால் தாம் பாதிக்கப்படுவதாகவும் கால்நடை வளர்ப்போர் கூறுகின்றனர்.

அத்துடன் கிராமம்தோறும் பால் கொள்வனவு நிலையங்களை ஆரம்பிக்க வேண்டும் எனவும் தெரிவித்த அவர்கள் தற்போதைய விலைவாசி உயர்வினைக் கருத்தில் கொண்டு பாலின் விலையை உயர்த்த வேண்டுமெனக் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-500)


### மரண அறிவித்தல்

### திரு ஸ்ரான்லி சொலமன்

**(முன்னாள் ஆங்கில ஆசிரியர் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி)**



உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திரு. ஸ்ரான்லி சொலமன் (முன்னாள் ஆங்கில ஆசிரியர் - உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி) அவர்கள் நேற்று (09.02.2014) ஞாயிற்றுக் கிழமை கர்த்தருக்குள் நித்திரை யடைந் தார்.

அன்னார் வண கலாநிதி டேவிட் சதானந்தன் சொலமன் (அதிபர் - யாழ். / வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி), திருமதி சாந்தவதனிஜபார் (சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் யாழ். பிராந்திய உள்ளூராட்சித்திணைக்களம் ) ஆகியோரின் அன்புத்தந்தையும் திருமதி காமினி சொலமன், திரு. எம்.ஐ.ஏ. ஜபார் (நிபுணத்துவ ஆலோசகர் DIA நிறுவனம்) ஆகியோரின் அன்புமாமனும் சப்திகாஜபார் (வாடிக்கையாளர் தொடர்பு அதிகாரி LB பினான்ஸ் நிதி நிறுவனம் -சுன்னாகம் கிளை), வியாபகன், ஜபார், ஆஷா டிவினியா சொலமன், டிலாந்தன் சொலமன், டினோசன் சொலமன் ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் அவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று திங்கள் மாலை 4.00 மணிக்கு துவாளி வீதி இமையாணன் மேற்கு உடுப்பிட்டியில் நடைபெற்று நல்லடக்கம் உடுப்பிட்டி தென்னிந்தியதிருச்சபை சேமக்காலையில் நடைபெறும்.

இந்தஅறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : D.S. சொலமன்

( அதிபர் யாழ்./ வட்டு யாழ்ப்பாணக்கல்லூரி)

உடுப்பிட்டி



### பிற்போடப்பட்டுள்ளது

இன்று நடைபெறவுள்ள யாழப்பாணக்கல்லூரியின் ஆரம்பப்பிரிவு விளையாட்டுப்போட்டி தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணக்கல்லூரி வட்டுக்கோட்டை அதிபர்



### மரண அறிவித்தல்

### பாலசிங்கம் கருணாகரன் (கருணா)



கொட்டடி மீனாட்சி அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், ஆனைக் கோட்டை குருசுமதவடியை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் கருணாகரன் (கருணா) நேற்று முன் தினம் (08.02.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் கமலவதனி (பிரான்ஸ்) தம்பதியரின் அன்பு மகனும் ஸ்ரீதரன் (லண்டன்), யமேலா (ஜேர்மனி), வக்சலா (லண்டன்), அனோஸ்கரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் டொறின் (லண்டன்), அப்பன் (ஜேர்மனி), கோணேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் கவிஸ்னா (லண்டன்), கேவிஸ்னா (லண்டன்), கவின்சன் (லண்டன்), கலைக்ஸ்னா (ஜேர்மனி), திலைக்ஸ்னா (ஜேர்மனி), ஜக்சன் (ஜேர்மனி), நிவிர்தா (லண்டன்), கவிர்தா (லண்டன்), சாகிதா (லண்டன்) ஆகியோரின் அன்புமாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஆனைக்கோட்டை குருசுமதவடியில் (இன்பம்) அவரது சிறியதாயின் இல்லத்தில் இன்று (10.02.2014) திங்கட்கிழமை நடைபெற்று பூதவுடல் பி.ப.1 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:

குருசுமதவடி ஆனைக்கோட்டை குடும்பத்தினர்



### மரண அறிவித்தல்

### அந்தோனி இம்மானுவேல்



சென் ஜேம்ஸ் இளவாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திரு. அந்தோனி இம்மானுவேல் அவர்கள் நேற்று (09.02.2014) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனி சேயம்மா தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற அருட்சகோதரிஆன்மேரி, மரியபற்றிமா, ஜேம்ஸ் ஆகியோரின் பாசமிகுசகோதரனும் செல்வராசா, எட்விஸ் ரூபி ஆகியோரின் அன்புமைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு நாளை (11.02.2014) பி.ப. 3 மணிக்கு இளவாலை புனித யாகப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பூதவுடல் நல்லடக்கத்திற்காக இளவாலை யாகப்பர் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்

சி. செல்வராசா குடும்பத்தினர்



### மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை கந்தசாமி



பலாலி கிழக்கு வசாவிளானைப் பிறப்பிடமாகவும், கச்சாய் வீதி கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கந்தசாமி நேற்று (09.02.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தங்கச்சியின் அன்புக் கணவரும் மகாராசா, மனோகரராசா, மனோரஞ்சிதராணி, மனோரஞ்சிதராசா காலஞ்சென்ற விஜயராணி ஆகியோரின் அன்புத்தந்தையும் ராதா, நிருஷா, கெங்காநாதன், கஜனி ஆகியோரின் அன்புமாமனாரும் நிரஞ்சனன் (மாணவன் யா / நல்லூர் காசிப்பிள்ளை வித்தயாலயம்), கரீஷ் (மாணவன் கண்ணன் முன்பள்ளி சங்கானை) ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(10.02.2014) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொடிகாமம் கட்டை முறிச்சான் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்

கச்சாய் வீதி, கொடிகாமம் குடும்பத்தினர்

# அபிவிருத்தி குறித்த கலந்துரையாடல்

### மாநகரசபைக்கு உட்பட்ட பகுதிகளில்

யாழ்ப்பாணம், பெப்.10

யாழ்.மாநகர சபைக்கு உட்பட்ட பகுதிகளின் அபிவிருத்தி தொடர்பான முக்கிய கலந்துரையாடல் ஒன்று இன்று திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். மாநகரசபை மாநாட்டு மண்டபத்தில் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் சனசமூக நிலையங்கள் ஒப்பந்த வேலைகள் மேற்கொள்வதற்கான விடயம் மற்றும் சோலைவரி அறவீடு, சனசமூக நிலையங்களைப் பயன்படுத்தி ஊக்குவிப்புத் தொகை வழங்கல், இயங்காதுள்ள நிலையங்கள் குறித்து ஆராய்தல் உட்பட பல விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளன.

சனசமூக நிலையங்கள் தமது 2014 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபைத் தெரிவு அறிக்கையை தம்முடன் எடுத்து வருமாறு மாநகர சபை ஆணையாளர் செ.பிரணவநாதன் சனசமூக நிலைய உத்தியோகத்தர் ச.லோகசிவம் ஆகியோர் அறிவித்துள்ளனர். (வ-7)

# சட்டவிரோதமாக இரவிரவாக ஏற்றப்படும் கால்நடைகள்

### போலி ஆவணங்களுடன் வெளி மாவட்டங்களுக்கு

அச்சுவேலி, பெப்.10

யாழ்.மாவட்டத்தில் இருந்து வெளி மாவட்டங்களுக்கு ஆடு, மாடுகளை எடுத்துச் செல்லல் தடை செய்யப்பட்டுள்ளது. ஆனால் போலியான ஆவணங்களைத் தயார் செய்து பாதுகாப்பு தரப்பினரின் அனுசரணையுடன் சட்டவிரோதமான முறையில் ஆடு- மாடுகள் இரவோடு இரவாக வெளி மாவட்டங்களுக்கு ஏற்றிச் செல்லப்படுகின்றன என்று கவலை தெரிவிக்கின்றனர் கால்நடை வளர்ப்போர்.

ஒரு மாட்டை யாழ்.மாவட்டத்துக்கு வெளியே ஏற்றிச் செல்வதற்குக் கூலியாக 10 ஆயிரம் ரூபாவுக்கு மேல் அறவிடப்படுகின்றது. சட்டபூர்வ ஆவணங்களைப்போலபோலியான ஆவணங்கள் தயார் செய்யப்படுகின்றன. யாழ். மாவட் டத்தில் உள்ள நல்லின கறவைப் பசுக்கள், ஆடுகள் கொள்வனவு செய்யப்பட்டு வெளிமாவட்டங்களுக்கு ஏற்றிச் செல்லப்படுகின்றன.

> யாழ்.மாவட்டத்தில் இருந்து வாராந்தம் இரவோடு இரவாக திட்டமிட்டமுறையில் மாடுகள், ஆடுகள் ஏற்றிச் செல்லப்படுகின்றன. இதில் சிலர் திட்டமிட்ட முறையில் செயற்படுகின்றனர்.

யாழ்.மாவட்டத்தில் கால்வாய் நோய் இருப்பதாக அறிவிக்கப்பட்டதை அடுத்தும் இங்கே நல்லின கறவைப் பசு இனங்களை பாதுகாக்க வேண்டும். உள்ளூரில் பால் உற்பத்தியை பெருக்க வேண்டும் என்ற நோக்கோடும் ஆடு, மாடுகளை மாவட்டத்துக்கு வெளியே எடுத்துச் செல்வது உத்தியோகபூர்வமாகத் தடுக்கப்பட்டுள்ளது. ஆனால் யாழ்.மாவட்டத்தில் இருந்து வாராந்தம் இரவோடு இரவாக திட்டமிட்டமுறையில் மாடுகள், ஆடுகள் ஏற்றிச் செல்லப்படுகின்றன. இதில் சிலர் திட்டமிட்ட முறையில் செயற்படுகின்றனர்.

சட்டபூர்வமாக ஒரு பிரதேச செயலர் பிரிவில் இருந்து வேறு ஒரு பிரதேச செயலர் பிரிவுக்கோ அல்லது மாவட்டத்துக்கு வெளியேமாடு, ஆடுகளை எடுத்துச் செல்வதற்கு பிரதேச கால்நடை வைத்தியரின் உடற்கூற்று அறிக்கை, பிரதேச செயலரின் வழிப் பாஸ், கால்நடை கொண்டு செல்லப்படும் பிரதேசத்துக்கு உரிய அதிகாரிகளின் கோரிக்கை கடிதம் அவற்றை உள்ளடக்கி ஏற்றிச் செல்லும் வாகனத்துக்கான பொலிஸ் அனுமதி என்பன சமர்ப்பிக்க வேண்டும். குறித்த நடைமுறைகள் புறந்தள்ளப்பட்டு போலியான ஆவணங்களைத் தயாரித்து மாடு, ஆடுகளை ஏற்றிச் செல்லப்படுகின்றன. இதில் உள்ளூரில் சில குழுவினர் திட்டமிட்ட முறையில்செயற்பட்டுகாரியத்தை கச்சிதமாக நிறைவு செய்து வருவதாகக் கூறப்படு கின்றது. இதனால் யாழ்.மாவட்டத்தில் நல்லின ஆடு, மாடுகளுக்கு தட்டுப்பாடும் விலை அதிகரிப்பும் ஏற்பட்டுள்ளது என விசனம் தெரிவிக்கப்படுகின்றது. (வ-11)

# பாரவூர்திகள் பயணிக்க தடை

### மந்திகை மருத்துவமனை முன் வீதியில்

வடமராட்சி,பெப்.10

மந்திகையில் உள்ள பருத்தித்துறை அரசினர் ஆதார மருத்துவமனை முன்பாக உள்ள வீதியில் பாரவூர்திகள் பயணிக்க பிரதேச சபை தடை விதித்துள்ளது.


இந்தத் தடையை வெளிப்படுத்தும் படத்துடன் கூடிய விளம்பரப் பலகைகள் மந்திகை யாழ்ப்பாண வீதிச் சந்தியிலும், மந்திகை சாவகச்சேரி வீதிச் சந்தியிலும் நிறுவப்பட்டுள்ளன.

வைத்தியசாலை வீதி ஊடாக பாரவூர்திகள், கனரக வாகனங்கள் பயணிப்பதால் மருத்துவமனைக்கு வந்து செல்லும் நோயாளர்கள், பார்வையாளர்கள் பெரும் சிரமங்களையும், இடர்களையும் எதிர்நோக்குவதுடன் நோயாளர்களின் வாகனங்கள், அம்புலன்ஸ் வண்டிகள் பயணிப்பதிலும் சிரமங்கள் ஏற்பட்டன.

வைத்தியசாலை நிர்வாகம் சில வருடங்களுக்கு முன்னர் பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இது தொடர்பில் கோரிக்கை விடுத்திருந்தது.

இந்தக் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்ட போதிலும் குறித்த தடையை உரிய முறையில் ஏற்படுத்தவில்லை.

தற்போதுதான் பிரதேச சபை உரிய நடவடிக்கையை எடுத்துள்ளது. (வ-173)



மூடப்படாமல் திறந்த நிலையில் உள்ள வாய்க்கால்

# விரைவில் இருமாடி நிர்வாக அலகு

### கொடிகாமம் பிரதேச மருத்துவமனைக்கு

தென்மராட்சி, பெப்.10

கொடிகாமம் பிரதேச மருத்துவமனைக்கு இருமாடி நிர்வாக அலகுக் கட்டடத் தொகுதி நிர்மாணிக்கப்படவுள்ளது.

கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு விரைவில் இடம்பெறும்.

கட்டடம் அமைப்பது தொடர்பாக சுகாதாரத் திணைக்கள உயர் அதிகாரிகளும் கட்டட ஒப்பந்தகாரரும் கடந்த வெள்ளிக்கிழமை வருகை தந்து இடத்தைப் பார்வையிட்டுச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# முறைப்பாட்டைப் பதிய மறுத்தால் மேலதிகாரிகளுக்கு அறிவிக்குக

### யாழ்.பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு

வலி.வடக்கு, பெப்.10

யாழ்.மாவட்ட பொலிஸ் நிலையங்களில் பொது மக்கள் செய்யும் முறைப்பாட்டை பொலிஸார் பதிவு செய்ய மறுத்தால் பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கு அறிவிக்குமாறு யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யு.பி.விமலரத்ன கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட் டில் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட பொலிஸ் நிலையங்களில் பொலிஸார் பொது மக்கள் செய்யும் முறைப்பாடுகளை பதிவு செய்ய மறுத்து வருவதாகவும், இந்த வகையில் நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் றெக்ஷியனின் சகோதரி அச்சுறுத்தல் தொடர்பாக ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறையிடச் சென்ற போது அதனை பொலிஸார் ஏற்க மறுத்துள்ளார்கள் என்று ஊடகவியலாளர்கள் தெரிவித்தனர்.

இதற்கு பதிலளித்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பொது மக்கள் பொலிஸ் நிலையங்களில் எந்த வகையான முறைப்பாடுகளையும் பதிவு செய்யலாம். இந்த வகையில் செய்யப்படும் முறைப்பாடுகளில் ஏதாவது பொய்யான தகவல் காணப்படுமாக இருந்தால் முறைப்பாட்டாளர்களையும் பொய் முறைப்பாடு செய்தமைக்கு எதிராக கைது செய்ய முடியும். பொலிஸார் முறைப்பாடுகளை பதிவு மேற்கொள்ளாததற்கு வேறு காரணங்கள் எவையும் இருக்க முடியாது. பொது மக்கள் பொலிஸ் நிலையங்களில் செய்யும் முறைப்பாடுகளை எந்த வகையான காரணங்களையும் கூறி பதிவு செய்யாது விட முடியாது என்றும் தெரிவித்தார். (வ-86)

# மூடப்படாத கழிவு வாய்க்கால்

### பயணிப்போர் அச்சத்தில்

கைதடி, பெப்.10

கைதடி சந்திப் பகுதியில் அண்மையில் புதிதாக கட்டி முடிக்கப்பட்ட கழிவுநீர் ஓடும் வாய்க்காலின் மேற்பகுதி மூடப்படாமல் திறந்த நிலையில் இருப்பதால் வீதியால் செல்லும் பயணிகளும், வாகனங்களும் பெரும் ஆபத்துக்களை சந்தித்து வருவதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஏ-9 வீதியில் கைதடிச் சந்தியின் மேற்குப் பகுதியிலேயே இவ்வாறுபுதிதாககழிவுநீர்ஓடும் வாய்க்கால் அமைக்கப்பட்டு நீண்டகாலமாகியும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் மேற்பகுதியை மூடாது விட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கழிவு நீர் ஓடும் குறித்த வாய்க்காலின் நிலை பற்றி தாம் தெரியப்படுத்திய போதும் சம்பந்தப்பட்டோர் சீர்செய்யாது தமக்கு வேதனையளிப்பதாகவும் பலராலும் கவலை தெரிவிக்கப்படுவதனையும் காணக்கூடியதாகவுள்ளது.

எனவே, இனிமேலாவது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடிக் கவனம் எடுத்து இந்த வாய்க்காலின் மேற்பகுதியை மூடி பொது மக்களின் உயிர்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும் எனவும் பலராலும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (வ-288)

# ச.ச.நிலைய பெயரை வெற்றுப் பியர் ரின்களால் உரசி அழித்த 'குடி'மக்கள்

சாவகச்சேரி கிராம்புவில் பாலமுருகன் சனசமூக நிலையத்துக்குப் புதிதாக எழுதப்பட்ட நிலையப் பெயரை வெற்றுபியர்ரின்களால் உரசி அழித்துள்ளனர் அந்தப் பகுதி 'குடி' மக்கள்.

குறித்த சனசமூக நிலையத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினரின் கடந்த வருட பன்முகப் படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் கொள்வனவு செய்யப்பட்ட தளபாடங்கள் நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளையால் சனசமூக நிலைய முன்றிலில் வைத்து சங்க நிர்வாகிகளிடம் கையளிக்கப்பட்டன. அந்த நிகழ்வில் கலந்துகொண்ட பொதுமக்கள் நிதி சேகரித்து நிலையமுன் பகுதியில்நிலையத்தின் பெயரை எழுதுவித்தனர். இங்கு மாலை நேரத்தில் கூடும் 'குடி'மக்கள் தாங்கள் பாவித்த வெற்று பியர் ரின்களால் அந்த எழுத்துக்களை அழித்துள்ளதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். (வ-9)

# யாழ்.நகர் கனகசபை அவனியூ வீதியில் சுகாதாரச் சீர்கேடு

### *வெள்ளவாய்க்கால் மூடப்பட்டதால்*

யாழ்ப்பாணம்.பெப்.10

யாழ்.மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட சிவலிங்கப் புளியடி கனகசபை அவனியூ வீதியில் அமைந்திருந்த வெள்ள வாய்க்கால் மூடப்பட்டதால் அந்தப் பகுதியில் பெரிய அளவில் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டுள்ளதுடன் துர்நாற்றமும் வீச ஆரம்பித்துள்ளதாக பொது மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.



தேங்கி நிற்கும் அசுத்த நீர்

யாழ்ப்பாணம்- காங்கேசன் துறைக்கான வீதி அகலிப்பு நடவடிக்கையின் போது குறித்த வாய்க்கால் மூடப்பட்டதால் மழை நீர் வழிந் தோட முடியாமல் தேங்கி நிற்கிறது. இதனால் தேங்கி நிற்கும் வெள்ளத்தால் நுளம் புப் பெருக்கம் ஏற்பட்டுள்ள துடன் துர்நாற்றமும் வீச ஆரம்பித்துள்ளது.

மழை காலத்தில் இதனால் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. வீதிப்புனரமைப்பு முடிவடைந்து பல மாதங்கள் ஆகி யும் வெள்ள வாய்க்காலை திறந்து விடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

இது தொடர்பாக யாழ்.மாநகர சபைக்கு பல தடவைகள் தெரியப்படுத்தியும், எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. இந்த நிலையில் பிரதேச மக்களது நன்மை கருதி வாய்க்காலைப் புனரமைத்துத் தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-14)

# பெரும்பான்மையாக வென்றால் பிரதமர் பதவியேற்கத் தயார்

## ராகுல் காந்தி கூறுகின்றார்

புதுடில்லி, பெப்.10



ராகுல் காந்தி.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி பெரும்பான்மை வெற்றி பெற்றால் பிரதமர் பதவியை ஏற்றுக் கொள்வதற்குத் தயாராக இருக்கின்றேன் என்று தெரிவித்துள்ளார் காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் ராகுல் காந்தி.

கடந்த வார இறுதியில் ஜார்க்கண்ட் மாநிலத்தில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக ராகுல் காந்தி அங்கு சென்றிருந்தார். அங்கு அந்த மாநில காங்கிரஸ் கட்சி நிர்வாகிகளைச் சந்தித்துக் கலந்துரையாடும் போதே தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறியுள்ளதாவது,

"ஐக்கிய முற்போக்குக் கூட்டணி பெரும்பான்மை பலத்துடன் வெற்றி பெற்று, அதன் பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்னைப் பிரதமராகத் தேர்ந்தெடுத்தால் பிரதமர் பதவியை ஏற்பேன்.

தேர்தலுக்கு முன்பே பிரதமர் வேட்பாளர் அறிவிக்கப்படுவது ஜனநாயகத்துக்கு எதிரானது.

தண்டனை பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பாதுகாக்கக் கொண்டு வரப்பட்ட அவசரச் சட்டம் திரும்பப் பெறப்பட்டமை என்னால் மத்திய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்று கூறப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. அவை அனைத்தும் கட்சி உறுப்பினர்களிடம் இருந்து பெறப்பட்ட கருத்துகளின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டவை.

கூட்டணி தொடர்பாக முன்னாள் மத்திய அமைச்சர் லாலு பிரசாத்துடன் பேச்சுக்கள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை" என்று தெரிவித்துள்ளார். (ற)

# மீனவர்கள் சிறைப்பிடிப்பை இலங்கை நிறுத்த வேண்டும்

## நாராயணசாமி வலியுறுத்து



நாராயணசாமி

சென்னை, பெப்.10

தமிழக மீனவர்களை சிறைப்பிடிப்பதை இலங்கை அரசு நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று மத்திய அமைச்சர் வி.நாராயணசாமி தெரிவித்துள்ளார்.

இருநாட்டு மீனவர்களிடையே பேச்சு நடத்தி, சுமூகமான தீர்வை எட்டி ஒப்பந்தம் செய்வதற்கு இந்தியா மற்றும் தமிழக அரசுக்கு இலங்கை அரசு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்திய - இலங்கை மீனவர்களின் நீண்டகால பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் நடந்த பேச்சின் போது இருநாட்டு மீனவர்களும் எந்தெந்த பகுதிகளில், எந்தெந்த காலங்களில் மீன்பிடி தொழில் செய்வது? என்பது குறித்து இருதரப்பினருக்கிடையே ஒரு சுமுகமான உடன்பாடு எட்டப்பட்டது. பேச்சுக்கு முன்னதாக மீனவர்களையும், படகுகளையும் இலங்கை அரசு விடுவித்தது.

ஆனால் காரைக்கால் மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டார்களே தவிர, அவர்களது 8 படகுகளை இலங்கை அரசு இன்னமும் விடுவிக்கவில்லை. இலங்கையில் உள்ள இந்திய தூதரக துணை அதிகாரி குமரனை தொடர்பு கொண்டு பேசி, காரைக்கால் மீனவர்களின் 8 படகுகளையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இலங்கை அரசு தமிழக மீனவர்களை தொடர்ந்து கைது செய்வதும், படகுகளை சிறைப்பிடிப்பதும் கண்டனத்துக்குரியதாகும். இது சுமூகமான பேச்சுக்கு நல்லதல்ல.

எனவே தமிழக மீனவர்களை சிறைப்பிடிப்பதை இலங்கை அரசு நிறுத்திக்கொள்ள வேண்டும். இருநாட்டு மீன வர்களிடையே பேச்சு நடத்தி, சுமூகமான தீர்வை எட்டி ஒப்பந்தம் செய்வதற்கு இந்தியா மற்றும் தமிழக அரசுக்கு இலங்கை அரசு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை இராணுவத்துக்கும் இடையே நடைபெற்ற இறுதிக்கட்ட போரில், இலங்கை மனித உரிமைகளை மீறி உள்ளதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டியது. மேலும் இது தொடர்பாக ஐ.நா.சபையில் இலங்கைக்கு எதிராக மனித உரிமை மீறல் தொடர்பான தீர்மானத்தை அமெரிக்கா கொண்டு வந்த போது, அந்த தீர்மானத்துக்கு ஆதரவாக இந்தியா வாக்களித்தது.

தற்போது மீண்டும் கொண்டு வரப்பட உள்ள தீர்மானத்துக்கும் இந்தியா ஆதரவு அளிக்க வேண்டும் என்று தமிழகத்தில் கோரிக்கை வலுத்து வருகிறது. இதுதொடர்பாக பிரதமர் மன்மோகன்சிங் உரிய முடிவை எடுப்பார்- என்றார். (வ)

# கருணை மனுவில் தாமதம் கூடாது

மும்பை, பெப்.10

கருணை மனுக்கள் மீதான முடிவை தாமதம் செய்வது சரியானதல்ல என்று தெரிவித்துள்ளார் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி ப.சதாசிவம். மும்பையில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கருணை மனுக்கள் மீது முடிவு செய்வதில் காரணமற்ற தாமதம் கூடாது. இந்திய அரசமைப்புச் சட்டப்பிரிவு 21இன் படி தூக்குத் தண்டனை கைதிக்கும் சட்ட பாதுகாப்பு பெறும் உரிமை இருக்கிறது.

கருணை மனுக்களை ஏற்றுத் தூக்குத்தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைப்பதால், பெருங்குற்றங்கள் செய்தவர்களுக்கு சலுகை அளிக்கப்படுகிறது என அர்த்தம் இல்லை.

ஒரு தூக்குத் தண்டனை கைதிக்கு கருணை கோர உரிமை இருக்கிறது. அதை வழங்குவதா இல்லை நிராகரிப்பதா என்ற முடிவை எடுப்பதுதான் நீதிமன்றத்தின் அரசியல் சாசன கடமையாகும்." என்று தெரிவித்துள்ளார். (ற)

# 100 நாள்களில் அனைத்தும் மாறும்

## தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் நரேந்திர மோடி

குவாகத்தி, பெப்.10



அஸாமில் நரேந்திர மோடி.

இன்னும் 100 நாள்களில் அனைத்துமே மாறிவிடும் என்று தெரிவித்துள்ளார் பா.ஜ.க. பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி.

அஸாம் மாநிலத்தில் குவாகத்தியில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"அஸாம் மாநிலம் பல தலைவர்களை உருவாக்கியுள்ளது. கடந்த 22 ஆண்டுகளாக பிரதமரை தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கும் உங்களுக்கு என்ன வளர்ச்சி கிடைத்தது. நாகலாந்தை ஒப்பிடும் போது அஸாமின் வளர்ச்சி மிக மோசமாக உள்ளது. இன்னும் 100 நாள்களில் அனைத்துமே மாறிவிடும். காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருந்து அகற்றப்படும்.

இங்கிருந்து நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட பிரதமர் மன்மோகன் சிங் உங்களுக்கே ஒன்றும் செய்யாத போது நாட்டுக்கு என்ன செய்திருப்பார்? மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தில் வேலை வாய்ப்பு பெற்றவர்கள் 10,012 பேர் மட்டுமே. வேலை வாய்ப்பு இல்லாதவர்கள் 12 லட்சம் பேர் உள்ளனர்.

அஸாமில் கடத்தல், கொலை, கொள்ளை, குண்டு வெடிப்பு அதிகரித்துவிட்டது. அதைப் பற்றியெல்லாம் ஆளும் காங்கிரஸ் அரசுக்கு அக்கறையில்லை. தலைநகர் முதலீட்டு வருவாய் வடகிழக்கு மாநிலங்களில் அஸாமில்தான் மிகக் குறைவாக உள்ளது. நீங்கள் மாற்றத்தைக் கொண்டுவர விரும்பினால், நல்ல மாற்றத்தை கொண்டு வாருங்கள். பீகார் மற்றும் உத்தரப் பிரதேசத்திற்கு இணையாக வடகிழக்கு மாநிலங்களில் பா.ஜ.க. வளர்ச்சியை மேற்கொள்ளும்" என்று தெரிவித்துள்ளார். (ற)

# பலமாகும் இந்திய இராணுவம்

புதுடில்லி, பெப்.10

இந்திய இராணுவத்தை நவீனப்படுத்ததேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவித்துள்ளார் இந்திய பாதுகாப் புத்துறை அமைச்சர் ஏ.கே. அந்தோணி.

"நவீன ஆயுதங்களும், நவீன தொழில்நுட்பங்களும் கொண்டதாக இந்திய இராணுவம் மாற்றப்பட்டுள்ளது. இராணுவத்துக்குத் தேவையான உபகரணங்களை, உள்நாட்டிலேயே தயாரிப்பதற்கான முயற்சிகளுக்கு ஊக்கமளிக்கப்படுகின்றது" என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)



இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள ஜேர்மனியின் ஜனாதிபதி ஜோசிம் கொக் மற்றும் அவரது மனைவி டேனியலா தம்பதியர் பெங்களூர் சென்றிருந்தனர். அங்கு கேந்திரிய வித்யாலயா பாடசாலையைப் பார்வையிடச் சென்ற அவர்களைப் பாரம்பரிய நடன நிகழ்ச்சிகளுடன் அந்தப் பாடசாலை மாணவிகள் வரவேற்றனர். (ற)

## ஐ.நா.சபை பணியாளர் மீது சூடு

டாமாஸ்கஸ், பெப்.10
சிரியாவில் உணவுப் பொருள்களை எடுத்துச் சென்ற ஐ.நா. பணியாளர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.
சிரியாவின் மிகப் பெரிய நகரங்களில் ஒன்றான ஹோம்ஸ் நகர் சிரியக் கிளர்ச்சியாளர்கள் வசம் உள்ளது. அதனை மீட்பதற்காக கடந்த சில வாரங்களாக சிரிய இராணுவம் கடும் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றது. அதனால் அங்குள்ள மக்கள் அத்தியாவசியப் பொருள்கள் கிடைக்காது பெரும் இன்னல்களைச் சந்தித்து வருகின்றனர். அவர்களுக்கு உதவுவதற்காக மோதல்களில் ஈடுபடும் இருதரப்பினருடனும் பேச்சுக்கள் நடத்தி 3 நாள்கள் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மேற்கொண்டது.
போர்நிறுத்தத்தின் முதல்நாள் அந்தப் பகுதியில் இருந்த 80க்கும் மேற்பட்ட பொதுமக்களை ஐ.நா. பணியாளர்கள் பாதுகாப்பாக அப்புறப்படுத்தினர்.
இரண்டாம் நாளான நேற்று பொதுமக்களுக்கான உணவு மற்றும் மருந்துப் பொருள்களைக் கொண்டு சென்ற ஐ.நா. பணியாளர்களின் வாகனங்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. அதில் வாகன சாரதி ஒருவர் காயமடைந்துள்ளார்.
துப்பாக்கிச் சூடு தொடர்பாக சிரிய இராணுவமும், கிளர்ச்சியாளர்களும் ஒருவரை ஒருவர் குற்றஞ்சாட்டுகின்றனர்.
இந்தச் சம்பவத்துக்கு ஐ.நா. சபை கடுமையான கண்டனத்தை வெளியிட்டுள்ளது. (ற)





## போஸ்னியாவில் போராட்டம்

வேலையில்லாப் பிரச்சினை மற்றும் நாட்டில் மலிந்துள்ள ஊழல் என்பவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்து போஸ்னிய அரசுக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் தற்போது அந்த நாடு முழுவதும் பரவி வருகின்றது. அரச கட்டடங்களை அடித்து நொருக்கியுள்ள போராட்டக்காரர்கள் சில கட்டடங்கள் மற்றும் அரச சொத்துக்களுக்குத் தீ வைத்துள்ளனர். அதையடுத்துப் பொலிஸாருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையே மோதல்கள் ஏற்பட்டுள்ளன. அதில் 56 பேர் காயங்களுக்குள்ளாகியுள்ளனர். சமூக வலைத்தளங்கள் மூலம் போராட்டங்களைத் தீவிரப்படுத்துமாறு போராட்டத்தில் ஈடுபடுவோர் அழைப்பு விடுத்துள்ளனர். (ற)

## ஸ்பெயின் இளவரசி நீதிமன்றில் முன்னிலை

லண்டன், பெப்.10
ஸ்பெயின் இளவரசி கிறிஸ்டினா தம் மீதான ஊழல் முறைகேடுகள் தொடர்பாக நீதிமன்றில் முன்னிலையாகி விளக்கமளித்துள்ளார்.
இளவரசிசார்பாகமுன்னிலையாகியிருந்த வழக்கறிஞர்கள், "இளவரசி நீதிமன்றம் முன்வைத்த அனைத்து கேள்விகளுக்கும் பதிலளித்து, முழு ஒத்துழைப்பு தந்தார்" என்று தெரிவித்துள்ளனர்.
ஸ்பெயின் மன்னாரின் இளைய மகளான கிறிஸ்டினா மற்றும் அவரது கணவர் மீது வரி ஏய்ப்பு மற்றும் பண மோசடி வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. அதனால் அரச குடும்பத்தின் மீது பொதுமக்கள் மத்தியில் அதிருப்தி ஏற்பட்டுள்ளது. அண்மையில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில், பொதுமக்களிடையே அரச குடும்பத்தினர் மீதான மதிப்பு சரியத் தொடங்கியிருப்பது தெரியவந்துள்ளது. (ற)

# அட்லாண்டிக் பகுதியில் ஈரானின் போர்க் கப்பல்

தெஹ்ரான், பெப்.10
அமெரிக்க கடல் எல்லைக்கு மிக அருகில்அமைந்துள்ளஅட்லாண்டிக் கடற்பகுதிக்கு ஈரான் தனது போர்க் கப்பல்களை அனுப்பியுள்ளது. ஈரானின் வடக்குப் பிராந்தியக் கடற்படை தளபதி அஃப்சின் ரிஜாயி ஹடாட்டை மேற்கோள்காட்டி இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.
இதுகுறித்து மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,
"அட்லாண்டிக் கடற்பகுதிக்கு ஈரான் நாடு தனது போர்க் கப்பல்களை அனுப்பியுள்ளது. தென்னாபிரிக்கா அருகே உள்ள கடல்பகுதி வழியாக அந்தக் கப்பல்கள் சென்று கொண்டிருக்கின்றன. அமெரிக்க கடல் எல்லைப்பகுதிக்கு அருகில், ஈரானின் போர்க் கப்பல்கள் செல்வது இதுவே முதல்முறையாகும். ஈரான் கடற்பகுதி அருகே அமெரிக்க போர்க் கப்பல்கள் நிறுத்தப்பட்டுள்ளன. அதற்கு பதிலாக தனது போர்க் கப்பல்களை ஈரான் அனுப்பியுள்ளது" என்று கூறப்பட்டுள்ளது.
ஈரானின் அணு செறிவூட்டல் செயற்பாடுகள் குறித்துச் சர்வதேச நாடுகளுடன் பேச்சுக்கள் நடைபெற்றுவரும் நிலையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தத் தகவல் குறித்து ஈரான் அரச தரப்பிலோ அல்லது அமெரிக்க இராணுவத் தலைமையகமோ கருத்துக்கள் எதனையும் வெளியிடவில்லை. (ற)

## இணையத்தள கட்டுப்பாடு: எதிர்த்து மக்கள் போராட்டம்

*துருக்கியில் மீண்டும் பதற்றம்*

அங்காரா, பெப்.10
துருக்கியில் இணையத்தளங்களைப் பயன்படுத்துவது தொடர்பான புதிய சட்டத் திருத்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்துப் பெரும் ஆர்ப்பாட்டங்கள் வெடித்துள்ளன.
துருக்கியில் இணையம் பயன்படுத்துவது தொடர்பாகக் கடந்த வாரம் புதிய சட்டத்திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. அதையடுத்து ஏராளமான இணையத்தளங்களின் இயக்கம் முடக்கப்பட்டது.
இது அந்நாட்டு மக்களிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. புதிய சட்டத் திருத்தத்தைத் திரும்பப் பெறக் கோரி இஸ்தான்புல்லில் ஆயிரக்கணக்கான மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
"பிரதமர் ரீசெப் தய்யிப் எர்டோகன் தனது ஊழல்களை மறைப்பதற்காகவே இத்தகைய சட்டத்திருத்தத்தை நடைமுறைப்படுத்தியுள்ளார்" என்று மக்கள் கூறுகின்றனர்.
இஸ்தான்புல்லில் ஆயிரக் கணக்கில் கூடிய மக்களைக் கலைப்பதற்கு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டபோதும் மக்கள் தொடர்ச்சியாக அங்கு போராட்டங்களில் ஈடுபட்டனர். துருக்கிப் பிரதமர் எர்டோகனுக்கு எதிராகக் கடந்த ஆண்டு ஏற்பட்ட மக்கள் போராட்டங்களில் சமூக வலைத்தளங்கள் பெரும் பங்காற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற)

## மதீனாவில் . தீ விபத்து: 15 பேர் சாவு

ரியாத், பெப்.10
சவூதி அரேபியாவில் உள்ள மதீனா நகரில் இடம்பெற்ற தீ விபத்தொன்றில் புனித யாத்திரை சென்றிருந்த 15 பேர் உடல் கருகி உயிரிழந்துள்ளனர்.
மதீனா நகரில் உள்ள விடுதி ஒன்றிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. அதில் சிக்கி மதீனாவுக்குப் புனித யாத்திரை சென்றிருந்த 15 பேர் உயிரிழந்துள்ளதுடன் 130 பேர் காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
குறித்த தீ விபத்து மின்கசிவால் ஏற்பட்டது என்று முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் கூறியுள்ளனர். (ற)



தென் அமெரிக்க நாடான பொலிவியாவில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கால் இதுவரை 38 பேர் உயிரிழந்துள்ளனர். பல்லாயிரக்கணக்கானவர்கள் இடம்பெயர்ந்துள்ளனர். கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் முதல் தொடர்ச்சியாகப் பெய்துவரும் கனமழை காரணமாகவே அங்கு கடும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. வெள்ளப் பெருக்கால் பெருமளவு மக்கள் இடம்பெயர்ந்துள்ளதுடன், 17 ஹெக்ரெயருக்கும் அதிகமான விளைநிலங்கள் அழிவடைந்துள்ளன. (ற)

## ஷரீயத் சட்டத்துக்காகவே பாக். அரசுடன் பேச்சுக்கள்

*தலிபான் அமைப்பு கூறுகின்றது*



*பேச்சுக்களின் பின்னர் தலிபான் அமைப்பினரால் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பு*

இஸ்லாமாபாத், பெப்.10
பாகிஸ்தானில் ஷரீயத் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நோக்கத்துடனேயே அந்நாட்டு அரசுடன் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளோம் என்று தெரிவித்துள்ளார் தெஹ்ரிக்-இ-தலிபான் அமைப்பின் செய்தி தொடர்பாளரான ஷஹிதுல்லா ஷஹித்.
இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்,
"ஷரீயத் சட்டத்தை பாகிஸ்தானில் நடைமுறை வேண்டும் என்பதற்காகவே அரசுக்கு எதிராக நாங்கள் தாக்குதல் நடத்தி வருகின்றோம். எங்கள் கோரிக்கை ஏற்கப்படுமானால், அரசுக்கு எதிரான தாக்குதல்களை நாங்கள் நிறுத்திக் கொள்ளத் தயாராக இருக்கின்றோம். கடந்த வியாழக்கிழமை அரச தரப்பினருடன் முதற்கட்டப் பேச்சுக்கள் நடைபெற்றன. அப்போது நாட்டில் அமைதியை நிலை நாட்ட அரசுத் தரப்பில் சில நிபந்தனைகள் விதிக்கப்பட்டன. அதுகுறித்து நாம் ஆலோசித்து வருகின்றோம்." என்று தெரிவித்துள்ளார்.
அதேவேளை, பாகிஸ்தானின் அரசியல் அமைப்புச் சட்டத்தை அடிப்படையாக கொண்டே பேச்சுக்கள் அமைய வேண்டும் என்று அரச தரப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ற)

# ஸ்கொட்லாந்து மக்கள் பிரிட்டனுடனேயே தொடர்ந்தும் இணைந்திருக்க வேண்டும்

*பிரிட்டன் பிரதமர் கமரூன் கோரிக்கை*

லண்டன், பெப்.8
ஸ்கொட்லாந்து மக்கள் பிரிட்டனுடனே தொடர்ந்தும் இணைந்திருக்கவேண்டும்என்றுவேண்டுகோள் விடுத்துள்ளார் பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன்.
ஸ்கொட்லாந்து தனிநாடாக சுதந்திரம் பெற வேண்டுமா என்பதைத் தீர்மானிப்பதற்கான மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பு இந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள நிலையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கும்போது,
"ஸ்கொட்லாந்து பிரியவேண்டும் என்று தீர்மானித்தால், முழு ஐக்கிய இராச்சியமும் 'மோசமாக சுருங்கிவிடும்'. அதேபோல, நாடு ஐக்கியப்பட்டிருக்கவேண்டும் என்பதை ஆதரிப்பவர்கள் இந்த விடயத்தில் 'அலட்சியமாக' இருந்துவிடக் கூடாது. உலகில் பெரிய பங்கு வகிக்கும் நாடொன்றின் அங்கமே ஸ்கொட்லாந்து. ஒட்டுமொத்த 63 மில்லியன் (6.3 கோடி) பேரான நாம் எல்லோரும் இந்த வாக்கெடுப்பால் கடுமையாகப் பாதிக்கப்படுவோம்" என்று தெரிவித்துள்ளார்.
ஆளும் ஸ்கொட்லாந்து தேசியக் கட்சி வாக்குறுதி அளித்தபடி, எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 18ஆம் திகதி நடக்கவுள்ள மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பில், ஸ்கொட்லாந்தில் வாழும் 16 வயதுக்கு மேற்பட்ட சுமார் 40 லட்சம் பேர் வாக்களிக்கவுள்ளனர். (ற)

## நொருங்கியது அமெரிக்க 'டிரோன்'

வொஷிங்டன், பெப்.10
அமெரிக்காவின் நியூ மெக்ஸிகோ பகுதியில் பயிற்சியில் ஈடுபட்ட அமெரிக்க ஆளில்லா விமானம் ஒன்று வீழ்ந்து நொருங்கியுள்ளது. ஹலோமேன் விமானப் படைத் தளத்தில் இருந்து பறப்பை மேற்கொண்ட இந்த விமானம் நியூ மெக்ஸிகோ தேசியப் பூங்காவில் உள்ள வெள்ளை மணல் நினைவுச் சின்னத்தின் மீது வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது என்று கூறப்படுகின்றது. (ற)

## நிரந்தர கட்டடம் அமைக்க நிதி வழங்குக

சொந்தக் கட்டடம் இல்லாமல் வாடகை வீடுகளில் மாறி மாறி இயங்கிவரும் கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துக்கு நிரந்தரக் கட்டடம் அமைக்கும் முயற்சியில் மேற் படி சமாசம் அதற்கு நிதியுதவி வழங்கு மாறு பொது நிறுவனங்களைக் கோரியுள்ளது.

கண்டாவளைப் பிரதேசத்தி லுள்ள கரைச்சி வடக்கு கடற் றொழிலாளர் கூ.சங்கங் களின் சமாசத்துக்கு புளியம் பொக்கணையில் சொந்தக் காணி இருந்த போதிலும் கட்ட டம் அமைக்கப் போதியளவு நிதி இல்லாமையால் கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக வாடகை வீடுகளில் மாறி மாறி இயங்கி வருகின்றது. (வ-115)



ஜப்பானிய தொண்டு நிறுவனமாக யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தில் உதவித்திட்டங்களை வழங்கி வரும் பாசிக் நிறுவனம் கொக்குத்தொடுவாய் வடக்கு, கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் மத்தி ஆகிய கிராமங்களுக்கு 40 லட்சம் ரூபா பெறுமதியான பொதுக்கட்டடத்தை அமைத்து வழங்க உள்ளது. இதன் ஆரம்ப கட்ட நிகழ்வாக கொக்குத் தொடுவாய் மத்தியில் வியாழனன்று அடிக்கல் நடும் விழா இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பாசிக் நிறுவன இணைப்பா ளர் பிறிட்டோ ஜொனி அஜித், திட்ட இணைப்பாளர் செல்வி புமி இற்றோ மற்றும் கொக்குத்தொடுவாய் மத்தி, வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் கள். கடற்றொழில் சங்க தலைவர் அமலநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். (வ-10)

## கடற்றொழிலாளர் பிள்ளைகளின் கல்வியை ஊக்குவிக்க உதவி

கடற்றொழிலாளர்களின் பிள் ளைகள் மத்தியில் கல்வியை ஊக்குவிக்க முன்வந்துள்ள கரைச்சி வடக்கு கடற்றொழி லாளர் கூட்டுறவுச் சங்கங்க ளின் சமாசம் குறிப்பிட்ட பரீட்சைகளில் சித்தியடையும் மாணவர்களுக்கு நிதியுதவி வழங்கி வருகிறது.

இதேவேளை, உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகத்துக்குத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர் ஒருவருக்கு 25 ஆயிரம் ரூபாவை வழங்கிய குறித்த சமாசம் சாதா ரண பரீட்சையில் சித்தியடைந்து உயர்தர வகுப்புப் படிப்பதற்குத் தகுதியுள்ள மாணவர்களுக்கு 5 ஆயிரம் ரூபா வீதம் வழங்கு வதற்கான ஒழுங்குகளையும் மேற்கொண்டுள்ளது. (வ-115)

## குழாய்க் கிணறுகளால் மாசடையும் குடிதண்ணீர்

வலி.வடக்கு, பெப்.10

யாழ்.மாவட்டத்தில் குழாய்க் கிணறுகள் அமைக்கும் நடவடிக்கைகள் சீரற்ற முறையில் மேற் கொள்ளப்பட்டுவருவ தனால் பெரும் சீர்கேடுக ளுக்கு குடிதண்ணீர் உள்ளாக் கப்பட்டு வருவதாக சூழலிய லாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

யாழ்.மாவட்டத்தில் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் யாழ். மாவட்ட செயலகத்தில் இடம் பெற்ற சூழலியல் தொடர்பான கூட்டத்தில் குழாய் கிணறுகள் எதிர் காலத்தில் அமைப்பதாக இருந்தால் நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினரின் அனுமதி பெறப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப் பட்டுள்ளது.

குறித்த தீர்மானம் வெள்ளை காகிதத்தில் தீர்மானமாக இருக் கக் கூடியதாக யாழ்.மாவட் டத்தில் தொடர்ந்தும் நாளாந் தம் குழாய் கிணறுகள் அமைக் கும் பணிகள் யாருடைய முன் அனுமதியும் இன்றி நடை பெற்று வருகின்றமையும் தொடர் கதையாகவே காணப்படுகின்றது.

இதனையிட்டு உரியவர்கள் உரிய நடவடிக்கைகளை மேற் கொண்டு யாழ்.மாவட்டத்தின் குடிதண்ணீர் பிரச்சினை உட்பட நிலத்தடி நீர் உவர் நீராக மாறுவதைத் தடுக்க உரிய நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும் என பலரும் வலியுறுத்துகின்றனர். (வ-86)

# திட்டமிடப்பட்ட வகையில் அரசினால் அபகரிக்கப்படும் தமிழர் நிலங்கள்

### *தடுத்து நிறுத்த சிவசக்தி ஆனந்தன் எம்.பி.கோரிக்கை*

தமிழர் நிலங்கள் இன்று திட்ட மிட்ட ரீதியில் மிகவும் சூட்சு மமான முறையில் அரசினால் அபகரிக்கப்பட்டு வருகின்றன. இதனைத் தடுத்து நிறுத்த சர்வதேச சமூகம் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரி வித்துள்ளார். வவுனியா வடக்கில் இடம் பெற்று வரும் நிலஅபகரிப்புத் தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையி லேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது:-

போரின்போது தமிழர் பிரதே சங்களை விடுவிப்பதாகக் கூறி ஆக்கிரமிப்பு நடவடிக்கை களை மேற்கொண்ட அரசு போர் முடிவடைந்து ஐந்து ஆண்டுகள் நிறைவடையும் வேளையிலும் தொடர்ந்து நில அபகரிப்புக்களை நன்கு திட்ட மிட்டு சூட்சுமமான முறையில் மேற்கொண்டு வருகின்றது.

அந்த வகையில், வவுனியா வடக்கு, நெடுங்கேணிப் பிரதேசத்தின் நைனாமடு - ஆனந்த புளியங்குளம் ஆகிய இரு கிரா மங்களுக்கும் இடைப்பட்ட பிரதான வீதியோரத்தில் 500 ஏக்கர் காணி பொம்பே சிலோன் கம்பனிக்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் விசேட உத்தரவின் பெயரில் பண்ணை அமைப்பதற்காக வழங்கப்பட்டு நிலஅளவை செய்யப்பட்டுள்ள துடன் காடழிப்புக்கான ஏற்பாடு களும் இடம்பெற்றுவருகின்றன.

இது தவிர, கரும்புச் செய்கைக் காக 1,500 ஏக்கர் காணியை வவுனியா வடக்குப் பகுதியில் சுவீகரிப்பதற்கான முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன. எமது மக்கள் இன்று தொழில் இன்றி நிரந்தர வீடு இன்றி அல்லல்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இன்னும் ஒரு பகுதி மக்கள் குடியிருப்பதற்கு நிலம் இன்றி மற்றவர் காணிகளில் குடியிருக் கின்றனர். அவ்வாறு அவர்கள் துன்பத் தில் ஆழ்ந்தி ருக்க இன்று ஒவ்வொரு பயிர்ச்செய்கையின் பெயர்க ளைக் கூறி தமிழர் பகுதிகளில் நில அபகரிப்புக்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளன.

நெடுங்கேணி-முல்லைத்தீவு வீதியில் தண்டுவான் என்னும் கிராமத்தின் வனஇலாகாவுக்குச் சொந்தமான காட் டுப்பகுதியில்பிரதான வீதியுடன் இணைத்து வீதி அமைப்புப் பணியும் இடம்பெற்று வருகிறது. இந்த வீதி காட்டுப் பிரதே சத்திற்குள் ஏன் அமைக்கப்படு கிறது என்ற சந்தேகம் ஏற்பட் டுள்ளது. இது சிங்களக் குடியேற்றம் ஒன்றை நிறுவுவ தற்கான நடவடிக்கையாக இருக்கலாம் என அந்தப் பகுதி மக்கள் அச்சம் அடைந் துள்ளனர்.

ஒரு பிரதேசத்தின் காணி வழங் கும் அதிகாரம் பிரதேச செயல ருக் குரியது. ஆனால் இன்று வடபகு தியில் இடம்பெறு கின்ற காணி அபகரிப்புக்கள் தொடர் பாக அவர்களுக்குத் தெரியப்படுத்தப் பட வில்லை. அவர்களுக்கு என்ன நடக்கிறது என்பதே தெரியவில்லை. தெரிவித் தாலும் கூட அவர்கள் காணியை வழங்கு மாறு நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள்.

இவ்வாறு பல காணி கள் திட்ட மிட்ட ரீதி யில் அபகரிக்கப்பட்டு வருகிறது.

இது தொடர்பாக பேசு வதற்கு அரச அதிகாரி கள் பயப்படுகிறார் கள். போரால் பாதிக் கப்பட்ட மக்களுக் கான வாழ்வாதாரம், பொருளாதாரம் சார்ந்த பல பிரச்சினைகளைத் தீர்க்க முடியாமல் நிற் கின்ற நேரத்தில், இவ் வாறு திட்ட மிட்ட அப கரிப்பை ஏற்படுத்து வது தமிழ் மக்கள் மத்தியில் கடும் விச னத்தை ஏற்படுத்தியுள் ளது. இந்த நில அப கரிப்புக்கள் தொடர் பாக சர்வதேச சமூ கம் விரைந்து நடவ டிக்கை எடுப்பதுடன் பறிபோகும் தமிழர் நிலப் பரப்பைத் தடுக்க வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளது. (56)


சரவணை திருவருள் மிகு நாவலடி
ஸ்ரீ ஞானவைரவர் சுவாமி திருக்கோயில்
புனராவர்த்தன பிரதிஷ்டா அஷ்டபந்தன
பஞ்ச குண்டபக்ஷ
மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் ( பெரும் சாந்தி விழா)





காலம்: 12.02.2014
புதன்கிழமை

நேரம்: காலை 9.10 முதல் 9.40
வரையுள்ள மீனலக்கினம்

வைரவப்பெருமான் அடியார்களே !
ஈழமணித்திருநாட்டின் வடபால் சைவ மக்கள் செறிந்து வாழ்கின்ற ஊராம் சரவணைப்பதியிலே காவல் தெய்வமாக இருந்து எம்மையெல்லாம் பரிபாலித்துக்கொண்டிருக்கின்ற ஞான வைரவசுவாமிப் பெருமானுக்கும் மற்றும் விநாயகர் பாலமுருகப் பெருமான் உற்சவமூர்த்தி வைரவசுவாமி முதலிய பரிவார மூர்த்திகளுக்கும் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சுந்தர மணிக் கோபுரத்துக்கும் நிகழும் மங்கள கரமான விஜய வருஷம் தைத்திங்கள் 30 ஆம் நாள் (12.02.2014) புதன்கிழமை வளர்பிறை திரயோதசித் திதியும் புனர்பூச நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய காலை 9.10 மணிக்கு மேல் 9.40 இற்குள் வரும் மீனலக்கின சுபமுகூர்த்த வேளையில் "மஹாகும்பாபிஷேகம்" நடைபெற திருவருள் கைகூடி யிருப்பதால் அன்பர்கள் அடியார்கள் அனைவரும் அத்தருணமும் அதற்கு முன்னும் பின்னும் நடைபெறும் கிரியைகளில் கலந்து கொண்டு ஞானவைரவர் சுவாமிப் பெருமானின் திருவருள் பெற்று சீரோடும் சிறப்போடும் வாழ்வார்களாக.....!

கிரியாகால விவரம்

இன்று (10.02.2014) திங்கட்கிழமை காலை 6 மணி - கிரியைகள் ஆரம்பம்

நாளை (11.02.2014) செவ்வாய்க்கிழமை காலை 8 மணி - 3 மணி எண்ணெய் காப்பு சாத்துதல்

நாளை மறுதினம் (12.02.2014) புதன்கிழமை - காலை 7 மணிக்கு கும்பாபிஷேககிரியைகள் ஆரம்பமாகி மு.ப. 11 மணிக்கு பிரதிஷ்டா பிரதமகுருகிரியா பூஷணம்

கிரியாதிலகம் வாமதேவ சிவாச்சாரியார் சிவஸ்ரீ கா.புவனேஸ்வரக்குருக்கள் (நாரந்தனை சரவணை கர்ணந்தோட்டம் பிரதமகுரு) அவர்களின் தலைமையில் மஹா கும்பாபிஷேகம் நடைபெற்று அதனை தொடர்ந்து மகேஸ்வர பூசை (அன்னதானம்) நடைபெறும்.

குறிப்பு:
கும்பாபிஷேகத்தை தொடர்ந்து 12 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்று 23.02.2014 அன்று நிறைவுபெறும். அடியார்கள் அபிஷேகத்துக்குரிய பொருள்களை உபகரித்து பெருமானின் திருவருளை மென்மேலும் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் வேண்டு கின்றோம்.

25.02.2014 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு 108 சங்காபிஷேகம் நடைபெறும்.

இறைத்திருத்தொண்டில்,
செல்லையா சிவபாதசுந்தரம் குடும்பத்தினர்
அறங்காவலர்
சரவணை மேற்கு, வேலணை





திருவருள்மிகு நவாலியூர்
களையோடை கண்ணகை அம்மன் ஆலய
புனராவர்த்தன பிரதிஷ்டா
மஹா கும்பாபிஷேகம்

ஆரம்பம் : 12.02.2014 நிறைவு : 26.02.2014

நிகழும் மங்களகரமான விஜய வருஷம் தைமாதம் 30 ஆம் நாள் (12.02.2014) புதன்கிழமை புனர்பூசமும் சித்தயோகமும் கூடிய காலை 9 மணி தொடக்கம் 10.10 மணி வரை மீனலக்கினமும் குருகால ஒரையும் கூடிய சுபமுகூர்த்த வேளையில் பெருஞ்சாந்தி எனப் போற்றும் அருள் விழாவாகிய மஹாகும்பாபிஷேகம் நடைபெற திருவருள் பாலித்துள்ளது அத்தருணம் அதற்கு முன் பின் நடைபெறும் கிரியைகளிலும் கலந்து அம்பாளின் அருள் பெற்று உய்யும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

களையோடை கண்ணகைஅம்மன்ஆலயம்,
நவாலி.

இவ்வண்ணம்
ஆலயத்திருப்பணிச்சபையினர்



கோப்புப்படம்

## நெற் பயிர்களுக்கு நீரை பாய்ச்ச முடியாத நிலை

*குளத்தின் புனரமைப்பு பூர்த்தியாகாததால்*

முல்லைத்தீவு, பெப்.10
ஒட்டுசுட்டான் பிரதேசத்திலுள்ள கூளாமுறிப்புக் குளத்தின் புனரமைப்புப் பணிகள் பூர்த்தியாகாத நிலையில் காணப்படுவதால் நெற்பயிர்களுக்கு குளத்திலிருந்து நீரைப் பாய்ச்ச முடியாத நிலையில் விவசாயிகள் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
மழை பெய்யாததால் இந்தப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பயிர்ச் செய்கைகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.
இந்த நிலையில் கூளா முறிப்புக் குளத்தின் கீழான நெற்பயிர்களையாவது காப்பாற்றி விடலாமென்ற நம்பிக்கையில் விவசாயிகள் இருந்தனர்.
ஆனால் குளத்தின் வாய்க்கால்களின் புனரமைப்புப் பணிகள் பூர்த்தியாக்கப்படாததால் குளத்திலிருந்து நெல் வயல்களுக்கு நீரைப் பாய்ச்ச முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.
இதனால் நெற் பயிர்கள் நீரில்லாது அழியும் நிலை ஏற்பட்டுள்ளது.
வவுனியாவைச் சேர்ந்த நிறுவனம் ஒன்று குளத்தின் புனரமைப்புப் பணிகளைப் பொறுப்பேற்றிருந்தது. இந்த நிறுவனம் உள்ளூர் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தி தனது பணிகளை மேற்கொண்டது. இவர்களுக்கான கொடுப்பனவுகளும்நிலுவையில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இங்குள்ள உயரதிகாரிகள் குறித்த நிறுவனத்துடன் தொடர்புகளை மேற்கொண்டு குளத்தின் புனரமைப்புப் பணிகளை விரைவில்பூர்த்திசெய்யவேண்டுமென விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
(க-500)

# புத்தர் சிலையை நிறுவும் ஏற்பாடுகள் முழு வீச்சில்

*முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில்*

முள்ளியவளை, பெப்.10
முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் புத்தர் சிலையொன்றை நிறுவுவதற்கான ஏற்பாடுகள் பெருமெடுப்பில் இடம்பெறுவதாகத் தெரிய வந்துள்ளது.
தற்போது முள்ளியவளை பொலிஸ் நிலையம் தனியாரின் காணியொன்றில் முல்லைத்தீவு- மாங்குளம் வீதியில் இயங்கி வருகின்றது.
இதன் ஒரு பகுதியிலேயே போயா தினமான எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை புத்தர் சிலையொன்றை நிறுவுவதற்குத் திட்டமிடப்பட்டு அதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிகின்றது.

**ஒட்டுசுட்டான் போன்ற தூர இடத்துக்குச் சென்று வருவதில் ஓட்டோ உரிமையாளர்கள் தயக்கம் காட்டுவதாக ஓட்டோ சங்க வட்டாரங்களிலிருந்து தெரிய வந்துள்ளது.**

மேலும் ஒட்டுசுட்டானிலிருந்து புத்தர் சிலையை ஊர்வலமாக எடுத்து வருவதற்கான ஏற்பாடுகளும் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதேவேளை நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு ஓட்டோ சங்கத்தினரை அழைத்து முள்ளியவளை பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி ஒட்டுசுட்டானிலிருந்து புத்தரின் சிலையை ஊர்வலமாக எடுத்து வரும் போது அந்த ஊர்வலத்தில் ஓட்டோக்கள் அனைத்தும் கலந்து கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொண்டதாகவும் ஆனால் ஒட்டுசுட்டான் போன்ற தூர இடத்துக்குச் சென்று வருவதில் ஓட்டோ உரிமையாளர்கள் தயக்கம் காட்டுவதாகவும் ஓட்டோ சங்க வட்டாரங்களிலிருந்து தெரிய வந்துள்ளது.
மேலும் பொலிஸாரின் ஒத்துழைப்புத் தமக்குத் தேவையாக உள்ளதால் புத்தரின் சிலை எடுத்து வரும்போது குறுகிய தூரத்தில் வைத்து ஊர்வலத்தில் கலந்துகொள்வதில் ஆட்சேபனை இல்லையென ஓட்டோ உரிமையாளர்கள் தெரிவித்ததாகவும் கூறப்பட்டது.
இதேவேளை புத்தரின் சிலையை நிறுவும் வைபவத்தில் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி மாணவர்களும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகின்ற போதிலும் இதனை உறுதி செய்து கொள்ள முடியவில்லை.
(க)

## சொந்த மைதானத்தில் போட்டிகள் இடம்பெறுவது மகிழ்வுக்குரியது

*கிளிநொச்சி கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு*

கிளிநொச்சி, பெப்.10
கிளிநொச்சி மகாவித்தியாலயம் சொந்த மைதானத்தில் இல்ல மெய்வன்மைப் போட்டி நடத்துவது மகிழ்ச்சி தருகின்றது. இவ்வாறு தெரிவித்தார் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல்.
கடந்த 7 ஆம் திகதி இடம்பெற்ற மேற்படி பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டியில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
மீள்குடியமர்வின் பின்னர் இந்தப் பாடசாலையில் புதிய கட்டடங்கள் அமைக்கப்பட்டன. தப்போது இந்தப் பாடசாலைக்குரிய மைதானத்தை அமைப்பதற்குக் காணி வழங்கிய குடும்பத்தினருக்கு எனது நன்றிகளைத் தெரித்துக் கொள்கின்றேன்.
மேலும் இந்தப் பாடசாலையில் கணித, விஞ்ஞான பிரிவுகள் உருவாக்கப்பட்டுள்ளன. மாணவர்கள் இந்தப் பிரிவுகளில் சாதனைகள் புரிய வாழ்த்துகின்றேன். மேலும் பாடசாலை ஏ.பி தரத்தில் தரமுயர்த்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-18)

## அக்கராயன் ஆற்றுப் பகுதியில் சட்டவிரோத செயல்கள்

அக்கராயன்,பெப்.10
அக்கராயன் ஆற்றுப் பகுதியில் கசிப்பு உற்பத்தி மற்றும் ஆற்றில் களவாக மணல் ஏற்றுதல் ஆகிய செயற்பாடுகள் அதிகரித்துக் காணப்படுகின்றன.
இந்தக் குற்றச் செயல்களில் ஈடுபட்ட சிலரை அக்கராயன் பொலிஸார் கைது செய்து நீதிமன்றத்தில் தண்டனை பெற்றுக் கொடுத்த போதிலும் இத்தகைய செயற்பாடுகள் குறைந்ததாகத் தெரியவில்லை.
கிளிநொச்சி அரச செயலகத்தில் இடம்பெற்ற சிவில் பாதுகாப்புக் குழுக்கூட்டத்தில் ஸ்கந்தபுரம் மரப்பாலத்தடி, அக்கராயன் ஆற்றுச்சூழல், கண்ணபுரம் ஆகிய பகுதிகளில் கசிப்பு விற்பனை, நடமாடும் வியாபாரமாக இடம் பெறுவதாகத் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## இடர் குறைப்புத் திட்டத்துக்கு போதிய நிதி ஒதுக்கீடு

*வவுனியா இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் தெரிவிப்பு*

வவுனியா, பெப்.10
வவுனியா மாவட்டத்தில் இடர் குறைப்புத் திட்டத்துக்கென போதிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இவ்வாண்டு உரிய வேலைத்திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படவுள்ளதாக வவுனியா இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் ரி.என். சூரியராஜா தெரிவித்தார்.
இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்
வவுனியா மாவட்டத்தில் இடர்களால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்பைத் தவிர்க்கும் நோக்குடன் இந்த ஆண்டு பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. மாமடு குளத்தின் வாய்க்கால் புனரமைப்பு, சாளியகுளத்துக்கு அருகில் உள்ள வீதிப் புனரமைப்பு, செட்டிக்குளம், பொக்கலிய குளம் உட்பட பல்வேறு குளங்களால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளைத் தவிர்த்தல் மேலும் பல குளங்களின் புனரமைப்பு என்பன இடம்பெறவுள்ளன.
கடந்த ஆண்டு இடர்களால் ஏற்பட்ட பாதிப்பு மிகவும் குறைவாகவே காணப்பட்டது. இடரின் போது செயற்படுவது தொடர்பான பயிற்சிகள் கிராம மட்டத்தில் இருக்கும் இடர் முகாமைத்துவகுழுக்கள், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், திணைக்களங்களைச் சார்ந்தவர்கள் ஆகியோருக்கு வழங்கினோம். இடர் ஒத்திகைப் பயிற்சிகளைப் பல்வேறு இடங்களில் மேற்கொண்டோம். இடர்களால் பாதிக்கப்பட்ட சில குடும்பங்களுக்கு கூரை விரிப்புக்களும், தண்ணீர் தாங்கிகளை பாடசாலைகளுக்கும் வழங்கினோம். இந்த ஆண்டு கிராம மக்களுக்கு இடர் தொடர்பான விழிப்புணர்வுப் பயிற்சிகளை வழங்கவுள்ளோம். மேலும் இடர் முகாமைத்துவ முன்னாயத்த திட்டங்கள் பல ஒத்திகைகளுடன் மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (க-402)




**எம் தமிழ் மண்ணில் தமிழ் படும் பாடு**

தமிழ் மக்களுக்கு எத்தனை கஷ்டங்கள், நஷ்டங்கள். இன்னும் கூட எங்களுக்கு விடிவில்லை. தமிழரின் துன்ப, துயரங்கள் தொடர்கின்றன. இந்த நிலையில் தமிழையும் 'கொலை' செய்கிறார்கள் சில பிரகிருதிகள். முல்லைத்தீவு முத்துஐயன்கட்டில் எங்கள் செந்தமிழுக்கு நேர்ந்துள்ள கதியைப் பாருங்கள்...! (ஒ-21)

## இட நெருக்கடிக்குள் அவலப்படும் பூநகரி ஸ்ரீவிக்னேஸ்வரா வித்தியாலயம்

கிளிநொச்சி, பெப்.10
பூநகரி ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம் இட நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது.
419 மாணவர்களைக் கொண்ட இந்தப் பாடசாலையில் ஒரேயொரு மாடிக் கட்டடம் மட்டுமே உள்ளது.
தரம் 1 முதல் தரம் 11 வரையான வகுப்புக்கள் உள்ள நிலையில் 9 வகுப்பறைகளுக்கு மட்டுமே இடவசதி காணப்படுகின்றது. மீதி வகுப்புகள் மர நிழலின் கீழ் நடைபெறுகின்றன.
இங்குள்ள ஆண்களுக்கான மலசலகூடம் பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றது.
இது தொடர்பாக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளருடன் தொடர்பு கொண்டபோது; பாடசாலையின் இடநெருக்கடிக்குத் தீர்வு காணும் பொருட்டு உதவி அமைப்புகளிடம் உதவி கோரியுள்ளோம். அடுத்த தவணைக்குள் கட்டடம் அமைக்கப்பட்டுவிடும் என்று தெரிவித்தார். (க-18)

## மிகவும் மோசமான நிலையில் உருத்திரபுரம் செல்லும் வீதி

அக்கராயன், பெப்.10
கிளிநொச்சி நகரிலிருந்து உருத்திரபுரம் செல்லும் பிரதான வீதி குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது.
கரடிப் போக்குவரத்துச் சந்தியிலிருந்து 10 கிலோமீற்றர் தூரத்தில் இந்த வீதி அமைந்துள்ளது.
கிளிநொச்சி இந்துக்கல்லூரி, பற்றிமா றோ.க. வித்தியாலயம், உருத்திரபுரம் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் பெருமளவு மாணவர்கள் பயன்படுத்தும் இந்த வீதி மோசமான நிலையில் காணப்படுவதால் அவர்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.



கோப்புப்படம்


மேலும், கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் அயலில் உள்ள வீதியும் குன்றும் குழியுமான நிலையில் காணப்படுகின்றது. இதனால் இந்தக் கல்லூரியைச் சேர்ந்த ஆயிரத்து 200 மாணவர்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.
இதேவேளை- கிளிநொச்சி மேற்கிலுள்ள மிக முக்கியமான கிராமமான உருத்திரபுரத்திலுள்ள பிரதான வீதியும் மீள்குடியமர்வு இடம்பெற்று நான்கு ஆண்டுகள் கடந்த நிலையிலும் புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)

# மதுபானம் விற்றவருக்கு ரூ. 5 ஆயிரம் அபராதம்

மட்டக்களப்பு,பெப்.10
அக்கரைப்பற்று. பனங்காடு பிரதேசத்தில் சட்டவிரோதமாக மதுபானம் விற்பனை செய்த ஒருவருக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்ற நீதிபதி யு.எல்.எம். அஸ்ஹகா வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றையடுத்து கடந்த 2ஆம் திகதி பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவு சாஜன் யு.எல். எஸ். ஆப்தீன் தலைமையிலான பொலிஸ் குழு பனங்காடு, நாககாளி வீதி யில் உள்ள குறித்த வீட்டைச் சுற்றி வளைத்து சோதனையிட்ட போதே சட்டவிரோதமாக மதுபானம் விற்ற ஒருவரைக் கைது செய்தனர். (ச)

# மீனவரிடம் சிக்கிய இராட்சத திருக்கை



*அக்கரைப்பற்று கடல் பிரதேசத்தில் சிக்கிய இராட்சத திருக்கை*

அக்கரைப்பற்று கடல் பிரதேசத்தில் வெள்ளிக்கிழமை இராட்சத திருக்கை மீன் ஒன்றை மீனவர்கள் பிடித்துள்ளனர், இந்த மீன் சுமார் 800 கிலோ எடை கொண்டதாகவும், சுமார் மூன்று லட்சம் ரூபா பெறுமதியுடையதாகவும் மீனவர்கள் தெரிவித்தனர்.

அக்கரைப்பற்று கடல் பிரதேசத்தில் இதுவரை பிடிக்கப்பட்ட திருக்கை மீன்களில் இந்த மீனே அதிக நிறையுடையது என்று மீனவர்கள் தெரிவித்தனர். பிடிபட்ட திருக்கை மீனை, கொழும்பு சந்தைக்குக் கொண்டு சென்று மொத்த வியாபாரிகளுக்கு பங்கீட்டு வழங்கப்படும் என்று உள்ளூர் வியாபாரிகள் தெரிவித்தனர். (ச)



திருகோணமலை, கிண்ணியா பிரதேசத்தில் மிகவும் பின்தங்கிய கிராமமான வில்வெளி ஏ.எம் .ஏ. முஸ்தபா என்ற பெயரில் புதிய பாடசாலை ஒன்றை கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் ஏ மஜீத் ஆரம்பித்து வைத்தார்.
இந்த நிகழ்வில், பாடசாலை மாணவர்கள் 'பான்ட்' வாத்தியத்துடன் முதலமைச்சர் மற்றும் விருந்தினர்கள் வரவேற்கப்பட்டனர்.

# சட்ட விரோத மின்சாரம் பெற்ற இருவர் கைது

அம்பாறை, பன்னலகம பிரதேசத்தில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்று வந்த இருவரை சனிக்கிழமை கைது செய்துள்ளதுடன் மின்சார வயர்களும் மீட்கப்பட்டன என்று தமண பொலிஸார் தெரிவித்தனர்.

இலங்கை மின்சார சபையின் அம்பாறை கிளையும் தமண பொலிஸாரும் இணைந்து பன்னலகபிரதேசத்தை சனிக்கிழமை அதிகாலை 4 மணிக்கு சுற்றி வளைத்துசோதனையிட்ட போதே சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றுவந்த இருவரைக் கைது செய்தனர்.

இந்தச் சம்பவத்தில் கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# மக்களை மீளக்குடியமர்த்த உடன் நடவடிக்கை எடுங்கள்

## ஜனாதிபதியிடம் கோருகிறது கூட்டமைப்பு

கடந்த கால போரால் இடம்பெயர்ந்த திருக்கோயில் பிரதேச பிரிவுக்குட்பட்ட மக்களை மீளக் குடியமர்த்த செய்ய வேண்டும் என்று கிழக்கு மாகாண சபை உறுப்பினர் த.கலையரசன் ஜனாதிபதியிடம் மனுவொன்றின் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.



*கலையரசன்*

இந்த மனுவில் மேலும் தெரிவிக் கப்பட்டிருப்பதாவது:
இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 1990ஆம் ஆண்டு தொடக்கம் 2000ஆம் ஆண்டு வரை நடைபெற்ற போரால் மோசமாகப் பாதிக்கப்பட்ட திருக்கோயில் பிரதேச பிரிவுக்குட்பட்ட சாகாமம், காஞ்சிரங்குடா, கஞ்சிகுடிச்சாறு, தங்க வேலாயுதபுரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த முறையே 126, 68, 244, 270 ஆகிய குடும்பங்களுடன் வன்னியில் இருந்து இடம்பெயர்ந்த 63 குடும்பங்களும் இதுவரை ஒழுங்கான முறையில் மீள்குடியமர்வு செய்யப்படாமல் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

திருக்கோயில் பிரதேச பிரிவுக் குட்பட்ட சாகாமம், காஞ்சிரங்குடா ஆகிய பகுதிகளில் உள்ள மக்களை தற்காலிகமாக கொட்டில்கள் அமைத்து மீள்குடியமர்வு செய்யப்பட்டும் எந்த விதமான அடிப்படை வசதிகளும் இன்றியே அவர்கள் தாங்கள் வாழ்க்கையை நடத்தி வருகின்றனர்.

எனவே இந்த மக்களை அவர்களின் சொந்தப் பிரதேசங்களில் நிரந்தரமான வீடுகளை அமைத்து மீள் குடியமர்வு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (ச-31)

இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில்
17.05.1950
விண்ணில்
03.02.2012
கந்தப்பு செல்வராஜா
(ஓய்வு பெற்ற கூட்டுறவுச்சங்க காசாளர் கொடிகாமம்)
பார் போற்றும் உத்தமனாய் வாழ்ந்து
எல்லோர் மனதிலும் பதிந்து விட்ட அப்பாவே!
எம்மை அள்ளி அரவணைத்து
நல்வழி காட்டிய தெய்வமே!
எம்மை விட்டு வெகுதூரம் எங்கு சென்றீர்கள்?
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
எம் இதயத்தில் என்றும் வாழ்வீர்கள்.
இடைக்குறிச்சி, வரணி. (43093)(3.6.4) குடும்பத்தினர்.

# கரையொதுங்கிய தேக்கு மரங்கள்

அம்பாறை,பெப்.10
அம்பாறை மாவட்டக் கரையோர கடற்பிரதேசத்தில் பல

**பல லட்சம் ரூபா பெறுமதியான தேக்கு மரங்கள் கரையொதுங் கியுள்ளன.**

லட்சம் ரூபா பெறுமதியான தேக்கு மரங்கள் பல கரை யொதுங்கியுள்ளன.

நிந்தவூர், அட்டப்பள்ளம், கல்முனை, காரைதீவு ஆகிய கரையோர கடற்பிரதேசங்களில் சனிக்கிழமை அதிகளவு தேக்கு மரங்கள் கரையொதுங்கியுள்ளன.

இவற்றின் பெறுமதி சுமார் 10 லட்சம் ரூபா என்று வனவளதிணைக்கள உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.

இவ்வாறு கரையொதுங்கிய மரங்களை வனவள திணைக் கள அதிகாரி ஏ.எச்.எம். கியாஸ் தலைமையில் வனவள திணைக்களத்தின் விஷேட குழுவினருடன் பொலிஸாரும் இணைந்து கரையொதுங்கிய தேக்கு மரங்களை அரச உடைமையாக்கும்நடவடிக்கைகளை மேற்கொண்டனர். (ச)



*அம்பாறை கடற்கரையில் கரையொதுங்கிய தேக்கு மரங்கள்*

3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி
அமரர்
நடராசா
இரங்கநாதன்



பிறப்பு
01.04.1951
இறப்பு
15.01.2011
திதி: தை மாத
பூர்வபக்க ஏகாதசி
குடும்ப குல விளக்காய்
விளங்கிய
எங்கள் அன்புத் தெய்வமே!
ஆண்டுகள் மூன்று சென்றாலும்
ஆறாது உங்கள் பிரிவுத்துயர்
என்றென்றும் உங்கள் அன்பு நினைவுகளுடன்
ஆத்மசாந்திக்காய் இறைவனைப்
பிரார்த்திக்கின்றேன்.
29/21, உடையார் ஒழுங்கை,
ஐயனார் கோவிலடி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (44299)(3.6.4)
அன்பு மனைவி,
இ.சாரதாதேவி.

# ஆணின் சடலம் மீட்பு

கொழும்பு,பெப்.10
கொழும்பு, வெள்ளவத்தை விஹார வீதியில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.
வெள்ளவத்தை, விஹார வீதியிலுள்ள கால்வாயிலிருந்து சுமார் 40 வயது மதிக்கத்தக்க ஒருவருடைய சடலமே இவ்வாறு மீட்கப்பட்டது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.
உடற்கூற்றுப் பரிசோதனைக்காக சடலம் களுபோவில போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

# ‘பட்ஜெட்’ இலக்கில் அரசு தோல்வி

## சுயாதீன ஆய்வு நிறுவனம் தகவல்

தாமே தயாரித்து பிரகடனப்படுத்தும் வரவு-செலவுத் திட்ட இலக்கை அடைவதற்கு அரசு தொடர்ச்சியாகவே திறனற்றுப் போயுள்ளது என்று ‘வெரிற்றே ரிஸர்வ்’ என்ற சுயாதீனமான ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

**2013 ஆம் ஆண்டில் அரசின் வருவாயை சராசரி தேசிய உற்பத்தியின் நூற்றுக்கு 17 ஆகப் பெறுவதற்கு அரசு இலக்கு வைத்திருந்தது.**

அரச வருவாயை அதிகரித்துக் கொள்ளல், அரச முதலீடுகளின் மட்டம், வரவு - செலவுத்திட்ட இடைவெளி மற்றும் அரச கடன்கள் முகாமைத்துவத்தின் போது எதிர்பார்க்கப்படும் இலக்குகளை நெருங்குவதற்கு அரசு திறனற்றுப் போயுள்ளது என்று சுயாதீன ஆய்வு நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.
2013 ஆம் ஆண்டில் அரசின் வருவாயை சராசரி தேசிய உற்பத்தியின் நூற்றுக்கு 17 ஆகப்பெறுவதற்கு அரசு இலக்கு வைத்திருந்த போதிலும், தற்போது அது நூற்றுக்கு 13.8 வரையிலானது என்றே மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. 2006 ஆம் ஆண்டின் நூற்றுக்கு 17 என்ற மட்டத்துக்கு அமைய ஒப்பிடுகையில் இது பின்னடைவு ஒன்றே என்று குறித்த ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.
அரசு ஏற்கெனவே இலக்கு வைத்திருந்த நூற்றுக்கு எட்டை விஞ்சிச் செல்லும் அரச முதலீடுகள் பின்னர் அது நூற்றுக்கு ஆறு என்றவாறு மீள நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும், கடந்துள்ள இரண்டாண்டுகளிலுமே அந்த இலக்கு நிறைவு செய்யப்படவில்லை என்று குறித்த நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது. (ச-22)



மாகாண சபைத் தேர்தலில் களுத்துறை மாவட்டத்தில் ஆளும் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர் எம். எம். அம்ஜாதுக்கு (சக்கர நாற்காலியில் இருப்பவர்) பேருவளைப் பகுதியில் அளிக்கப்பட்ட வரவேற்பில் அமைச்சர் ராஜித சேனாரத்ன, பேருவளை நகரபிதா மில்பர் கபூர் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ச)

# மீனவர் பிரச்சினை; பேச்சு நடத்த தயார்

## சென்னை விமான நிலையத்தில் ரணில்

கொழும்பு,பெப்.10
இலங்கை- இந்திய மீனவர் பிரச்சினை குறித்து பேச்சு நடத்தத் தயார் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.
எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தனிப்பட்ட பயணத்தை மேற்கொண்டு இந்தியா சென்றுள்ளார்.



ரணில் விக்கிரமசிங்க

சென்னை விமான நிலையத்தில் ஊடகவியலாளர்களை சந்தித்துப் பேசிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
நீண்ட காலமாக இரு நாடுகளினதும் மீனவர்கள் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர்.
இரு நாடுகளினதும் மீனவர்களுக்கு இடையில் பேச்சு நடத்தப்பட்டு வருகின்றது என்று ரணில் தெரிவித்தார். (ச)

# பொருள்கள் கிடைத்ததற்கான அத்தாட்சி இதுவரை இல்லை

## கணக்காய்வு அறிக்கையில் அம்பலம்

கொழும்பு,பெப்.10
ரயில் திணைக்களத்துக்குத் தேவைப்படும் பொருள்களை வெளிநாடுகளிடமிருந்து இறக்குமதி செய்வதற்காக கடந்த 2005ஆம்ஆண்டிலிருந்து 2012 ஆம் ஆண்டின் முடிவில் 57 கோடி 30 லட்சத்து 48 ஆயிரம் ரூபா வழங்கப்பட் டுள்ளது.
எனினும் அந்தப் பொருள்கள் கிடைத்தமைக்கான அத்தாட்சிகள் இல்லை.
இந்த விடயம் ரயில் திணைக்களத்தின் 2012 ஆம் ஆண்டின் கணக்கு வழக்குகள் சம்பந்தமாக கணக்காய்வாளர் நாயகத்தினால் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள கணக்காய்வு அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளது.
ரயில் திணைக்களத்துக்குத் தேவைப்படும் பொருள்களை வெளிநாட்டில் இருந்து தருவித்துக் கொள்வதற்காக இந்தத் தொகை தொடர்பாக 306 சந்தர்ப்பங்களில் வங்கிக் கடன் முறிகள் திறக்கப்பட்டுள்ளன.

**சாட்சியங்களை தேடிப் பெறுவதற்கு இயலாதுள்ளது.**

எனினும் தருவிக்கப்பட்டுள்ள பொருள்கள் திணைக்களத் தின் களஞ்சியங்களுக்கு கிடைத்துள்ளமைக்கான சாட்சியங்களை தேடிப் பெறுவதற்கு இயலாதுள்ளது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-22)

# பஸ்களின் தரம் பரிசோதிப்பு

கொழும்பு,பெப்.10
பஸ்களின் தரத்தைப் பரிசோதிப்பதற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.
இந்த நடவடிக்கை மாவட்ட ரீதியாக மேற்கொள்ளப்படவுள்ளது என்று ஆணைக்குழுவின் தலைவர் ரொஷான் குணவர்தன தெரிவித்தார்.
அதன் ஓர் கட்டமாக நுவரெலியா நகரில் பஸ்களின் தரம் பரிசோதிக்கப்பட்டது.
பயணிகள் போக்குவரத்துக்கு ஏற்ற வசதிகள் பஸ்களில் காணப்படுகின்றனவா என்பது தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்படும் என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.
பஸ்களில் காணப்படுகின்ற குறைபாடுகளை, ஜி.பி.எஸ் தொழில்நுட்பத்தின் ஊடாக கண்டறியவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று ஆணைக்குழு கூறியது.
பஸ்களின் பயண எல்லையை குறிக்கும் பதாகைகளை புதுப்பிப்பதற்காக பிரத்தியேக குழு நியமிக்கப்பட்டுள்ளது என்று ஆணைக்குழு தெரிவித்தது. (ச)

# மாகாண அமைச்சராக ஹிருணிகா

கொழும்பு,பெப்.10
மேல் மாகாணசபை தேர்தலின் பின்னர் ஹிருணிகா பிரேமசந்திரவை மாகாண அமைச்சராக நியமிக்க ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆலோசனை மேற்கொண்டு



ஹிருணிகா

வருகிறது
இது குறித்து அமைச்சர்கள் மத்தியில் ஆராயப்பட்டுள்ளது.
மேல் மாகாணத்தில் அவர் ஏற்கெனவே கட்சியின் இணை அமைப்பாளராகச் செயற்படுகிறார்.
இந்தநிலையில் அவரின் திறமைகளைக் கருத்தில் கொண்டு மாகாண அமைச்சை அவருக்கு வழங்கலாம் என்று அமைச்சர்களான வாசுதேவ நாணயக்கார, மைத்திரிபால, சாலிந்த திஸாநாயக்க ஆகியோர் தெரிவித்துள்ளனர். (ச)

எங்கள் அன்பார்ந்த
வாடிக்கையாளரின் நலன் கருதி

இலங்கை வங்கி
திருநெல்வேலி
கிளை

2014 பெப்ரவரி 10 ஆம் திகதி
திங்கட்கிழமை

இல. 102,
பலாலி வீதி,
திருநெல்வேலி

என்ற முகவரிக்கு இடம்
மாற்றப்படுகின்றது என்பதை
மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்
கொள்கின்றோம்.

(c 11744)

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

பொன்விழா வாழ்த்துக்கள்

10.02.1964ஆம் ஆண்டு
நீர்வேலி பரலோக
மாதா ஆலயத்தில்
திருமண பந்தத்தில் இணைந்த
எமது அன்புத் தெய்வங்கள்
அன்ரனி கிறேஸ்மலர்
தம்பதியினர்
இன்று தமது ஐம்பதாவது
திருமண விழாவினைக் கொண்டாடும்
இந்நாளில் அவர்கள்
என்றும் பல்லாண்டு காலம்
வாழ வாழ்த்தி நிற்கின்றோம்.




இ.அன்ரனி (அருள்) அ.கிறேஸ்மலர் (நாகம்மா)
வாழ்த்தி நிற்கும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள், நண்பர்கள்.
077 124 0416

இல. 36, பழைய பூங்கா வீதி,
கண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நாட்டைக் கந்தறு நிலைக்கு இட்டுச்செல்லும் தெற்கின் இனவாதத் தலைவர்கள் உள்ளவரை....

ஈழத்துக்கு எதிரான இரண்டாம் கட்டப் போரை ஆரம்பிக்க வேண்டும். பிரிவினைவாதத்தைப் பேசுகின்ற அல்லது பகிரங்கமாக ஆதரிக்கின்ற குழுக்களைத் தடை செய்ய வேண்டும். எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல்களை இந்தக் குழுக்களைத் தோற்கடிப்பதற்கான பொதுசன வாக்கெடுப்பாகப் பயன்படுத்த வேண்டும்.

இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார் அமைச்சரும் மக்கள் சுதந்திர முன்னணிக் கட்சியின் தலைவருமான விமல் வீரவன்ச.

அத்தோடு நின்றுவிடாமல், அரசமைப்புச் சட்டத்தின் பதின்மூன்றாவது திருத்தத்துக்கு மேலும் திருத்தங்கள் கொண்டு வரப்படும்போது, பிரிவினை வாதத்துக்குத் துளி அளவும் இடம் இல்லை என்பதனை கட்டாயம் உறுதிப்படுத்து வனவாக அவை அமைய வேண்டும் என்றும் அமைச்சர் காட்டமாகத் தெரிவித்துள்ளார்.

மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவரான அமைச்சரின் இந்தக் கருத்தை, அரசாங்கத்தின் உள்ளார்ந்த திட்டமாகக் கொள்வது தப்பன்று. அரசாங்கத்தின், மிகக் குறிப்பாக அதி உயர் மட்டத்தின், செல்லப்பிள்ளையாகக் கணிக்கப்படும் அமைச்சரின் இந்த நிலைப்பாட்டை வெறும் தேர்தல் பிரசார உத்தி என்று கொள்வதற்கும் இல்லை.

இதேவேளை சமகாலத்தின்-

ஈழத் தமிழர்களின் இன்றைய நிலையை, காலத்துக்கு ஏற்றதெனக் கருதப்படும் அவர்களின் நிலைப்பாட்டை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் மூத்த நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன், தமிழகத்தில் சென்னையில் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றில் அழுத்தம் திருத்தமாக வெளியிட்டுள்ளார்.

ஒருமித்த நாட்டுக்குள் எந்தவித பிரச்சினையும் இல்லாமல் வாழ்ந்தால் போதும். இந்தியாவில் மாநிலங்களுக்கு எந்த வகை சார்ந்த அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளனவோ அத்தகைய அதிகாரங்களை இலங்கையில் நாமும் எதிர்பார்க்கிறோம். நாம் தமிழீழத்தைக் கோரவில்லை- என்று தமிழகத்தில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றில் அவர் தெரிவித்திருக்கிறார்.

மஹிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதியாகப் பதவி ஏற்ற புதிதில், தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு விருப்பம் கொண்டிருந்தார். அதற்கென பதினாறு பேர் கொண்ட விசேட குழு ஒன்றை நியமித்தார்- உருவாக்கினார்--

இடைப்பட்ட காலத்தில், வடக்கு- கிழக்கு மாகாணத்தில் வாழும் மக்களுக்கான அதிகாரங்களை வழங்கும் வகையில் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை முழு அளவில் நடைமுறைப்படுத்தத் தூண்டும் முயற்சிகளை இந்தியா மேற்கொண்டது. ஆனால் இலங்கை அரசு பின்னடித்த நிலையில், உகந்த திருத்தத்தை இன்னும் நடைமுறைப்படுத்தவில்லை--

போரினால் பாதிப்புற்ற மக்கள் தமது சொந்த நிலங்களுக்குத் திரும்பச் சென்று வசிக்க முடியாத நிலையே காணப்படுகிறது--

தமிழ் மக்களின் சொந்த- பூர்வீகப் பிரதேசங்களுக்கு அவர்கள் திரும்ப முடியாத நிலை தொடர்கிறது. ஆனால் இராணுவத்தினருக்கான குடியிருப்புகள் கட்டப்படுகின்றன- என்றும் இன்னும் பல பாதகமான நிலைகளையும் எடுத்துரைத்திருக்கிறார் கூட்டமைப்பின் தலைவர்.

கொழும்பு ஊடகங்கள் சில, விமல் வீரவன்ச, பதின்மூன்றாவது திருத்தத்துக்கு எதிராக உயர் நீதிமன்றில் வழக்குத் தொடர உள்ளதாகவும் சில காலத்துக்கு முன்னர் செய்திகள் வெளிவந்திருந்தன.

பண்டா- செல்வா ஒப்பந்தம், டட்லி- செல்வா ஒப்பந்தம், ஜே.ஆர்.- அமிர்தலிங்கம் ஒப்பந்தம் என்பன கிழித்து எறியப்பட்டது போன்று, பதின்மூன்றாவது திருத்தமும் நீர்த்துப் போகச் செய்யப்பட வேண்டும் என்றும் விமல் வீரவன்ச கருத்துத் தெரிவித்து வருகிறார்.

அவர் மட்டுமன்றி, இனவாதத்தை முன்னிறுத்தி மற்றும் சில அமைச்சர்களும், தமிழீழம் என்ற பிம்பத்தைக் காட்டி, அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தை அமுக்கிவிட முனைவதும் இங்கே குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

பதின்மூன்றாவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தினால்,பண்டா- செல்வா ஒப்பந்தம், டட்லி- செல்வா ஒப்பந்தம், ஜே.ஆர்.- அமிர்தலிங்கம் ஒப்பந்தம் என்பன கிழித்து எறியப்பட்டது போன்று, பதின்மூன்றாவது திருத்தமும் நீர்த்துப் போகச் செய்யப்பட வேண்டும் என்றும் விமல் வீரவன்ச கருத்துத் தெரிவித்து வருகிறார். தமிழீழம் அமைந்துவிடும் என்று பெரும்பான்மை இன மக்களிடம் பிரசாரம் செய்து சிங்கள இனவாதத்தை உச்சத்துக்குத் தூண்டி விட அவர்கள் தீவிரமாகச் செயற்படுகின்றனர்.

இந்த நாட்டின் தமிழ் மக்களுக்குச் சேர வேண்டிய ஜனநாயக உரிமைகளையும், பிறப்புரிமைகளையும் அவர்களிடம் இருந்து பிரிக்க முடியாத உரிமைகளையும் வழங்குவதன் ஊடாக மட்டுமே-

சமாதான, சகவாழ்வு மலர முடியும் என்பதனை இனவாத சக்திகள் பெரும்பான்மைச் சிங்கள மக்கள் உய்த்து உணர இடம் தரமாட்டா என்ற நிலை நீடித்தால்,-

இந்த நாடு கந்தறுவதற்கு விதை விதைப்பதாகிவிடும். இதனைச் சம்பந்தப்பட்டவர்கள் உள்ளார்ந்து உணர்வது எப்போது...?

# இலங்கையின் வெளியுறவு கொள்கை மாறுகின்றதா?

## அமெரிக்காவுடன் நெருங்கிய உறவுக்கு முயற்சி

சண்டே ரைம்ஸ் கட்டுரையிலிருந்து - கோகுலன்

ஜெனீவாவில் கூடவிருக்கும் ஐ.நா.மனித உரிமைகள் சபையில் அடுத்த மாதம் என்ன நடக்குமோ என்ற வகையில் கலக்கமுற்றிருந்தாலும் அரசு ஒரு விடயத்தில் ஆறுதலடையக் கூடியதாக இருக்கிறது. அதுதான் அதற்கு எதிராக எதிர்க்கட்சிகளின் பொது முன்னணி ஒன்று உருவாகும் சாத்தியம் தென்படவில்லை என்பது.

ஆட்சி மாற்றம் எதுவும் ஏற்பட வேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. அதேபோல் ஐ.தே.கவுடன் ஏதும் பொது பிணைப்பு ஏற்படும் என்றும் நினைக்கவில்லை என்று கூறியிருக்கிறார் ஜனதா விமுக்தி பெரமுனையின் புதிய தலைவர் அனுர குமார திஸாநாயக்க. நாட்டில் ஏற்பட்டுள்ள இன்றைய நிலைமைகளுக்கு ஐ.தே.கட்சிதான் பதில் சொல்லியாக வேண்டும் என்று கூறிய ஜே.வி.பியின் புதிய தலைவர், எமது அடிப்படை உறுப்பினர்களின் பலத்தை பெருக்குவதும் அரசு முறைமையை மாற்றி அமைக்க முயல்வதுமே எமது இப்போதைய செயற்பாடாக இருக்கும் என்று மேலும் கூறினார்.

ஜே.வி.பியின் இந்த நிலைப்பாடானது ஐ.தே.கட்சி விரும்பும் எதிர்க் கட்சிகளுக்கிடையிலான பொது எதிர் முன்னணி ஒன்றை உருவாக்கும் யோசனை சாத்தியமாகாது என்பதைக் காட்டுவதாக உள்ளது. இதன்படி பார்த்தால் ஐ.தே.கட்சி அரசுக்கு எதிராக கொண்டு வரவிரும்பும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தையும் ஜே.வி.பி ஆதரிக்க மாட்டாது என்பது புலனாகின்றது.

நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையை ஒழிப்பதில் தீவிரமாக உள்ளது ஜே.வி.பி. நாடாளுமன்ற ஆட்சிமுறை மீள்வும் நிலை நாட் டப்பட வேண்டும் என்று ஜே.வி.பியின் புதிய தலைவர் கூறினார். நாடாளுமன்றத்தின் ஆயுள்காலம் இப்போது போல் ஆறு ஆண்டுகள் என் றில்லாமல் ஐந்து ஆண்டுகளுக்குள் கட்டுப்படுத்தப்பட வேண்டும். தேர்தலும் மூன்று மாதங்களுக்குள் நடத்தப்பட வேண்டும். அத்துடன் அமைச்சரவையும் 25 அங்கத்தினர்களுக்கு மேற்படக்கூடாது என்றும் அவர் கூறினார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தையும் நீக்க வேண்டும் என்று ஜே.வி.பி விரும்புகிறது. பெரும்பாலும் இதே செயற்பாடுகளை முன்னெடுப்பதையே ஐ.தே.கவும் வலியுறுத்துகின்றது. ஜே.வி.பியின் தலைவர் பதவியானது சோமவன்ச அமரசிங்கவிடமிருந்து அமைதியான முறையில் கைமாற் றம் செய்யப்பட்டிருப்பது ஏனைய அரசியல் கட்சிகளுக்கு மிக வலுவான செய்தியொன்றை வழங்கியிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்த மாதம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ லண்டனுக்கு செல்லும் போது சில ஐ.நா.மனித உரிமைகள் சபை உறுப்பு நாடுகளின் தலைவர்களையும் சந்தித்துப் பேசவிருக்கிறார். மார்ச் 10 ஆம் திகதி நடைபெறவிருக்கும் பொதுநலவாய நாடுகளின் நிகழ்ச்சியொன்றுக்கு அவர் தலைமை வகிப்பார். 2014 ஆம் ஆண்டுக்கான பொதுநலவாய அணி என்ற கருப்பொருளில் நடைபெறவிருக்கும் நிகழ்ச்சிகளில் வெஸ்ட்மின்ஸ்டர் தேவாலயத்தில் இடம்பெறும் ஒரு மணி நேர ஆராதனையும் ஒன்றாகும். வாக்குத் தத்தங்கள், புனிதநூலில் இருந்து வாசித்தல், பாடல்கள் மற்றும் இசை நிகழ்ச்சிகளும் இடம்பெறும் என்று பொதுநலவாய செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுநலவாய அமைப்பின் தலைவர் எலிஸபெத் மகாராணி, சிரேஷ்ட அரசியல் தலைவர்கள், உயர் ஸ்தானிகர்கள், பொதுநலவாய முக்கியஸ் தர்கள் மற்றும் 200 மிகமுக்கிய பிரமுகர்களும் இந்த நிகழ்வில் கலந்து கொள்வார்கள். 1000 பள்ளிச் சிறார்களுடன் மொத்தம் 2000 பேர் வரை கலந்து கொள்வார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. லண்டன் மல்பரோ இல்லத்தில் பொதுநலவாய செயலகத்தில் மகாராணி மற்றும் கொமன்வெல்த் பிரதிநிதிகளுக்கான வரவேற்பு நிகழ்ச்சியொன்றை செயலாளர் நாயகம் கமலேஷ்சர்மா நிகழ்த்துவார். லண்டனுக்கு செல்வதற்கு முன்பதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மியன்மார் நாட்டுக்கும் அதிகார பூர்வமாக செல்லவிருக்கிறார்.

இலங்கையில் ராஜதந்திர அலுவலகங்களைக் கொண்டிருக்காத மனித உரிமை சபை உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளை கடந்த வாரம் வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் புதுடில்லியில் சந்தித்துப் பேசியிருந்தார். புதுடில்லியில் இந்திய வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித்துடன் நடத்தியிருந்த பேச்சுக்கள் பற்றிய விவரங்கள் இப்போது வெளியாகியுள்ளன.

இலங்கை அரசு நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்துவதில் கண்டுள்ள முன்னேற்றங்களை விவரமாக எடுத்து விளக்குவதில் பீரிஸ் அதிக நேரத்தை எடுத்துக் கொண்டுள்ளார். எஞ்சி நிற்கும் பரிந்துரைகளையும் நிறைவேற்றுவதற்கு மேலும் அதிக காலம் தேவைப்படுவதாக அவர் வலியுறுத்தினார். குர்ஷித் மிகக் கவனமாக பீரிஸ் கூறியவைகளைக் கேட்டுக் கொண்டிருந்தார். ஆனால் இடைமறித்து கருத்து ஒன்றும் கூறவில்லை. அமைச்சர் பீரிஸ் தமது கருத்துக் கூறலை நிறுத்தியதன் பின்னர் அடுத்த மாதம் ஜெனிவாவில் நடைபெறவிருக்கும் மனித உரிமை சபை தொடர்பாக இந்திய அரசு இன்னமும் நிலைப்பாடு ஒன்றையும் முடிவு செய்யவில்லை என்பதை இந்திய அமைச்சர் மிக பவ்வியமாக கூறி முடித்தார். மாநாடு நடைபெறவிருக்கும் நாள் அண்மிக்கும் போதே அவ்வாறான ஒரு முடிவுக்கு இந்தியா வருவதாய் இருக்கும் என்று குர்ஷித் கூறினார். ஒரு முடிவும் எடுக்கவில்லையென்று குர்ஷித் கூறியது ஒன்றே பீரிஸ் மட்டம் தட்டப்பட்டதற்கு ஒப்பாகும். பீரிஸின் விளக்கம் அனைத்தையும் கேட்டுக் கொண்டு குர்ஷித் பேசாமல் இருந்தமைக்கு அதுவே காரணம்.

அமைச்சர் பீரிஸைப் போலவே ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவும் இலங்கையின் சார்பில் வாஷிங்டனில் பரப்புரைகளை முடித்துக்கொண்டு கடந்தவாரம் நாடு திரும்பினார். அவரது பயணத்தின் முன்பகுதி நிகழ்ச்சிகளுக்கு அமெரிக்காவிலுள்ள தொம்சன் அட்வைசர் குரூப் என்ற நிறுவனமே பொறுப்பாக இருந்துள்ளது. அதில் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நிவார்ட் கப்றாலும் பின்னர் சேர்ந்து கொண்டார். தம் சார்பில் கப்ரால் டாக் (TAG) என்ற நிறுவனத்தை அமர்த்தியிருந்தார். யு.எஸ்.செனேட் வெளி உறவு குழுத் தலைவர் பொப்மொன்டேஸ் மக்கள் பிரதிநிதிகள் சபை வெளியுறவுக்குழு தலைவர் எட்றொய்ஸ் ஆகியவர்களை அவர்கள் சந்தித்திருந்தார்கள். காங்கிரஸ் சபையின் சில குறிப்பிட்ட உறுப்பினர்களோடும் வீரதுங்க சந்திப்புக்களை நடத்தினார். காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு டாக் நிறுவனம் இலங்கை நிலைப்பாடு தொடர்பாக எழுதியிருந்த கடிதத்தில் வெளியாகியிருந்த சில தகவல்கள் வாஷிங்டனிலுள்ள இலங்கை தூதரகத்தின் வினைத்திறனற்ற நிலைமையை பறைசாற்றுவதாக இருந்ததைக் காட்டுகின்றன.

மத்திய வங்கி ஆளுநரால் கட்டணத்துக்கு அமர்த்தப்பட்ட டாக் நிறுவனம் வீரதுங்கவை நிரந்தர செயலாளர் என குறிப்பிட்டுள்ளது. அவர் ஜனாதிபதியின் செயலாளர். மேலும் ஜனாதிபதியின் செயலாளர் மத்தியவங்கியின் ஆளுநருக்கு மேலான பதவியிலிருப்பவர். ஆனால் ஆளுநரை முதன்மைப்படுத்தியே கடிதத்தில் வரையப்பட்டுள்ளது. Srilanka என்பது சில இடங்களில் Sirlanka என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. வாஷிங்டனிலுள்ள இலங்கைத் தூதரகம் செய்ய வேண்டிய ஒரு வேலையை கட்டணம் பெற்றுக் கொண்டு செய்கின்ற நிறுவனத்தின் பணிகளை அதிகாரிகள் ஏன் பரிசோதிக்காமல் விநியோகிக்க விட்டார்கள். இதற்கெல்லாம் யார் பொறுப்பு என்ற கேள்விகள் எழுகின்றன. அது மட்டுமல்ல அந்த நிறுவனம் எழுதிய கடிதங்களில் சீனா ஏற்கெனவே இலங்கைக்குள் பிரதான உள் பாதைகளை நிறுவிக் கொண்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளதுடன் எமது வாஷிங்டன் வந்துள்ள மதிப்புக்குரிய விருந்தினர்கள் அமெரிக்காவுடனான உறவுகளை மேம்படுத்தி மேலும் வலுவுள்ளதாக்க விரும்புகிறார்கள் என்று தெரிவித்திருப்பதும் முக்கியமான கேள்விகளை எழுப்புகின்றன.

இலங்கையின் வெளியுறவுக் கொள்கையில் மாற்றம் ஏதும் ஏற்பட்டுள்ளதா, அமெரிக்காவுடனான உறவுகளை சீனாவுடனான உறவுகளை விட வலுவுள்ளதாக்கிக் கொள்ள விரும்புகிறதா அவ்வாறான ஒரு கருத்து ஜனாதிபதியின் செயலாளர் மூலம் வெளியுறவு அமைச்சு அல்லது மத்திய வங்கியிலிருந்து டாக் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டிருந்ததா?

இந்தக் கேள்விக்குப் பதிலளிக்க வேண்டியது அரசின் கடமை. இந்த முயற்சிகளுக்கு அளவுக்கு அதிகமாக பொது நிதிகள் செலவழிக்கப்படுவது மட்டுமல்ல இந்த விடயங்கள் நமது நாட்டின் வெளியுறவுக் கொள்கையோடும் தொடர்புபட்டுள்ளன என்பதே காரணம்.

இந்தப் பணம் முழுவதும் மிச்சமாகியிருக்கும் வாஷிங்டனிலுள்ள நமது தூதரகம் வினைத்திறனுடன் செயற்பட்டிருந்தால்.

உண்மையில் இலங்கை அரசு சீனாவுடனான உறவை விட அமெரிக்காவுடனான உறவுகளை பலப்படுத்திக் கொள்ள விரும்பினால் வடக்கில் மூன்று பாடசாலைக் கட்டடங்களை புனரமைத்துக் கொள்வதற்காக அமெரிக்க பசுபிக் கட்டளைப் பிரிவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை செய்து கொள்வதற்கான கல்வி அமைச்சர் பந்துல குணவர்தனாவின் ஆலோசனையொன்றை கடந்தவாரம் அமைச்சரவை ஏன் நிராகரித்தது?

இந்த முன்மொழிவை வெளியுறவு அமைச்சின் மூலம் அல்லது பாதுகாப்பு நகர்ப்புற வளர்ச்சி அமைச்சின் மூலம் மேற்கொள்ள மறுபரிசீலனை செய்திருக்கலாம். ஏனென்றால் இந்தப் பணியானது இலவசமாக வழங்கப்படவிருந்தது. இவைகளுக்கு நேர்மாறாக சீன நிறுவனங்களிடமிருந்து மில்லியன் கணக்கான டொலர்கள் மதிப்புள்ள முன்மொழிவுகள் மாதந்தோறும் அங்கீகரிக்கப்படுகின்றன. மேலும் அவ்வாறான திட்டங்கள் அங்கீகாரத்துக்காக முன்வைக்கப்படும் போது பெரும்பாலும் அவை பற்றிய விளக்கங்கள் தரப்படுவதில்லை. இதற்கான இவ்வளவு பெரிய தொகை எவ்வாறு பெறப்படும் எவ்வாறு திருப்பி கொடுக்கப்படும் என்பதெல்லாம் தெரிவிக்கப்படுவதில்லை. அமைச்சர்கள் வாயடைத்துப் போய் பேசாமல் இருப்பார்கள். இதற்கான பணம் வட்டியோடு திருப்பிச் செலுத் துவதற்கு பல தலைமுறைகளுக்கு நாடு வேறு ஏதாவது ஒரு முறையில் சீனாவுக்கு "அடமானம்" வைக்கும் வரையில் நீடிக்கக்கூடும்.

இன்றைய கால கட்டத்தில் பொது சன ஊடகங்கள், நவீன தொழில் நுட்ப வளர்ச்சியின் அபரிமித வளர்ச்சி காரணமாக பல சவால்களை எதிர் கொள்கின்றன. இவை கலை கலாசாரத்தில் கடுந்தாக்கத்தைச் செலுத்துகின்றன. கூட்டாகக் கலைகளை இரசித்த - கலைகளைப் படைத்த காலம் போய், தனியன்களாய், தொலை பேசிகளிலும், கணினி களிலும், தொலைக் காட்சிகளிலும் கரைந்து போகின்றனர் தொலைந்து போகின்றனர்.





# மனித வள விருத்தியில் பாரம்பரிய கலைகள்

அரியாலையூர்
செ.செல்வதாஸன்

மனித வள விருத்தியென்பது, ஒருவரின் உள நல, உடல் நல, நடத்தைக் கோலத்தில் கவனம் செலுத்துதலைக் குறிக்கும். ஆதிகாலத்தில் பொம்மலாட்டக் கலை ஆன்மிகத்தைக் கட்டியெழுப்புவதிலும், சுகாதாரப் பழக்க வழக்கங்களை மேலோங்கச் செய்வதிலும் அளப்பரிய பங்காற்றியுள்ளன. அதாவது ஒருவனின் உள நலத்திலும் , உடல் நலத்திலும், விருப்பிற்குரிய நடத்தைக் கோலத்தை உருவாக்கி ஆரோக்கியமான ஒருவராகத் திகழ பொம்மலாட்டக் கலை உதவியுள்ளது. பொம்மலாட்டக் கலை என்பது ஓவியக் கலையும், நாடகக் கலையும் ஒன்றிணைந்த ஓர் அற்புத வடிவம் ஆகும். இறுக்கமான சில பண்பாடுகளைக் கொண்ட சமூகத்தில், பொம்மலாட்ட முறை மூலம் இன்றைய இளைஞர் யுவதிகளிடையே சில பல நல்ல கருத்துக்களைக் கொண்டு செல்வது இலகுவானதாகவும், தாக்கமுடையதாகவும் அமையும்.

கூச்ச சுபாவம் எனும் தடைக் கல்லை உடைக்க இத்தகைய கலை ஊடகங்கள் உதவும். குறிப்பாக இன்றைய பெரும் பிரச்சினைகளான, எயிட்ஸ், எச்.ஐ.வி., மற்றும் போதைப் பொருள் பாவனையை இளைய தலைமுறையிலே ஏற்படாது, ஆற்றலுள்ள சமூகமாக எழுந்து நிற்கச் செய்ய இத்தகைய கலை சார்ந்த படைப்புக்கள் காலங் காலமாகப் பெரும் பங்காற்றி வந்தன. பங்காற்றி வருகின்றன இனிவருங் காலத்திலும் பங்காற்றமுடியும். உயர் தரத்திலான உன்னதங்களையும், சிறந்த பயிலுகைகளையும் கைக் கொள்வதனூடாக உள, உடல் நலனை உயர்த்த முடியும். அதுவே சிறந்த செல்வமுமாகும்.

கலைச் செயற்பாடுகளில் ஊறித் திளைத்தவர்கள் கலை இன்பமே நிலை இன்பம் என்பர் . அதில் இன்பம் காண்பர். மற்றவர்களையும் மகிழ்விப்பர். கலைச் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்கு அவர்களது கணிப்புத் தேவை நிறைவு செய்யப்படுகின்றது. ஒருவனது கணிப்புத் தேவை நிறைவுறும் போதுதான் அவன் ஒரு முழு மனிதனாகின்றான். தனது வாழ்வைச் சீரமைத்துக் கொள்கின்றான். மற்றவர்களுக்கு சிறந்த முன்னுதாரணமாகத் திகழ்கின்றான்.

இன்றைய கால கட்டத்தில் பொது சன ஊடகங்கள், நவீன தொழில் நுட்ப வளர்ச்சியின் அபரிமித வளர்ச்சி காரணமாக பல சவால்களை எதிர் கொள்கின்றன. இவை கலை கலாசாரத்தில் கடுந்தாக்கத்தைச் செலுத்துகின்றன. கூட்டாகக் கலைகளை இரசித்த - கலைகளைப் படைத்த காலம் போய், தனியன்களாய், தொலைபேசிகளிலும், கணணிகளிலும், தொலைக்காட்சிகளிலும் கரைந்து போகின்றனர் தொலைந்து போகின்றனர். தனக்கும், தனது வீட்டுக்கும், நாட்டுக்கும் பெரும் சுமையாக அமைகின்றனர். அற்புதமான மனித வளம் வீண் விரயமாகின்றது. மனித மாண்பு தறிகெட்டுச் செல்கின்றது. அவற்றை மீட்டெடுக்க எம் பாரம்பரிய கலைகளாலும், நுண் கலைகளாலும் முடியும் . தனி ஒரு மனிதனாக அன்றி நிறுவனமயப்பட்ட, மக்களோடு மக்களாக நிற்கின்ற, சன சமூக நிலையங்கள், சமய நிறுவனங்கள் போன்றவை இதில் கவனம் செலுத்துவதன் மூலம் காத்திரமான பங்களிப்பைச் செய்யலாம். பாரம்பரியக் கலைக் கலைஞர்கள் வாழுங்காலத்திலேயே கௌரவிக்கப்படுவதும், கலைகள் மீது ஈர்ப்பைச் செலுத்தத்தக்கவாறு கவின் கலைகளைப் படைப்பதும், இன்னொரு மறுமலர்ச்சிக் காலத்தைக் கொண்டுவரும்.





# குறை கூறுபவர்களை வாழ்த்துங்கள்

சு.சாரங்கி

உணர்ச்சி வசப்படுதல், கோபப்படுதல், வெற்றிக் களிப்பில் மிதத்தல், தோல்வியில் சுருண்டு விழுதல், பழிவாங்குதல், அடுத்தவர் மீது பழிபோடுதல், எதிலும் குறை காணுதல், சில சமயங்களில் பாராட்டுதல், பிறரை உற்சாகப்படுத்துதல், நம்பிக்கை ஊட்டும்படி பேசுதல் எனப் பலவகைக் குணங்களின் கலவையாக மனிதர்கள் உள்ளனர்.

இந்தக் குணங்களை எந்த நேரத்தில் வெளிப்படுத்துகிறார்களோ அதற்கு ஏற்றாற் போல மனிதர்கள் வேறுபடுகிறார்கள்.

எந்த நேரத்தில் வெளிப்படுத்த வேண்டும் என சுய கட்டுப்பாட்டுடன் இருப்பவர்களை வெற்றிகரமான மனிதர் எனக் கூறலாம்.

எனினும், இதுபோன்ற குணங்களை மனிதன் வெளிக்காட்டாமல் இருந்தால், மனதளவில் பல பாதிப்புகள் வரும் என மனநல ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

அலுவலகத்திலும், வீட்டிலும் நீங்கள் ஏதாவது குறைகூறிக் கொண்டே இருந்தால், என்னடா இந்த மனுஷன், எப்போது பார்த்தாலும் ஏதாவது குறை கூறிக் கொண்டே இருக்கிறார் எனச் சக ஊழியர்களும், வீட்டில் உள்ளவர்களும் நினைப்பதுண்டு. கத்தியைக் கூர் மையாக்க தீட்டுவதுபோல, மனிதனைச் சீரமைக்க, குறை கூறுவது அவசியமாகிறது என்ற முதுமொழியை நினைத்துக் கொள்ளுங்கள், சகித்துக் கொண்டுவிடலாம்.

வீட்டில் மனைவியிடம், இன்று சமையல் சுமார்தான் எனக் கணவர் கூறுகிறார் என வைத்துக் கொள்வோம். சாதாரணமாக மனைவிக்குக் கோபம் வரும். இதனை சற்று மாற்றி யோசியுங்கள். கணவரானவர், வேறு வீட்டுக்கு விருந்துக்குச் சென்றால் சமையல் நன்றாக இல்லாவிட்டாலும், சூப்பர் எனத்தான் கூறுவார். ஏனெனில், விருந்துக்குச்சென்ற வீடு வேறு வீடு. அவர்கள் மனம் புண்படக் கூடாது. அந்த வீட்டில் உரிமை எடுத்துக் கொள்ள இயலாது. ஆனால், மனைவியிடம் உண்மையைக் கூற கணவருக்கு முழு உரிமை உள்ளது. இதனால் சமையலை மேலும் கவனமாகச் செய்ய இயலும்.

நமது குழந்தையை நாம் அடிக்கலாம். தவறு செய்தாலும் பக்கத்து வீட்டுக் குழந்தையை நாம் அடிக்க முடியாது. நமது குழந்தையிடம் நமக்கு உரிமை உள்ளது. அடுத்த வீட்டுக் குழந்தையிடம் நமக்கு உரிமை இல்லை. அதுபோல, கணவர் நம்மைக் குறைகூற உரிமை உள்ளவர் என மனைவி எண்ண வேண்டும். இப்படி புரிந்துகொண்டு வாழ்ந்தால் குடும்பத்தில் பல பிரச்னைகள் தீர்ந்துவிடும்.

ஒரு சிலர் நாம் வகிக்கும் பதவிக்காகவோ, நம்மால் நடக்க வேண்டிய காரியத்துக்காகவோ காரணமின்றிக்கூட புகழ்வார்கள்; அந்தப் புகழ்ச்சியெல்லாம் மயிலிறகால் வருடுவது போலத்தான் இருக்கும்.

அதே சமயம் நம்முடைய நலனில் அக்கறை உள்ளவர்கள் நாம் செய்யும் தவறுகளைத் தயக்கம் இல்லாமல் முகத்துக்கு நேராகச் சுட்டிக்காட்டுவார்கள். அது கல்லால் அடிப்பது போல வலிக்கும்., அதற்காக அவர்கள் மீது கோபப்படுவதும் அவர்களுக்குத் தீங்கு செய்ய நினைப்பதும் நமக்கே தீமையாக முடியும்.

சிரிக்கச் சிரிக்கச் சொல்வார் அயல் மனிதர், அழ அழச் சொல்வார் நம் மனிதர் என்பது மூதுரை. மருந்து கசப்பாக இருந் தாலும் உடலுக்கு நன்மை தரும். இதை வாழ்க்கையில் மறக்கக்கூடாது.

நாம் செய்வது சரியில்லை என்பதை ஒருவர் சுட்டிக்காட்டினால் அது நம்மீது கொண்டிருக்கும் அக்கறையால் என்று கருதி தவறைத் திருத்திக்கொண்டால் அது நமக்குத்தான் நன்மை.

வாழ்க வசவாளர்கள் என்றார் அண்ணா. அது அவருடைய கனிந்த அரசியல் அனுபவத்தால் வந்த பக்குவம். திட்டுகிறவர்கள் யார் என்று பார்க்காமல் திட்டுவதில் உண்மை இருக்கிறதா என்று பார்ப்பதே முக்கியம். எனவே உங்களைப் பார்த்து குறை கூறுபவர்களை மனதுக்குள் வாழ்த்துங்கள்.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** உங்கள் மீது சிலர் வீண்பழி சுமத்துவார்கள். புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும். முன்கோபத்தால் பகை உண்டாகும். வியாபாரத்தில் வேலையாள்களின் ஒத்துழைப்பின்மையால் லாபம் குறையும். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் பனிப்போர் வந்து நீங்கும்.



**இடபம்:** திட்டமிட்ட காரியங்களை அலைந்து, திரிந்து முடிக்க வேண்டி வரும். வியாபாரத்தில் போராடி இலாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் மோதல்களைத் தவிருங்கள்.



**மிதுனம்:** முன்கோபம் விலகும். வியாபாரத்தில் பழைய மிகுதிகளை விரைந்து பெறுவீர்கள். அரச காரியங்களில் அனுகூலம் உண்டு. அயல் வீட்டாரின் ஆதரவு அதிகரிக்கும்.



**கடகம்:** செயலில் வேகத்தைக் காட்டுவீர்கள். மனக்குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் மதிக்கப்படுவீர்கள். மாணவர்களின் நினைவாற்றல் அதிகரிக்கும்.



**சிங்கம்:** வெளியிடத் தொடர்பு அதிகரிக்கும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். மாணவர்கள் உயர்கல்வியில் கூடுதல் கவனம் செலுத்துவார்கள்.



**கன்னி:** வேலைச்சுமையால் உடல் அசதி, மனச் சோர்வு வந்து நீங்கும். சந்தேகப் புத்தியால் நல்லவர்களை இழக்க வேண்டி வரும். சிலரின் ஆசை வார்த்தைகளில் ஏமாந்து விடாதீர்கள். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.



**துலாம்:** தன்னம்பிக்கை துளிர்விடும். தைரியமான முடிவுகளை எடுப்பீர்கள். வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சியுண்டு. உத்தியோகத்தில் திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும்.



**விருச்சிகம்:** திறம்படச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். ஆன்மிகவாதிகளின் சந்திப்பு நிகழும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும். முன்கோபம், வீண் பதற்றம் விலகும்.



**தனுசு:** நம்பிக்கைக்குரியவர்களின் சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் மேலதிகாரி, சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். வியாபாரத்தில் மகிழ்ச்சியுண்டு. மாணவர்களின் எண்ணங்கள் பூர்த்தியாகும்.



**மகரம்:** புதிய முயற்சிகள் வெற்றியடையும். சொத்து சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வு கிடைக்கும். ஆடம்பரச் செலவுகளை குறைப்பீர்கள். வெளியிடத்தொடர்பு அதிகரிக்கும். பணவரவு உண்டு.



**கும்பம்:** யதார்த்தமாகப் பேசி அனைவரையும் வியக்க வைப்பதுடன் தடைப்பட்ட காரியங்களையும் விரைந்து முடிப்பீர்கள். வெளியூர் பயணங்கள் திருப்திகரமாக அமையும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். மாணவரின் நினைவுத்திறன் அதிகரிக்கும்.



**மீனம்:** மனக்குழப்பங்கள் விலகி தெளிவு பிறக்கும். வியாபாரத்தில் மகிழ்ச்சியுண்டு. பெற்றோரின் உடல் நிலை சீராக இருக்கும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். அயல் வீட்டாரின் அன்புத் தொல்லைகள் விலகும்.

## நாளை

**தை-29 செவ்வாய்க்கிழமை | 11.02.2014**

திதி: துவாதசி பி.இ.12.14 வரை
நட்சத்திரம்: திருவாதிரை
மா.06.27 வரை

சுபநேரம்: 11.04-12.34 வரை
இராகுகாலம்:.03.34-05.04 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து... சரணாகதி



முதலில் எங்கும் நிறை பரப்பிரமமாகிய சமஷ்டியிடத்து அன்பு பூணாமல் அதன் ஒரு பகுதியான வியஷ்டியை – உலகை – எப்படி நேசிக்க முடியும்? பொதுப்பட எங்கும் நிறைந்த ஒரு மொத்த நுண்மைப் பொருள்தான் சமஷ்டி, இறைவன். அதன் ஒரு பகுதிப் பொருள்தான் வியஷ்டி. நம்மால் காணப்படுவதாகிய இவ்வுலகம். உலக முழுவதையும் நேசிக்க வேண்டுமாயின் அதனைத் தன்னிடத்தே ஒரு சிறு கூறாகப் பெற்றுள்ள முழுமுதற் பொருளை நேசிப்பதால்தான் இயலும். இவ்வுலகைப் போல கோடிக்கணக்கான, எண்ணற்ற கூறுகளைத் தன்னுள் அடக்கிய பரம்பொருளின் மீது அன்பு செலுத்துவதால் உலகின் மீதும் அன்பு செலுத்த இயலுகிறது. இந்திய நாட்டு மெய்ஞானிகள் இப் பகுதிப் பொருள்களை, கூறுகளை ஆராய்வதுடன் நின்று விடுவதில்லை. மேலோட்டமாக இவற்றை விரைவாக ஒரு பார்வை பார்த்துவிட்டு உடனேயே இக்கூறுகளைத் தன்னுட்கொண்டிருக்கிற முழுப் பொருளைக் காணத் துவங்குகின்றனர். அனைத்துக்கும் பொதுப்பட விளங்கும் முதற் பொருளை, மூலப் பொருளைத் தேடுவது ஒன்றே இந்திய சமயத்தின், மெய்ஞான சாத்திரங்களின் நோக்கமாக உள்ளது. மெய்ஞானி ஒருவன், எந்த ஒன்றை அறிந்தால் எல்லாவற்றையும் அறிந்ததாகுமோ அந்த உண்மைப் பொருளை, பொதுவானதை, முழுத் தொகுதியான முழு முதற் பொருளையே அறிய விளைகிறான். பக்தனோ, எங்கும் நிறைந்த குணங்களில் இருப்பிடமான இறைவனைக் காண விளைகிறான். இறைவனை விரும்புவதன் மூலம் உலகத்தையும் விரும்பியவனாகிறான். யோகி ஒருவன், வரம்பற்ற ஆற்றலை, சக்தி வடிவத்தை அடக்கியாள்வதன் மூலமாக உலகத்தை அடக்கியாள முயல்கிறான். இந்தியருடைய மனம், அதன் வரலாற்றுக் கால முழுவதும் எல்லாவற்றுக்கும் பொதுவாக விளங்கும் முழுமுதற் பொருளைத் தேடுவதிலேயே ஈடுபட்டிருந்தது. விஞ்ஞானம், மனத் தத்துவம், பக்தி, வேதாந்தம் முதலான எல்லாத் துறைகளிலும் அவற்றின் நோக்கம் தோற்றங்களுக்கெல்லாம் முதற்காரணம் எது என்பதைத் தேடுவதாக இருந்தது.

## பிறந்த குழந்தைக்கு ஒரு துளி இரத்தமும் இல்லை



இரத்தமின்றி பிறந்த குழந்தை சிகிச்சையின்போது

உடலில் சிறிதளவு கூட இரத்தம் இல்லாமல் பிறந்த குழந்தை உயிர் பிழைத்துள்ளது. கலிபோர்னியாவின் ஆரஞ்ச் நகரில் கடந்த மாதம், ஜெனிபர் ஜுரேஸ் என்பவருக்கு, குழந்தை ஒன்று பிறந்தது.

பிரசவ காலத்துக்கு மூன்று வாரங்களுக்கு முன்பாகவே பிறந்த இந்தக் குழந்தை, வெளிறிய நிலையில் காணப்பட்டது.

சந்தேகம் அடைந்த மருத்துவர்கள் சோதனை செய்து பார்த்தபோது, குழந்தையின் உடலில் ஒருதுளி இரத்தம் கூட இல்லை என்பது தெரியவந்தது.

மருத்துவர்களின் கணிப்பின் படி இந்தக் குழந்தை சுமார் 80 சதவீத இரத்தத்தை தாயின் கர்ப்பத்திலேயே இழந்துள்ளது. இது கடுமையான இரத்த சோகையைக் குறிக்கிறது.

பிரசவத்துக்கு மூன்று வாரத்துக்கு முன்பே, குழந்தையிடம் எவ்வித அசைவும் இல்லாததால் மருத்துவரை அணுகியுள்ளார் ஜெனிபர். அதனையடுத்து அறுவை சிகிச்சையின் மூலம் குழந்தையும், தாயும் காப்பாற்றப் பட்டனர்.

ஜெனிபரின் முன்னெச்சரிக்கையான நடவடிக்கையே அவரையும்,அவரது குழந்தையையும் காப்பாற்றியுள்ளது என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தக் குழந்தை உயிருடன் பிறந்தது மிகப்பெரிய அதிசயமாக கருதப்படுகிறது. இக் குழந்தையை பரிசோதித்த பிறகே நேரடியாக கருவிலேயே இரத்த இழப்பு ஏற்பட்டுள்ளதை கண்டறிந்தோம் என சாரோன் பிலிகிரிம் என்ற தாதியப்பெண் தெரிவித்துள்ளார்.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 2 | | | | | 1 | | |
| 7 | | 5 | | | 1 | 8 | 4 | |
| | | | | 7 | 3 | 2 | | 9 |
| | | 2 | | 3 | 8 | | | |
| | | 6 | 1 | | 7 | 9 | | |
| | | | 9 | 6 | | 3 | | |
| 9 | | 3 | 7 | 4 | | | | |
| | 1 | 4 | 3 | | | 5 | | 7 |
| | | 8 | | | | | 3 | 2 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 5 | 2 | 3 | 4 | 8 | 1 | 6 | 9 |
| 8 | 6 | 3 | 2 | 1 | 9 | 7 | 4 | 5 |
| 4 | 9 | 1 | 5 | 7 | 6 | 3 | 2 | 8 |
| 9 | 8 | 4 | 7 | 3 | 2 | 6 | 5 | 1 |
| 2 | 1 | 7 | 8 | 6 | 5 | 4 | 9 | 3 |
| 5 | 3 | 6 | 1 | 9 | 4 | 8 | 7 | 2 |
| 1 | 4 | 9 | 6 | 5 | 3 | 2 | 8 | 7 |
| 6 | 7 | 8 | 9 | 2 | 1 | 5 | 3 | 4 |
| 3 | 2 | 5 | 4 | 8 | 7 | 9 | 1 | 6 |

# அனைத்து செயற்பாடுகளிலும் உயர்ந்து நிற்பவர்கள்

# பெண்கள்



ராதிகா

ஆவதும் பெண்ணாலே. அழிவதும் பெண்ணாலே... பெண்ணாகி வந்ததோர் மாயப் பிசாசு... என்றெல்லாம் ஆண்களால் விடுக்கப்பட்டு வரும் எச்சரிக்கைகள் எல்லாம் அவர்களுடைய உள்ளார்ந்த பய உணர்ச்சிகளின் வெளிப்பாடுதான்.

தொடக்கத்தில் ஆண், பெண் இருவரும் சமமானவர்களாகவே எல்லாவிதங்களிலும் வாழ்ந்திருக்கின்றனர். காலப்போக்கில் பெண்கள் பலவீனப்படுத்தப்பட்டனர்.

இருபதாம் நூற்றாண்டில் ஆங்காங்கே பெண்கள் புரட்சிக் குரல்களை எழுப்பித் தமது உத்வேகத்தை வெளிப்படுத்தத் தொடங்கினார்கள்.

ஆனால் அறிவியலாலளர்கள், ஆண்களுக்கில் லாத பல சிறப்புத் திறமைகள் பெண்களிடம் தென்படுவதைக் கண்டறிந்திருக்கிறார்கள்.

உயிரினத்தின் உருவாக்கமும் பராமரிப்பும் முழுக்க முழுக்கப் பெண்ணினத்தின் கையில் தான் இருக்கின்றது. சில அம்சங்களில் ஆணின் திறமை ஓங்கியிருப்பது உயிரினத்தின் பாதுகாப்புத் தேவைகளை முன்னிட்டு இயற்கை கொடுத்துள்ள சலுகை. உடல் வலு சம்பந்தப்பட்ட விஷயங்களில் தக்க பயிற்சிகள் மூலம் பெண், ஆணுக்குச் சமானமாக முடியும். செரினா வில்லியம்சுடன் டென்னிஸ் ஆடி எவ்வளவு ஆண்களால் ஜெயிக்க முடியும்? மேரிகோமுடன் குத்துச்சண்டையில் இறங்க எவ்வளவு ஆண்கள் முன்வருவர்? மனம், மூளை ஆகியவை சம்பந்தப்பட்ட விடயங்களில் இயற்கை ஆணையும் பெண்ணை யும் சமமான நிலை யி லேயே வைத்திருக் கிறது. ஆண்களுக்கு இல்லாத பல சிறப்புத் தன்மைகளையும் பெண்களுக்குக் கொடுத்திருக்கிறது.

அடுக்களையில் ஆழ்ந்திருக்கும் தாய்க்குத் தன் கைக்குழந்தை படுக்கையறையில் லேசாகச் சிணுங்குகிற ஒலிகூடக் கேட்டுவிடும். கல்யாணக் கூட்டத்தில் குழந்தையின் சிரிப்பு அல்லது அழுகையின் ஒலி கேட்டால் அதன் தாய் அந்த ஒலியின் திசையறிந்து குழந்தையை நோக்கி விரைவாள். இது ஆண்களுக்கு இயலாது. ஏனெனில், உயிரினம் தொடங்கிய காலத்திலிருந்தே பசி அல்லது பயத்தால் வீறிடும் குட்டியின் குரலைக் கேட்டு அதன் உதவிக்கு விரையும் உள்ளுணர்வு எல்லாப் பாலூட்டி விலங்கினத் தாய்மார்களின் மரபணுக்களில் பதியப்பட்டுள்ளது.

பெண்களுக்குள்ள மோப்ப சக்தியும் ஆண்களினுடையதைவிட அதிகக் கூர்மையானது. அபாய்கரமான வாயுக்கள் அல்லது நச்சுப் பொருள்களின் வாசனைகள் போன்றவற்றை உடனடியாக உணர்ந்து தன்னையும் தன் குழந்தையையும் காப்பாற்றிக்கொள்ள வேகமாக விலகிச் செல்லும் உந்துதலைப் பெண் விலங்குகள் பெற்றிருக்கின்றன.

அண்மையில் செய்யப்பட்ட ஆய்வுகளின்படி, மொழியைக் கையாளுவதில் கூட ஆண்களைவிடப் பெண்கள் அதிகத் திறமை பெற்றிருப்பது நிரூபணமாயுள்ளது. ஆண் குழந்தைகளைவிடப் பெண் குழந்தைகள் சீக்கிரமாகப் பேசக் கற்றுக்கொண்டு விடுகின்றன. அவர்களின் சொல் வளமும் விரைவாக அதிகரிக்கிறது. அவர்களுடைய பேச்சில் புதிதாகக் கற்றுக் கொண்ட சொற்கள் அதிகமாயிருக்கும்.

மொழித் திறமை பற்றிச் சம வயதுள்ள ஆண் மற்றும் பெண் குழந்தைகளை வைத்துச் செய்யப்பட்ட ஓர் ஆய்வில், ஆண் குழந்தைகளை விடப் பெண் குழந்தைகள் ஒன்றரை மடங்கு அதிகமான லாவகத்துடன் மொழிகளைக் கையாளுவதாகத் தெரிய வந்துள்ளது. ஒரு விஷயத்தைப் பற்றிப் பல கோணங்களில் வர்ணிப்பதையும், வேகமான சம்பாஷணைகளையும், சூசகமான செய்திப் பரிமாற் றங்களையும், இரட்டை அர்த்தமுள்ள கூற்றுகளையும் பெண்கள் அதிக அளவில் புரிந்து கொள்கிறார்கள்.

இத்தகைய மொழித்திறமை வளர்ந்த பின்னரும், பெண்களிடம் நீடிக்கிறது. ஒரே பொருளுள்ள பல சொற்கள், ஒரு சொல்லின் பல்வேறு பொருள்கள் போன்றவற்றைக் கையாளுவதில் ஆண்களைவிடப் பெண்கள் அதிகத் திறமை பெற்றுள்ளனர். சொல் விளையாட்டுகளிலும், குறுக்கெழுத்துப் போட்டிகளிலும் ஆண்களைவிடப் பெண்கள் அதிக அளவில் வெற்றி பெறுகிறார்கள். தாய்மொழி தவிர்த்த மற்ற மொழிகளைப் பயில்வது மற்றும் பயில்விப்பது ஆகியவற்றில் பெண்களே மேலானவர்கள்.

இரு வெவ்வேறு மொழிகளில் மாறி மாறிப் பேசுவதிலும் பெண்களுக்குத் திறமை அதிகம். ஆண்களைவிடப் பெண்களே அதிகத் திறமையான மொழிபெயர்ப்பாளர்களாக விளங்குகிறார்கள்.

பெண்களின் கை விரல்களும் ஆண்களின் கை விரல்களைவிட அதிகச் செயல் திறனுள்ளவை. மெலிந்து நீண்டிருக்கும் விரல்கள் பூத்தொடுப்பது, புள்ளி வைத்துக் கோலம் போடுவது, தட்டச்சுச் செய்வது, கணினித் திரையை இயக்குவது, கைக்கடிகாரங்கள் போன்ற சிறு கருவிகளில் உறுப்புகளைப் பொருத்துவது போன்ற நளினமான வேலைகளை அதிக லாவகத்துடன் செய்கின்றன. அதற்குத் தேவையான பொறு மையும் நெடுநேரக் கவனக் குவிப்புத் திறனும் பெண்களிடம் அதிகமாக உள்ளது. பல நிறுவனங்களிலும் அலுவலகங்களிலும் ஆய்வு செய்த ஓர் அமெரிக்க ஆய்வாளர் குழு, நிர்வாகப் பதவிகளையும் தலைமைப் பொறுப்புக்களையும் வகிப்பதில் ஆண்களைவிடப் பெண்களே அதிக திறமை காட்டுகிறார்கள் என்று குறிப்பிடுகிறது. ஆண் நிர்வாகிகளைவிடப் பெண் நிர்வாகிகளின் எண்ணிக்கை மிக மிகக் குறைவாக இருப்பதன் காரணமாக இந்த அம்சம் பரவலாகக் கவனிக்கப்பட வில்லை. பல வெற்றிகரமான ஆண் நிர்வாகிகளின் சாதனைக்குப் பெருமளவு காரணமாயிருப்பது அவர்களுடைய தனி உதவியாளர்களாகவும் செயலர்களாகவும் திறமைமிக்க பெண்களை நியமித்துக் கொண்டதுதான் என அந்த ஆய்வுக் கருத்துத் தெரிவிக்கிறது. பல ஆண் நிர்வாகிகள் சிக்கலான சந்தர்ப்பங்களில் தமது மனைவி அல்லது தோழியிடம் கலந்தாலோசிப்பதுண்டு என ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

பெண் நிர்வாகிகள் சிறப்பாகச் செயல்படப் பல காரணங்கள் குறிப்பிடப்படுகின்றன. ஆண்களைவிடப் பெண்கள் அதிகமான சிநேக பாவத்தைக் காட்டுகிறார்கள். அதிகமாகப் புன்னகை புரிகிறார்கள். எதிரிலிருப்பவரின் கண்களைப் பார்த்துப் பேசுகிறார்கள். எதிரிலிருப்பவர் பேசும்போது குறுக்கீடு செய்யாமல் முழுமையாகக் கேட்டுவிட்டுப் பிறகே தமது கருத்தை வெளியிடுகிறார்கள். பெண்களுக்கு மற்றவர் மனதை நோகடிக்க மனம் வராது. ஒருவர் கூறும் தகவல் தவறு என்று தெரிந்தால் அதை இங்கிதமாகவும் நாசூக்காகவும் சொல்லித் திருத்துவார்கள். எதிரிலிருப்பவரின் முகபாவம், உடலசைவுகள், குரல் தன்மை போன்றவற்றில் ஏற்படும் மாற்றங்களை உணர்ந்து அவருடைய மனதில் ஓடும் எண்ணங்களைக் கண்டுபிடிக்கும் திறமை பெண்களுக்கு அதிகம். அதேநேரத்தில், தமது உணர்வுகளை முகத்தில் காட்டாமலிருக்கப் பெண்கள் முயலுவதில்லை.

பெண்மை வாழ்கவென்று கூத்திட வேண்டாம். பெண்கள்தான் மேலானவர்கள் என்று ஒப்புக்கொண்டு, ஆண்கள் அடக்கத்துடனும், பொறுமையுடனும், பண்புடனும் நடந்துகொண்டு ஆண் வர்க்கத்துக்கு பெருமை சேர்க்க வேண்டும்.

# பெண் ஏன் அடக்கப்பட்டாள்..? ஏன் ஒடுக்கப்பட்டாள்..?

*சென்ற வாரத் தொடர்.......*

மனிதன் விலங்குகளில் இருந்து தன்னைக் காப்பாற்றிக்கொள்ளும் நிலை வந்தாலும்கூட மாதவிலக்கு என்று பெண்ணைத் தனியாக பாதுகாப்பாக விடுவதற்கும், மாதவிலக்கு நாள்களில் பெண் தனியே வெளியே போனால் பேய் பிடிக்கும் என்று சொன்னதற்குமான அடிப்படைக் கார ணிகள் இவையே. அங்கே பிடிக்கப் போவது பேயல்ல, விலங்குகள். ஆதி காலத்தில் - அந்த நேரத்தில் விலங்குகளிடமிருந்து பெண்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவே பெண்களிடம் ஒரு பெரிய இரும்பைக் கொடுத்து வைத்தார்கள். இங்கே இரும்பு ஒரு தற்பாதுகாப்பு ஆயுதமாகவே இருந்தது. சில இடங்களில் உலக்கையையும் கொடுத்தார்கள். இன்று மாதவிலக்கான பெண்களைத் தேடி வரும் தொலைவில் விலங்குகளே இல்லை. மிருகக்காட்சிச் சாலையில் விலங்குகளை அடைத்துக் காட்சி வைக்கும் அளவுக்கு அவைகளை எமது கட்டுப்பாட்டுக்குள் வைத்து விட்டு வாழ்கிறோம். இந்த நிலையில் ஏன் எதற்கு என்ற சிந்தனைகள் எதுவுமின்றி இன்றும் இப்படியான அர்த்தமற்ற செயற்பாடுகள் தொடர வேண்டிய அவசியமில்லை.

ஏட்டில் எழுதிய நாம் இன்று கணினியில் எழுதுகிறோம்.

புறாவைத் தூது விட்ட நாம் மின்னஞ்சலில் அசத்துகிறோம்.

பெண்ணை மட்டும் அடங்கு என்று சொல்ல இன்னும் என்ன நாம் காட்டிலா வாழ்கிறோம். அல்லது எம்மைச் சுற்றி விலங்குகளா நடமாடுகின்றன.


காட்டு வாழ்க்கையை விட்டு நாட்டில் வீடு கட்டி பாதுகாப்பாக வாழும் நிலைக்கு நாம் என்றோ வந்து விட்டோம்.

இருந்தும் மூளையில் பதியப் பட்ட அடிப்படையான ஆதிகாலப் பிரச்சனையைக் கருத்தில் கூடக் கொள்ளாமல் இன்னும் பெண்கள் வீட்டுக்குள் ஒடுங்க வேண்டியவர்கள்தான் எனக் கண்மூடித் தனமாக் கருதுகிறோம்.

அன்று சூழல்நிலை கருதி - பாதுகாப்புக் கருதி குழந்தை பெற்ற பெண்கள்... வீட்டினுள் தங்கினார்கள் என்றால், இன்று அந்த எந்தக் காரணங்களும் இல்லாமலே பெண்கள் வீட்டுக்குள் அடங்க வேண்டுமென நினைக்கிறோம்.

ஓர் ஆணின் மூளை ஒரு பெண்ணின்; மூளையை விட 130கிராம் நிறை அதிகமானது. ஆனால் இரு மூளைகளினதும் செயற்பாடுகள் - ஆதிகாலத்திலிருந்து இன்று வரைக்குமான சூழ்நிலைகளுக்கும் வாழ்க்கை முறைகளுக்குமேற்ப இசைவாக்கம் பெற்று வெவ்வேறு வழிகளில் செயற்படுகின்றன. இங்கு ஆண் உசத்தி என்றோ பெண் உசத்தி என்றோ எதுவும் இல்லை.

அன்றைய காலத்தில் தேவை கருதி வீட்டுக்குள் இருந்த பெண்களிடமிருந்து மெதுமெதுவாக சுகங்களை அனுபவிக்கத் தொடங்கிய ஆண்கள் ஒரு காலகட்டத்தில் பெண்களை வெறும் சுகபோகப் பொருள்களாகவே பாவிக்கத் தொடங்கி விட்டார்கள். சுயநலம் கருதி உளவியல் ரீதியான தாக்கத்தைக் கொடுத்து பெண்களை அடிமைப் படுத்தியும் விட்டார்கள். இதனால் வீட்டுக்குள்ளேயே இருந்து இருந்து இசைவாக்கம் பெற்ற மூளையிடமிருந்து விடுதலை பெற முடியாத பெண்கள் - தாம் வீட்டுக்குள் முடங்க வேண்டியவர்கள்தான் என்று நினைத்து விட்டார்கள். அடங்கி அடங்கியே வாழ்ந்ததால் தாம் அடங்க வேண்டியவர்கள்தான் என நினைத்து தமக்குத் தாமே விலங்கிட்டு அடங்கியும் விட்டார்கள். இதே நேரம் இவையெல்லாம் பிழை. முன்னர் நாம் வீட்டுக்குள் முடங்க வேண்டியதற்கு காரணங்கள் இருந்தன. இன்று வெளியே சென்றாலும் எம்மால் எம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும். என்று சில பெண்கள் சிந்திக்கவும் தவறவில்லை. சிந்திக்கத் தொடங்கிய இப் பெண்களின் விழிப்பு நிலையே இன்று சில ஆண்க ளுக்குப் பிரச்சனையாக இருக்கிறது. பெண்களிடம் ஏற்பட்ட இந்த மாற்றத்தை ஆண்களின் மூளை ஏற்றுக் கொள்ள முடியாமல் திண்டாடுகிறது. இந்த உண் மைக் காரணங் களை ஆண் பெண் இருபாலாரும் உணர்ந்து செயற்படும் பட்சத்தில் இந்தப் பெண்ணடிமை, பெண் அடக்கு முறை, பெண்ணை இரண்டாந்தரப் பிரஜையாக எண்ணும் தன்மை எல்லாமே அர்த்தமற்ற செயல் கள் என் பது நன்கு புலப்படும். (வளரும்)



சந்திரவதனா

**இரு மூளைகளினதும் செயற்பாடுகள் – ஆதிகாலத்திலிருந்து இன்று வரைக்குமான சூழ்நிலைகளுக்கும் வாழ்க்கை முறைகளுக்குமேற்ப இசை வாக்கம் பெற்று வெவ்வேறு வழிகளில் செயற்படுகின்றன. இங்கு ஆண் உசத்தி என்றோ பெண் உசத்தி என்றோ எதுவும் இல்லை.**

## புதனன்று கும்பாபிஷேகம்

பருத்தித்துறை, கோட்டுவாசல் அருள்மிகு ஸ்ரீசண்டிகா பரமேஸ்வரி அம்பாள் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 6.34 மணி முதல் 7.30 மணி வரை யிலான சுபவேளையில் நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத்துக்கான கிரியைகள் கடந்த 6 ஆம் திகதி முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. பக்தர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்துதல் நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை இடம்பெறும். இந்தக் கும்பாபிஷேகத்தை உரும்பிராய் சிவ தர்ம சாஸ்த்தா ஆதீனத்தைச் சேர்ந்த சபரிமலை குரு சுவாமி பிரம்மஸ்ரீ தாணுவாசுதேவ சிவாச்சாரியார் பிரதிஷ்டா பிரதம குருவாக இருந்து நடத்தி வைப்பார். கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 48 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும். (ந-173)

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 11.01.2014 சனிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

**அமரர் கந்தசாமி இராமலிங்கம்**


(முன்னாள் உரிமையாளர்-நாகபூசணி விலாஸ், மன்னார்)

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (10.02.2014) திங்கட்கிழமை மு.ப.10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். மேலும் அன்னாரின் மறைவுச் செய்தியறிந்து உடன் வந்து உதவிகள் புரிந்து ஆறுதல் தெரிவித்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இல.611, புதிய தெரு,உப்புக்குளம், மன்னார். (சி/11485)(3.6.4) குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
13 ★ 08 ★ 1937



மறைவு
12 ★ 01 ★ 2014

**அமரர் வேலுப்பிள்ளை செல்லையா**

அன்னாரின் மரணச்செய்தி கேட்டு நேரடியாகவும், தொலைபேசி மூலமாகவும் ஆறுதல் கூறியவர்களுக்கும், மரணச் சடங்கில் கலந்து கொண்டு உதவியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கடந்த 12.01.2014 சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் வேலுப்பிள்ளை செல்லையா அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (11.02.2014) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கே.கே.எஸ்.றோட்,
வல்வெட்டித்துறை. (44519)(3.6.4) குடும்பத்தினர்.

# நிலுவையுடன் ஓய்வூதியம் வழங்குவதற்கு ஏற்பாடு

### மின்சார சபைக்குள் உள்வாங்கப்பட்டவர்களுக்கு

கொழும்பு, பெப்.10

உள்ளூராட்சிச் சபைகளில் இருந்து இலங்கை மின்சார சபைக்குள் உள்வாங்கப்பட்ட தகுதியுள்ள அனைவருக்கும் அவர்கள் உள்வாங்கப்பட்ட திகதியிலி ருந்து ஓய்வூதியம் கிடைக்கக் கூடிய வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னர் உள்ளூராட்சிச் சபைகளும் மின்சார விநியோகத்தில் ஈடுபட்டன. இந்த நிலையில் இலங்கை மின்சாரசபை உள்ளூராட்சிமன்றங்களால் மேற்கொள்ளப்பட்டு வந்த மின் விநியோகத் திட்டங்களைப் படிப்படியாகப் பொறுப்பேற்று வந்தது.

ஆனால் இலங்கையின் வட பகுதியில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் இந்தச் செயற்பாடு தாமதமடைந்தது. இருந்த போதிலும் 1998 ஆம் ஆண்டு தொடக்கம் மின்சார சபை யாழ்ப்பாணத்திலுள்ள உள்ளூராட்சி மன் றங் களின் மின்சார விநியோகச் செயற்பாடுகளை பொறுப்பேற்க ஆரம்பித்தது. இதனால் உள்ளூ ராட்சி மன்றங்களில் பணிபுரிந்த மின்சார விநியோகத்துக்குரிய ஆளணியினர் தமது பதவிகளிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர் இலங்கை மின்சார சபைக்குள் உள்வாங்கப்பட்டனர். நாட்டின் ஏனைய பிரதேசங்களில் இவ்வாறு உள்வாங்கப்பட்டவர்களுக்கு உள்வாங்கப்பட்ட திகதியிலிருந்து அவர்களது ஓய்வூதியம் வழங்கப்பட்டது. அத்தோடு மின்சார சபையில் கடமையாற்றுவதற்கான வேதனத்தையும் பெற்றுக் கொண்டனர்.

ஆனால் யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்தவரை இந்த நடைமுறை பின்பற்றப்படவில்லை. இவர்கள் மின்சார சபையிலிருந்து ஓய்வு பெற்ற பின்னரே அவர்களது உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றிய காலத்துக்கான ஓய்வூதியம்வழங்கப்பட்டது. இதனை எதிர்த்து கொழும்பு மேல் முறையீட்டு நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது. இதன் பயனாக யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தைச் சேர்ந்த 29 பணியாளர்களுக்கு அவர்கள் மின்சார சபைக்குள் உள்வாங்கப்பட்ட திகதியிலிருந்து நிலுவையுடன் ஓய்வூதியம் வழங்கப்பட்டது. ஆனால் மேலும் நூற்றுக்கணக்கானவர்கள் ஓய்வூதிய நிலுவையை இதுவரை பெறமுடியாத நிலையில் உள்ளனர். இவர்களில் ஒரு தொகுதியினர் கொழும்பு மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தனர். இந்த வழக்கு கடந்த இரண்டு வருடங்களாக நடைபெற்று வந்த நிலையில் கடந்த 31 ஆம் திகதி இடம்பெற்ற வழக்கு விசாரணையின்போது நீதிமன்றில் சட்டமா அதிபரின் சார்பில் சமுகமளித்த உயர் அதிகாரி ஒருவர் வழக்குத் தாக்கல் செய்தவர்களை விட வேறு பலருக்கும் அவர்கள் மின்சார சபைக்குள் உள்வாங்கப்பட்ட திகதியிலிருந்து ஓய்வூதியம் நிலுவையுடன் வழங்க வேண்டியுள்ளதாகவும் அதற்கு அமைச்சரவையின் அனுமதி யைப் பெற வேண்டியுள்ளதாகவும் தெரிவித்தார். இதனையடுத்து ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதிக்கு வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (க)

## விழிப்புணர்வு கருத்தரங்கு

யாழ்ப்பாணம், கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் கிராமிய சுகாதாரத் திட்டம் தொடர்பாக பிரதேச உத்தியோகத்தர்களுக்கு விழிப்பூட்டும் வகையில் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் 12 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நல்லூர் பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் இந்த விழிப்புணர்வுக் கருத்தரங்கு நல்லூர் பிரதேச செயலர் பூ.செந்தில் நந்தனன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஒ-7)

### கலைஞர் விவரம் திரட்டல்

வலி. தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கலைஞர்களின் விவரங்கள் கோரப்பட்டுள்ளன.

பிரதேசம் சார்ந்த கலைஞர்கள் தமது விவரங்களை பிரதேச செயலகத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று எதிர்வரும் ஏப்ரல் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ந-14)

## மரண அறிவித்தல்



**திருமதி இராசம்மா தம்பிஐயா**

கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா தம்பிஐயா 08.02.2014 சனிக்கிழமை கோண்டாவிலில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிஐயாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புச் சகோதரியும், சந்திரவதனா, கணேஸ்வரன்(பிரான்ஸ்) ஆகியோரின் தாயாரும், கணேசபிள்ளை, காலஞ்சென்ற மங்கையர்க்கரசி ஆகியோரின் மாமியும், சதீஸ்குமார் (சுவிஸ்), சுகுமார்(கனடா), கலைமதி, சுரேஸ்குமார், சபேஸ்குமார்(லண்டன்), வத்சலா(ஜேர்மனி), ரஜனி(சுவிஸ்), மஞ்சுளா (கனடா), நேரு(படப்பிடிப்பாளர்), தர்சினி, செல்வம்(ஜேர்மனி), சுமித்தா(பிரான்ஸ்), சுகாசன், ஜீவகுமார்(பிரான்ஸ்), காயத்திரி (கனடா) ஆகியோரின் பேர்த்தியும், கிவிசன்(சுவிஸ்), பவித்திரன் (சுவிஸ்), பூஜா(கனடா), மதீசன், தனுசன், சிந்துஜா, சங்கீதா, சதுர்ஜனன், கம்சா, லிபிசன், அபிநயா, தனோஜன்(ஜேர்மனி), சஜீவன், டிலக்ஷனா, அஸ்வின்(பிரான்ஸ்), ரியானா, மகீனா(கனடா) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.02.2014) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் மு.ப.11.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோண்டாவிலில் உள்ள கட்டைஆலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஞானவைரவர் வீதி,
கோண்டாவில் கிழக்கு.
T.P: 021 221 2164,
075 039 7975 (44527)(4.6.3)

தகவல்:
குடும்பத்தினர்
மகன்-கணேஸ்வரன்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி





அமரர்
**சிவபாக்கியம் முத்துக்குமாரசுவாமி (JP)**
(Rtd.Assistant Commissioner of Labour,
Notary Public, Sworn Translator)
திதி: பீம ஏகாதசி 10.02.2014

அமரர்
**முத்தையா இரத்தினசபாபதி**
திதி: உத்தான ஏகாதசி
13.11.2013

அமரர்
**இரத்தினசபாபதி மகேஸ்வரி**
திதி: பீம ஏகாதசி
21.02.2013

எமது குடும்பத் தெய்வங்களின் முதலாம் ஆண்டு சிராத்த தின ஆத்மசாந்திப் பிரார்த்தனை எமது இல்லத்தில் இன்று (10.02.2014) திங்கட்கிழமை மு.ப. 10.00 மணியளவில் நடைபெறும். அன்னார்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி!

புகையிரத நிலைய வீதி,
கோண்டாவில் மேற்கு.

குடும்பத்தினர்.

(44489) (7.6.3)

## மரண அறிவித்தல்

### திருமதி தனலட்சுமி தேவராஜா



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தனலட்சுமி தேவராஜா (07.02.2014) அன்று அகால மரணமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிமுத்து - தில்லைநாயகத்தின் மகளும் காலஞ்சென்ற ஐயாத்துரை - சின்னத்தங்கத்தின் மருமகளும் தேவராஜாவின் அன்புமனைவியும் காலஞ்சென்ற வேமாவதி மற்றும் பாலசுப்பிரமணியம் (கனடா) காலஞ் சென்ற வர்களான பாலசண்முகம், சகுந்தலாதேவி, பாலவடிவேல் (கொழும்பு) ஆகியோரின் அன்புச்சகோதரியும் நிருஜாவின் (ஆசிரியை யா/ மகாஜனக்கல்லூரி தெல்லிப்பழை) அன்புத்தாயும் செந்தூரனின் (ஆசிரியர் யா/ சென் ஜோன்ஸ் கல்லூரி யாழ்ப்பாணம்), பவநிலானின் (மாணவன் யா/ சென் ஜோன்ஸ் கல்லூரி யாழ்ப்பாணம்) அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று முன்தினம் (08.02.2014) சனிக்கிழமை அன்று நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கணேஸ்வரம் அளவெட்டி

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### கந்தையா ரகுநாதன்



திருநகர் வடக்கு கிளிநொச்சியைப் பிறப்பிடமாகவும் தற்போதைய வசிப்பிடமாக குட்செட் றோட் வவுனியாவைக் கொண்டவருமாகிய கந்தையா ரகுநாதன் கடந்த (07.02.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற தம்பு கந்தையா மற்றும் சின்னம்மா (பளை அம்மா) தம்பதியரின் அன்பு மகனும், லதா (முன்னாள் கிளி/ மத்திய கல்லூரி ஆசிரியை, தற்பொழுது பூவரசங்குளம் மகா வித்தியலாய ஆசிரியை) வின் அன்புக் கணவரும்,ஆனந்தராசா (இயக்குநர்,அகில இலங்கை பரஸ்பர சகாய நிதிச் சங்கம்) காலஞ்சென்ற தெய்வநாயகி தம்பதியரின் அன்பு மருமகனும்,யோகராணி (அரச முதியோர் இல்லம், கைதடி) ,காலஞ்சென்ற நிர்மலாதேவி (ஆசிரியை), தேவராசா (டோகா), காலஞ்சென்ற பாபு (கண்ணன்), திரவியநாதன் (மாங்குளம்),காலஞ்சென்ற பாலகிருஷ்ணன் (சின்னக் கண்ணன்), நிமலராணி கெங்கேஸ்வரன் (வேரவில்), பவநாதன் (பவன் ,கிளிநொச்சி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.
அன்னாரின் இறுதிச் சடங்குகள் இல. 23 அணைக்கட்டு வீதி (பண்ட்றோட்) திருநகர் வடக்கு கிளிநொச்சி என்னும் முகவரியில் நடைபெற்று, திருநகர் இந்து மயானத்துக்கு பி.ப 3.00 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

23, அணைக்கட்டு வீதி, பண்ட்றோட்,
திருநகர் வடக்கு, கிளிநொச்சி.

தகவல்:- க. சின்னம்மா (தாய்)
(பளை அம்மா)

# நற்சிந்தனை இசைப்போட்டிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்.பெப்.10

யாழ்ப்பாணம் சிவதொண்டன் சபையினர் யோகர் சுவாமிகளின் ஐம்பதாவது ஆண்டு குருபூசையை முன்னிட்டு மாணவர்களுக்கு இடையிலான நற்சிந் தனை இசைப் போட்டி களை நடத்தவுள்ள னர்.

தரம் 6 தொடக்கம் தரம் 9 வரை யான மாண வர்கள் மத்திய பிரி விலும், தரம் 10 தொடக்கம் தரம் 13 வரையான மாண வர்கள் மேற்பிரிவி லும் பல் கலைக்கழக மாணவர்களுக் கான திறந்த போட்டியும் நடத்தப்படவுள்ளன.

போட்டியில் கலந்து கொள்ள வுள்ள மாண வர்கள் எதிர் வரும் 15 ஆம் திகதிக்கு முன் னர் விண்ணப்பிக்கு மாறு அறி விக்கப்பட் டுள்ளது. (வ-9)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**வகுப்புக்கள்**

தரம் 3, 4, 5 புலமைப்பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளி களைப் பெறக்கூடிய வகையில் பட்டதாரி ஆசிரியரினால் வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும்.

தொடர்பு : 077 7112406, 077 9217997

**நாய்க் குட்டி விற்பனைக்கு**

60 நாள் நிரம்பிய ஜேர்மன் செப்பட் நாய்க் குட்டிகள் ஊசி போட்டப்பட்ட நிலையில் ஆவணங்களுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- 077 1510306

## மரண அறிவித்தல்

### சதாசிவக்குருக்கள் நித்தியானந்தக்குருக்கள்

(பருத்தித்துறை கோட்டுவாசல் அம்மன் கோயில் பிரதமகுருக்கள்)



பருத்தித்துறையைச் சேர்ந்த சதாசிவக்குருக்கள் நித்தியானந்தக் குருக்கள் நேற்று முன்தினம் (08.02.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.02.2014) திங்கட்கிழமை அரியாலையில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 2 மணியளவில் தகனக்கிரியைக் காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

24/1 சாத்திரியார் லேன், அரியாலை.

தகவல்:
குடும்பத்தினர்

## JAFFNA COLLEGE
### Primary School Sports Meet

**Will be held on**
**Tuesday the 11th February 2014**
**at 1.30 p.m**
**in the**
**Bicknell Grounds**

Chief Guest
Miss.A.S.Mariyampillai
(Divisional Education Officer Chankanai Division)

Alumni Parents Friends and well wishers are cordially invited.

Supervisor (c/1493)(3.6.4) Principal

# மரண அறிவித்தல்

## யோசேப் யோண்சிங்கம்



[ஓய்வுபெற்ற சிறைச்சாலை களஞ்சியப் பொறுப்பாளரும்,
பிரபல சமூக சேவையாளரும்,கூட்டுறவாளரும், சமாதான நீதிவானும்,
பிறைட் ஒக்ஷன் சென்ரர் உரிமையாளரும்]

உயரப்புலம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், இல.275, பிரதான வீதி, யாழ்ப் பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட யோசேப் யோண்சிங்கம் நேற்று முன்தினம் (08.02.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யோசேப்-நல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சூசைமுத்து-பரிமளம் தம்பதியரின் அன்பு மருமகனும், அமிர்தரத்தினத்தின் (ரதி) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான அருளானந்தம் (யேசிங்கம்), அல்பிறட் (இராஜசிங்கம்), டேவிற் (வன்னியசிங்கம்) மற்றும் இராசமலர், இராசராணி (பட்டு-லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் யோண்கொலின்ஸ் (இரசாயனவியல் ஆசிரியர்), யோண் றொபின் (ASA பொறியியல் நிறுவன சாரதி), அமுதினி (மைலா), Dr. ஜோண்பிரகாஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், எட்வின் இருதயராஜா (சுரேஸ்-முகாமையாளர் ஹேலீஸ் அக்ரிகல்சர் சென்ரர், யாழ்ப்பாணம்), சண்முகப்பிரியா, ஆன்ஜனனி (சிந்து) ஆகியோரின் பாசமிகு மாமனும், றோசா, மேரியம்மா, மரீனா, எட்வின், றவி(லண்டன்), பரம்சோதி (கோப்பாய் ஆசிரியர் கலாசாலை) ஆகியோ ரின் மைத்துனரும், மிதுலன், யோண்சன், சானுஜன், அபிஷனா, டெறிக்சன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10.02.2014) திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் உயரப்புலம், ஆனைக்கோட்டையில் அமைந்துள்ள அவரது தாயாரின் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு, ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, காக்கைதீவு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**உயரப்புலம்,**
**ஆனைக்கோட்டை.**
**077 915 4222, 077 753 1378** (44572) (7.8.3)

தகவல் :
**குடும்பத்தினர்.**

# கைவிடப்பட்டது பணிப் புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், பெப்.10

வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்கம் விடுத்த கோரிக்கைகளை சம்பளங்கள் மற்றும் ஆளணிகள் ஆணைக்குழு ஏற்றுக் கொண்டதாக அறிவித்துள்ளதை அடுத்து இன்று திங்கட்கிழமை தொடக்கம் அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் நடத்தவிருந்த தொடர் பணிப் புறக்கணிப்பு போராட்டம் கைவிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவினால் கடந்த 6 ஆம் திகதி சங்கத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் சாதகமான தீர்வைக் குறிப்பிட்டுள்ளதால் பணிப் புறக்கணிப்பு போராட்டம் கைவிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள மேற்படி கடிதத்தில் - ஏற்கெனவே தமது இரண்டாவது வினைத்திறன் காண் பரீட்சையில் சித்தி பெற்றவர்களில் ஆறு வருட சேவையைப் பூர்த்தி செய்த வகுப்பு III யைச் சேர்ந்த அபிவிருத்தி உத்தியோகத்தர்களை வகுப்பு II இற்கு உடனடியாக பதவியுயர்வு வழங்குவதாகவும், பரீட்சையில் சித்திடையாத உத்தியோகத்தர்களுக்கு வகுப்பு III இற்குரிய வருடாந்த கொடுப்பனவு அதிகரிப்பு தொடர்ச்சியாக வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான பொதுக் கூட்டத்தை நடத்தி அதன் அடிப்படையில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் எதிர்காலம் அமைக்கப்படும் என்றும் சங்கத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## மைதானம் கையளிக்கும் நிகழ்வு இன்று

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் 400 மீற்றர் ஓடுபாதையுடன்கூடிய மைதானம் கையளிக்கும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரிமண்டபத்தில்நடைபெறவுள்ளது.

பழைய மாணவ சங்கத் தலைவர் எந்திரி வி.உமாபதி தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து கொள்வர். (ந-)

## கூட்டம்

யாழ்.மாவட்ட சுற்றாடல், சட்ட நடைமுறைப்படுத்தல் குழுக் கூட்டம் நாளை செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு மாவட்டச் செயலக மண்டபத்தில் இடம்பெறுமென யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் அறிவித்துள்ளார். (ந-9)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர் திருமதி விஜிதா சிவாஸ்கரன்
அவர்களின் அன்புத் தாயார்

திருமதி தெய்வி சின்னட்டியன்

06.02.2014 அன்று இறைபதம் அடைந்தமையையிட்டு, அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/வலந்தலை தெற்கு அ.மி.த.க.பாடசாலை, காரைநகர்.
(சி.11490) (45.6.3)

## மரண அறிவித்தல்

### கத்லீன் ஜெபமலர் முத்தையா

[சகோதரி மலர் முத்தையா]



இலங்கை பெந்தேகோஸ்தே சபையில் ஊழியம் செய்து கொண்டிருந்த சகோதரி கத்லீன் ஜெபமலர் முத்தையா (சகோதரி மலர் முத்தையா) 07.02.2014 வெள்ளிக்கிழமை மகிமைக்குள் பிரவேசித்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கே.பி. முத்தையா-ஜெபமணி (இளைப்பாறிய ஆசிரியை, யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) தம்பதியரின் அருமைப் புதல்வியும் திருமதி ஜெபராணி தம்பையா (UK), காலஞ்சென்ற ஈனோக் ஜெபராஜா, திருமதி ஜெபதேவி-தர்மராஜா (Canada), சாமுவேல் ஜெபானந்தன் (U.S.A) ஆகியோரின் அருமைச் சகோதரியும் ஆவார்.

அவரின் அடக்க ஆராதனை இன்று (10.02.2014) திங்கட்கிழமை இல. 111, கண்டி வீதி, சுண்டுக்குளி இலங்கை பெந்தேகோஸ்தே சபைச் சாலையில் பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெற்று அடக்க ஆராதனை கொட்டடியில் அமைந்துள்ள சேமக்காலை யில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்.
(44568) (7.6.3)

## மரண அறிவித்தல்

### திருமதி கண்மணி நல்லையா

புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகவும், அச்செழுவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கண்மணி நல்லையா நேற்று (09.02.2014) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லையாவின் அன்பு மனைவியும், ராஜரட்ணம், அன்னலட்சுமி,செல்வரட்ணம், விஜயரட்ணம், பாக்கியலட்சுமி ஆகியோரின் அன்புத்தாயும், யசோதாதேவி, தியாகராஜா, அமிர்தாஞ்சனி, சந்திரகுமாரி, ஆனந்தன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (10.02.2014) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் இடம் பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்செழு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அச்செழு.
077 559 9441
(செல்வம் - மகன்)

தகவல் :
ந-செல்வரட்ணம்
(மகன்)
(44569) (7.6.3)

## மரண அறிவித்தல்கள்

### முருகேசு சற்குணம்

[முன்னாள் பொதுமுகாமையாளர் - ப.நோ.கூ.ச]



நவாலி தெற்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், உப்புமாவெளி, அளம்பில் முல்லைத்தீவை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு சற்குணம் 08.02.2014 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு -கண்மணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பண்டாரம்-சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், யோகாம்பிகையின் அன்புக் கணவரும், மதன், மதனி (கனடா), ஸ்ரீகரன் (இந்தியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், கணேசமூர்த்தி, சாந்தகுமாரி ஆகியோரின் அன்பு மாமனும், கஜேந்தினி, யோகனா, கஜீவன், ஜொனாத்தன், ரம்யா, கஜவதனி ஆகியோரின் அன்புப் பேரனும், புஸ்பமலர், காலஞ்சென்ற ஞானரட்ணம் மற்றும் புஸ்பராஜா, காலஞ்சென்ற சுகந்தசீலன் மற்றும் சறோஜினிதேவி, ஞானதேவி, காலஞ் சென்ற பத்மினிதேவி மற்றும் நிர்மலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் அடக்க ஆராதனை நாளை (11.02.2014) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்துக்காக உப்புமாவெளி பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உப்புமாவெளி,
அளம்பில், முல்லைத்தீவு.

தகவல் :
மதன் (மகன்)
077 032 4020
(44568) (7.6.3)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

11.01.2014 சனிக்கிழமை
சிவபதமடைந்த
எங்கள் அன்புத் தெய்வம்
அமரர்
மயில்வாகனம்
சபாரெத்தினம்
(ஓய்வுபெற்ற அதிபர்)

தோற்றம்:
01★07★1939

மறைவு:
11★01★2014



அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள்
இன்று (10.02.2014) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும்.
இந்நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் சபிண்டீகரணத்திலும்
மு.ப. 11.30 மணியளவில் நடைபெறும் மதிய போசனத்திலும்
குடும்பசகிதம் கலந்து கொள்ளுமாறு அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

(தனிப்பட்ட அழைப்புக் கிடைக்காதவர்கள் இதனைத்
தனிப்பட்ட அழைப்பாக ஏற்று இந்நிகழ்வில் பங்குபற்றுமாறு
தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்)

"இராசபதி"
புத்தூர் வீதி,
மீசாலை வடக்கு, கொடிகாமம்.

மனைவி, சகோதரர்கள்,
மைத்துனர்கள்.

## செல்லப்பா சிவக்கொழுந்து



யாழ்.வடமராட்சி துன்னாலை தெற்கைப் பிறப்பிடமாகவும், தச்சடம்பன் மாங்குளத்தை நிரந்தர வசிப்பிடமாகவும் தற்போது வவுனியா வைரவபுளியங்குளத்தில் வசித்தவருமாகிய செல்லப்பா சிவக்கொழுந்து 08.02.2014 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் செல்லப்பா -அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், நல்லதம்பி-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், முத்துப்பிள்ளையின் அன்புக்கணவரும், சிற்றம்பலம், காலஞ்சென்ற சிவபாக்கியம், பரமேஸ்வரி, புவனேஸ்வரி, காலஞ்சென்ற சண்முகராசா, மகேந்திரலிங்கம், விம லேஸ்வரி, யோகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தந்தையும், மகேஸ்வரி, காலஞ்சென்ற கனகரட்ணம், காலஞ்சென்ற கணவதிப்பிள்ளை, தவறஞ்சினி, முத்துலிங்கம், சிறிதரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சுபேந்திரன், சுபத்திரா, சுஜேந்திரன், வைகுந்தவாசன், கிருஸ்ண ரூபன், கிருஸ்ணபவானி, பாமினி, கௌசல்யா, துளசிகன், லக்ஷ்மிதரன், காலஞ் சென்ற தேவிகா, பிரதீபன், பிரகாஸ், சியாமளன், லுதர்சன், கிருஷிகன் ஆகி யோரின் பாசமிகு பேரனும், றோசன், துஷான், லோசனா, கன்சிகா, அபிநயா, கீர்த்தனா, சஜிந், அஜய், அகீஷரா ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.02.2014) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் இல.03, வைரவர்கோயில் வீதி, வவுனியாவிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தச்சணாங்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T.P: 024 458 8109

தகவல்:
குடும்பத்தினர்.
(சி/11488)(3.6.4)

## மூத்த பத்திரிகையாளர் பிறேம்ஜி காலமானார்



யாழ்ப்பாணம், பெப். 10
மூத்த பத்திரிகையாளரும் பிரபல எழுத்தாளருமான பிறேம்ஜி ஞான சுந்தரம் கனடாவில் நேற்றுக் காலமானார். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் பொதுச் செயலாளராகவும் விளங்கிய இவர் சில மாதங் களாக நோய்வாய்ப்பட்டிருந்தார்.

யாழ். அச்சுவேலியைச் சேர்ந்த இவர் கொழும்பு முகத்துவாரத்தில் வசித்துவந்தவர். இவர் எழுத்தாளராகவும் பேச்சாளராகவும் இருந் துள்ளார். இலங் கையில் முன்னர் வெளிவந்த தேசாபிமானி பத்திரிகை யின் ஆசிரியராகவும் சோவியத்நாடு சஞ்சிகையின் பதிப்பாசிரியராகவும் இருந்தவர். இந்திய இடது சாரி அரசியல் கட்சிகளுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணி வந்தவர்.

இவரது இழப்பு ஊடகத்துறைக்கு ஏற்பட்ட பெரும் இழப்பு என இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முன்னாள் பணிப்பாளர் நாயகமான ஈ.என்.மதியழகன் தெரிவித்தார். இவர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர்சபை முன்னாள் உறுப்பினராக இருந்ததோடு, தமிழ்சேவை ஆலோசகராக விளங்கிய காலத்தில் ஊடகத்துறை சார்ந்த பல பணிகளை ஆற்றியவர். தினகரன் பத்திரிகையின் ஆலோசகராகவும் இவர் பணியாற்றியுள்ளார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் ஆழ்ந்த கரிசனை கொண் டிருந்தவர். இந்திய இடது சாரி அரசியல் கட்சிகளுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணி வந்தவர். (ஓ-4)



## சைக்கிளில் செல்லவும் 'ஹெல்மட்' அணிந்தால் நல்லதுதான்...

சைக்கிளில் செல்லவும் 'ஹெல் மட்' அணிய வேண்டும் என்ற சட்டம் வந்துவிட்டதோ? இன்றைய நிலைமையில், சைக்கிள்களில் செல்வோரும் 'ஹெல்மட்' அணிந்தால் பாதுகாப்புத் தான்! சைக்கிளில் செல்வோர் குறிப்பாக முதியவர்கள் விபத்துக்களில் சிக்கி சாவடைவது அண்மைக் காலத்தில் அதிகரித்துள்ளது. இந்தச் சிறுவனும் பாதுகாப்புக் கருதி சைக்கிளில் பயணிக்கிறார் போலும்! இந்தப் படம் எடுக்கப்பட்டது வன்னியில் - முத்துஐயன்கட்டு கிராமத்தில். (ஓ-21)

# மெய்வன்மைப் போட்டி

தென்மராட்சி,பெப்.10
சாவகச்சேரி கல்வயல் ஸ்ரீசண்முகானந்தா வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய விநாயகமூர்த்தி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

வித்தியாலய அதிபர் இ.ரவீந்திரன் தலைமையில் நடைபெறும் போட்டிகளுக்கு முதன்மை விருந்தினர்களாக சாவகச்சேரி ஆதார மருத்துவமனை ஓய்வு நிலை மருத்துவர் ச.அம்பிகைபாகனும், சிறப்பு விருந்தினர்களாக வித்தியாலயத்தில் கடமையாற்றிய முன்னாள் அதிபர்களான கு.கதிர்காமசேகரர், வ.கைலேஸ்வரன், செ.சிவஞானம் ஆகியோரும் கலந்து கொள்வார்கள். (ந-9)

♦♦♦

தென்மராட்சி,பெப்.10
கைதடி - நுணாவில் அ.த.க.பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் ஆ.தங்கவேலு தலைமையில் நடைபெறும். நிகழ்வில் முதன்மைவிருந்தினராக சு.கிருஷ்ணகுமார், சிறப்பு விருந்தினராக பாடசாலை பழைய மாணவனும், கனடா வாழ் சமூக சேவையாளருமான பொன். கந்தையாவும் கலந்துகொள்வார்கள். (ந-9)

♦♦♦

தென்மராட்சி,பெப்.10
மந்துவில் றோ.க.த.க. பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை செவ்வாய்க்கிழமை பி.ப.1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

பாடசாலை அதிபர் கி.பவனேந்திரன் தலைமையில் இடம்பெறும் போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய ஓய்வு நிலை ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் த.ஸ்ரீஸ்கந்தராஜா கலந்து கொள்வார். (ந-9)

## எஞ்சக் கதைகள் கொஞ்சம்.......

செல்வ வேலாயுதம்

### சந்தைப்படுத்தல் சங்கடங்கள்

பெண் பிள்ளைகளுக்குத் திருமணம் செய்து வைத்தவர்கள் "குமர் ஒருமாதிரிக் கரை சேர்ந்துவிட்டது" என்று சொல்வதுண்டு. யாழ். மாவட்டத்தில் சாகுபடி செய்யப்பட்ட உருளைக்கிழங்குக்கும் பத்திலை வியாழன் போலும், பாத்தியை விட்டுக் கிளம்பி மாவட்டத்தைத் தாண்ட ஆரம்பித்துள்ளது. எத்தனையோ கண்டங்களைத் தாண்டி இந்த மண்ணில் விளைந்த உருளைக்கிழங்கு சந்தைப்படுத்தப்பட்டு வருகிறது. கப்பல் மூலம் ஒரு காலத்தில் கொண்டு வரப்பட்ட உருளைக்கிழங்கை கிடுகுக் கொட்டில் அமைத்து, மணல் பரவிய தரையில் இரண்டு மாதங்களுக்கு மேலாக வைத்திருந்து, வெளி வந்த முளைகளையும் கிள்ளி எறிந்து விட்டு கிலோ 300 ரூபா வரைக்கும் விற்று மச்சு வீடுகட்டி வாழ்ந்தவர்கள். சுவையானதும், தரமானதுமான எம்மண்ணின் கிழங்குகளை உள்ளூரில் விற்பனை செய்வதற்குப் பின்னடிக்க இல்லத்தரசிகளின் ஆர்வமின்மையும் ஒரு காரணம்.

உச்ச விலையாக கிலோ 200 ரூபாவில் இருந்த வெங்காயம் 50 ரூபாவுக்கு இறங்கியுள்ளது. மேலும் விலைச்சரிவு ஏற்பட்டு வெங்காயம் தங்களையும் வெங்காயமாக்கிவிடுமோ எனும் அங்கலாய்ப்பு உற்பத்தியாளர்களிடம் தளிர்விட்டுள்ளது. வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைந்திருந்த காலப் பகுதியில் கூட்டுறவுத் திணைக்களத்தின் அதி உச்ச மட்ட அதிகாரி ஒருவர், இயந்திர மூலம் வெங்காயத்தை அரிந்து வற்றலாக்கி பொதி செய்யும் ஆலோசனை ஒன்றைத் தெரிவித்திருந்தார். இதன் சாத்தியப்பாடு பற்றிய வாய்ப்புப் பார்க்கலாமே. பீற்றூட்டின் மிதமான உற்பத்தி அதனை மாட்டுத் தீவனமாக்க மாடுகளும் சிவப்புச்சாணமிட்டதும், கத்தரிக்காய் கடகம் கடகமாகக் கால்நடைகளின் உணவாகியதும் அன்றைய சங்கதிகள்.

தீவகம் சார் மணல் பிரதேசத்து மகளிர் அமைப்பு ஒன்று வேப்ப மரங்களின் கீழ் பழைய சேலைகளால் மேடையமைத்துச் சேகரிக்கப்பட்ட வேப்பம் பூக்களில் தயாரித்த வடகமும், வலி. தெற்கில் வீடுகளில் வைத்து பிழிந்து கொடிகளில் காயவிட்டுப் பதப்படுத்திய சேமியாவும் தரத்தில் சளைத்தவையல்ல. இங்கு விளையும் மரக்கறிகளில் பொருத்தமானவற்றை, மிதமாக இருப்பவற்றைப் பதப்படுத்தி சந்தைப்படுத்தும் வாய்ப்பும் வசதியும் கிடைப்பின் எங்கள் விவசாயிகள், சுயதொழிலாளர்கள் பயனடைவார்கள். உலகின் பல நாடுகள் மரக்கறி உணவுகளின் நாட்டம் கொண்டுவரும் நிலையில் எம்மவரின் முயற்சிக்கும் ஆற்றலுக்கும் உழைப்புக்கும் சந்தைப்படுத்தலில் உள்ள சங்கடங்களே சவாலாக உள்ளன. இந்த கஷ்டத்தை- சங்கடங்களை மாகாண விவசாய அமைச்சு தீர்த்து வைக்க முன்வர வேண்டும்.

## வவுனியாவில் நெல் அறுவடையில் வீழ்ச்சி

வவுனியாவில் கடந்த ஆண்டு போதிய மழை பெய்யாததால் நெல் அறுவடையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக வவுனியா விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

தற்போது ஓமந்தை, நொச்சிமோட்டைப் பகுதிகளில் தப்பிப் பிழைத்த நெற்பயிர்களின் அறுவடை இடம் பெற்று வருகின்றது. ஆனால் அறுவடையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். மேலும் வவுனியாவில் பல இடங்களில் மேற் கொள்ளப்பட்ட நெற்செய்கை கடும் வெய்யிலால் அழிவடைந்துள்ளது. இதனால் நட்டமடைந்த விவசாயிகள் அரச நிவாரணத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர். (க-402)

## பன்றித்தலைச்சி பங்குனித் திங்கள் மார்ச் 17 முதல்

பிரசித்தி பெற்ற மட்டுவில் வடக்கு பன்றித் தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலய வருடாந்த பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவம் எதிர்வரும் 17, 24, 31, ஏப்ரல்7 ஆகிய திகதிகளில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆலய உற்சவம் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் ஆலய தர்மகர்த்தா, சாவகச்சேரி பிரதேச சபையினர், சுகாதாரத் திணைக் களத்தினர், இ.போ.ச., தனியார் சிற்றூர்தி சேவைகள் சங்கத்தினர், வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினர் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

ஆலய உற்சவ காலத்தில் அடியார்களின் போக்குவரத்து நலன்கருதி ஆலய மேற்குப் புறத்தில் உள்ள கைதடி நுணாவில் வைரவர் கோயில் வீதியினை புனரமைத்து வழங்குமாறு கடந்த மூன்று வருடங்களாகத் தெரிவிக்கப்படுகின்ற போதிலும் வீதி இன்னும் புனரமைக்கப்படாதது குறித்தும் கவலை தெரிவிக்கப்பட்டது. (ந-9)

நாளை (செவ்வாய்) ஆரம்பம்
Biology (English Medium)
2016 - Cell Biology
(Tue 4pm or 5pm) Wed 5pm
2015 - Human Systems
(Tue /Wed 3pm - 4pm
2016 - Exam & Seminar
(Tue 7.30-9.00am Exam, Wed 7.30-9.00am Seminar)
Tutor : Narew (New Science World)
T.P : 077 773 0840 (44326)(7.6.3)

காணி விற்பனை
0722 703 065

ANNAI NAAGA FOOD CITY
பதவி வெற்றிடம்
விற்பனை உதவியாளர்கள் (ஆண்கள்) உடன் தேவை.
அடிப்படைச் சம்பளம்-10.000/=
வேலை நேரம்-பி.ப.1.00 மணி முதல் 10.00 மணிவரை
சுயவிவரக்கோவையுடன் காலை 9.00 மணி தொடக்கம் 1.00 மணிவரை நேரில் வரவும்.
அன்னை நாகா பூட்சிற்றி
175, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். (சி/11487) (4.6.3)
T.P: 021 739 0194, 077 477 3484

பாராட்டி வாழ்த்துகின்றோம்
யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 29 ஆவது பட்டமளிப்புவிழாவில் கலைத்துறையில் BA (புவியியல்) பட்டம் பெற்ற
சங்கரன் கோகுலவதனன்
அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு, அவர் மேலும் பல பட்டங்கள் பெற வாழ்த்துகின்றோம்.
Best Wishes
வாழ்த்துவோர்:
அம்மா, அண்ணா, அண்ணி, பெறாமகன், தம்பி, அக்கா, அத்தான், மருமகன்,
கோபி ஹோட்டல், ஏ9 வீதி, புளியங்குளம், வவுனியா.



இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்
றோயல் குளுக்கோஸ்
100%சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்
PACKED BY:
ROYAL Industries
Colombo 12. T.P 0777 2776 70
அனைத்துப் பார்மசிகளிலும் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.




ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா நறுமணப் பூங்கா ®
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P.021 222 2567
100% டெக்றோஸ் மொனோகைட்றேட் (Dext rose Monohydrate) அடங்கிய சர்வதேச தரத்திற்கு நிகரான றோயல் குளுக்கோஸ் (100g) மிகக் குறைந்த விலையான ரூபா 37/= இற்குச் சந்தையில் கிடைக்கும்போது ஏன் மற்றைய குளுக்கோஸுக்கு அதிகவிலை கொடுக்கவேண்டும்?
இலவசம்
அன்பார்ந்த வாடிக்கையாளர்களே!
எம்மிடம் 24 டசின் றோயல் குளுக்கோசினைக் கொள்வனவு செய்து 1000 ரூபா பெறுமதியான அழகிய வர்ண ரீ - சேட் ஒன்றினை முற்றிலும் இலவசமாகப் பெற்றுக்கொள்ளவும். (சி.:1691) (45.6.3)

பண்டாரநாயக்க நினைவு மாநாட்டு மண்டபத்தில் இன்று திங்கட்கிழமை கொழும்பு பல்கலைக்கழகத்திடமிருந்து DIT , HDIT , BIT பட்டம்பெறுகின்ற எமது மாணவர்களை வாழ்த்துகின்றோம்.
MCS IT CAMPUS யாழ் பல்கலைக்கழகம் அருகாமை 077 2 395 895



புதிய பிரிவுகள் Feb 14 , 9.00 am ஆரம்பம்
for applications: Type <BIT><NAME> send to 077 2 395 895
BIT
இவர்களையும் வாழ்த்துகின்றோம்
Feb 14 இற்கு முன் இணைபவர்களிற்கு விசேட புலமைப்பரிசில்

நாய்க்குட்டிகள் விற்பனைக்கு
45 நாள்கள் நிரம்பிய ஜேர்மன் சப்பேட் குட்டிகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு:075 663 4269 (44490)(4.6.3)

# 209 முறைப்பாடுகள் கடந்த வருடத்தில் மட்டும்

## பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு தகவல்

கொழும்பு,பெப்.10

மக்களின் தேவைகளை சரிவர நிறைவேற்றாதது தொடர்பில் பிரதேச செயலர்களுக்கு எதிராக கடந்த வருடத்தில் 209 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

கிராம உத்தியோகத்தர்களுக்கு எதிராக 145 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்தது.

இவர்களில் 18 பேருக்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதோடு, 16 பேரிடம் விளக்கம் கோரப்பட்டும், 9 பேர் இடமாற்றப்பட்டும் உள்ளனர். 75 முறைப்பாடுகள் இணக்கப்பாட்டுடன் தீர்க்கப்பட்டுள்ளன என்று அமைச்சு கூறியது.

பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரத்னவின் வழிகாட்டலின் கீழ் அமைச்சின் விசாரணைப்பிரிவு இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்தது. அதற்கமைய கடந்த வருடம் அமைச்சின் விசாரணைப் பிரிவுக்கு 425 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இவற்றில் அதிகார துஷ்பிரயோகம் தொடர்பில் 154 முறைப்பாடுகளும் மக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்துதல், அசௌகரியமாக நடத்தல் என்பன தொடர்பில் 101 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன.

கூடுதலான முறைப்பாடுகள் அநுராதபுரம், பதுளை மற்றும் கொழும்பு மாவட்டங்களில் இருந்தே கிடைத்துள்ளன.

கிடைத்த முழு முறைப்பாடுகளில் 178 முறைப்பாடுகள் பொய்யானவை என்று விசாரணை மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. இதேவேளை அமைச்சர் ஜோன் செனவிரத்னவின் வழிகாட்டலின் கீழ் சகல மாவட்ட செயலகங்களிலும் தலா ஒரு விசாரணைப் பிரிவுகளை அமைக்கவும் புதிதாக நியமிக்கப்பட்ட பட்டதாரிகளினூடாக விசாரணைகளை துரிதப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பிரதேச மற்றும் மாவட்ட செயலகங்களினூடாக மக்களுக்கு சரியான சேவைகள் இடம் பெறாவிடின் 1905 எனும் அவசர இலக்கத்துக்கு முறையிடுமாறு கோரப்பட்டுள்ளது. (ச)

# பாதுகாக்கப்படுகிறது நாட்டில் மத சுதந்திரம்

## ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு,பெப்.10

நாட்டில் சகல இனம் மற்றும் மதங்களுக்கிடையில் ஐக்கியத்தையும் சக வாழ்வையும் கட்டியெழுப்பவும் சகலரது மத சுதந்திரத்தைப் பாதுகாப்பதிலும் அரசு முனைப்புடன் செயற்படும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாட்டிலுள்ள சகல பௌத்த மத பீட மகாநாயக்கத் தேரர்களையும் ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடிய போதே ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.

இனங்களுக்கிடையில் ஐக்கியத்தையும் மதங்களுக்கிடையில் ஒற்றுமையையும் கட்டியெழுப்பி அபிவிருத்தியில் நாட்டை முன்னேற்றும் அரசின் செயற்பாடுகளுக்குத் தமது பூரண ஒத்துழைப்பையும் ஆசீர்வாதத்தையும் வழங்குவதாக மகாநாயக்கத் தேரர்கள் தெரிவித்துள்ளனர்.

முப்பது வருட பயங்கரவாதத்தை இல்லாதொழித்ததற்கான கௌரவம் ஜனாதிபதிக்கே உரித்துடையது என்று தெரிவித்துள்ள மகாநாயக்க தேரர்கள் இந்த நாட்டை அபிவிருத்தியில் கட்டியெழுப்பும் செயற்பாடும் ஜனாதிபதியால் மட்டுமே முடியும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

பௌத்த தர்மத்தைப் பாதுகாப்பதிலும் பலப்படுத்துவதிலும் அரசு எப்போதும் கடமைப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி கூறினார். (ச)


# தேர்தல் குறித்து பொலிஸாருக்கு தெளிவுபடுத்தல்

கொழும்பு,பெப்.10

மேல் மற்றும் தென் மாகாண சபைகளுக்கான தேர்தல் தொடர்பான சட்டங்கள் தொடர்பில் பொலிஸாருக்கு தெளிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

தேர்தலுக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் காமினி நவரத்ன தலைமையில், தென் மாகாணத்திலுள்ள அனைத்து சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுக்கும் தெளிவூட்டும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று அவர் குறிப்பிட்டார்.

தேர்தல் சட்ட மீறல்களை தடுத்தல் மற்றும் தேர்தல் சட்டங்கள் தொடர்பில் பொலிஸ் அதிகாரிகளுக்கு தெளிவூட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார். (ச)



மாடு அறுப்பதை உடன் நிறுத்துமாறு கோரி சிங்கள ராவய இயக்கத்தினர் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை கண்டி ஸ்ரீ தலதா மாளிகைக்கு முன்னால் ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈடுபட்டனர். (ச)

# ஊழலில் ஈடுபடுவோருக்கு வாக்களிக்க வேண்டாம்

## தேசிய சங்க சம்மேளனம் வேண்டுகோள்

கொழும்பு, பெப்.10

ஊழல் மோசடிகளில் ஈடுபடுவோருக்கு வாக்களிக்க வேண்டாம் என்று தேசிய சங்க சம்மேளனம் தெரிவித்துள்ளது.

போதைப் பொருள் வர்த்தகர்கள், வன்புணர்வுகளில் ஈடுபடுவோர், சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுவோர் மற்றும் கொள்ளையர்களுக்கு மக்கள் வாக்களிக்கக் கூடாது.

இது தொடர்பில் மக்களுக்கு நாம் தெளிவுபடுத்த வேண்டும் என்று தேசிய சங்க சம்மேளனம் குறிப்பிட்டுள்ளது.

மேல் மாகாணத்திலும் தென் மாகாணத்திலும் பௌத்த விகாரைகளில் விசேட தர்ம உபதேசங்கள் செய்யப்பட உள்ளன.

களுத்துறை, கொழும்பு மற்றும் கம்பஹா போன்ற மாவட்டங்களில் ஊழல் மோசடிகளில் ஈடுபடுவோருக்கு எதிராக வாக்களிக்கக் கூடாது என்பதை மக்களுக்குத் தெளிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று சம்மேளனம் தெரிவித்துள்ளது.

மக்களைத் தெளிவுபடுத்தி சரியானவர்களை மாகாண சபைக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேசிய சங்க சம்மேளனம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (ச)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**ECONOMICS GCE A/L**
பிரத்தியேக வகுப்புக்கள் (25 வருட மீட்டல் வினாக்களுடன்)
தொடர்பு : 077 6767274

# மேல், தென் மாகாணங்களில் சட்டவிரோத ஊர்வலங்கள்

## கபே அமைப்பு குற்றச்சாட்டு



கீர்த்தி தென்னக்கோன்

கொழும்பு, பெப்.10

சட்டவிரோதமான 9 தேர்தல் பரப்புரை ஊர்வலங்கள் நேற்று முன்தினம் கண்காணிக்கப்பட்டன என்று 'கபே' அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

பேருவளை, கட்டுநாயக்கா, கடவத்தை, காலி மற்றும் அக்மீமன பகுதிகளில் சட்டவிரோத ஊர்வலங்கள் இடம்பெற்றன என்று 'கபே' அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்தார்.

மேல் மற்றும் தென் மாகாண சபைகளின் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் நேற்று முன்தினம் நிறைவடைந்த பின்னர் இந்த சட்டவிரோத ஊர்வலங்கள் நடத்தப்பட்டன என்று அவர் சுட்டிக்காட்டினார்.

பொது மக்களுக்குப் பெரும் இடையூறாக வாகன பேரணிகள், ஊர்வலங்கள் நடத்தப்பட்டமை மற்றும் ஒலிபெருக்கி பயன்படுத்தப்படுவதை நிறுத்துவதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுக்காமை துரதிர்ஷ்டவசமானது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

தேர்தல் சட்டங்களை கவனத்தில் கொள்ளாது, மக்களுக்கு அசௌகரியம் ஏற்படும் வகையில் நேற்றுமுன்தினம் ஊர்வலங்கள் நடத்தப்பட்டன.

வேட்பாளர்கள் தேர்தல் சட்டங்களை மீறி நேற்றுமுன்தினம் பரப்புரை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் என்று அவர் குறிப்பிட்டார்.

தேர்தல் சட்டங்களுக்கு மதிப்பளித்து பரப்புரை நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும், இதன்போது மதுபானம், பொலித்தீன் பாவனைகள் தவிர்க்கப்பட வேண்டும் எனவும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள், செயலர்களுக்கு 'கபே' அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது. (ச)


## மரண அறிவித்தல்

### மயில்வாகனம் சுந்தரமூர்த்தி

(ஓய்வு பெற்ற பட்டயக்கணக்காளர் நெல் சந்தைப்படுத்தும் சபை கொழும்பு)



யாழ்ப்பாணம் தட்டாதெரு அரசடி வீதி இல. 50ஐ பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட மயில்வாகனம் சுந்தரமூர்த்தி நேற்று (2014.02.09) ஞாயிற்றுக்கிழமை காலை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முன்னாள் யாழ். இந்துக்கல்லூரி ஆசிரியர் மு. மயில்வாகனம் - சின்னம்மா தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான நாரந்தனையைச் சேர்ந்த அதிபர் மு.நா.கந்தையா - சோமவதி தம்பதியரின் பாசமிகு மருமகனும் சாலினியின் பாசமிகு கணவரும் மயில்வாகனம் சிவானந்தநாயகியின் பெறாமகனும் காலஞ்சென்ற மங்கையற்கரசி மற்றும் பார்வதி (USA) கனகசபாபதி (நோர்வே) காலஞ்சென்ற திருஞானசம்பந்தன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் தேவன் இளங்கோ (லண்டன்), கௌரி, திருமகள், காலஞ்சென்ற சூலபாணி, மன்றுனாடி, மாலினி (கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம் நல்லூர்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் கங்கவேணியன், காலஞ்சென்ற பரமேஸ்வரன், கைமா, கௌரி, யோகலட்சுமி காலஞ்சென்ற சச்சிதானந்தன், தேவிகா, ராஜினி, பாஸ்கரன் ஆகியோரின் பாசமிகு சகலனும் துளசி (நோர்வே), ஜனனி (நோர்வே), சாயிசுரபி (கனடா), விசாகி ஆகியோரின் பெரிய தந்தையும் சாரங்கன் (லண்டன்), சயந்தினி(லண்டன்), அபிரிகா, மயுரிகா, அபிஷகன், லக்ஷிகன் ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.02.2014) திங்கட்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

50 அரசடி வீதி தட்டாதெரு, யாழ்ப்பாணம்.
தகவல்: மனைவி



## மரண அறிவித்தல்

### திருமதி சரஸ்வதி கோபாலபிள்ளை



வெள்ளாம்போக்கட்டி கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் தற்போது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி கோபாலபிள்ளை நேற்று (09.02.2014) ஞாயிற்றுக்கிழமை பிறப்பிடமான வெள்ளாம் போக்கட்டியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு கோபாலபிள்ளையின் அன்புமனைவியும் திருலோகநாதன், பரமேஸ்வரி, முத்தையா, தியாகேஸ்வரி (கனடா), செல்வராசா, குணேஸ்வரி (கனடா), கணேசமூர்த்தி (கனடா) ஆகியோரின் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வெள்ளாம்போக்கட்டி, கொடிகாமம்
கோ. கணேசமூர்த்தி (மூர்த்தி - மகன்) (கனடா)
077 4481997

# சர்வதேச விசாரணை தொடர்பில் தீர்மானிக்கும் சக்தியாக இந்தியா

## ஜெனிவா பிரேரணையை இம்முறையும் நீர்த்துப்போக வைக்குமா டில்லி?

கொழும்பு, பெப். 10

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 25ஆவது கூட்டத்தொடரில் இலங்கை அரசுக்கு எதிராக அமெரிக்கா சமர்ப்பிக்கவுள்ள பிரேரணையில் 'இறுதிப்போர் குறித்து சர்வதேச விசாரணைப் பொறிமுறை தேவை' என்ற ஷரத்து உள்ளடக்கப்படுமா அல்லது இல்லையா என்ற விவகாரத்தில் இந்தியாவின் முடிவே இம்முறை தீர்மானிக்கும் சக்தியாக அமையும் என இராஜதந்திர வட்டாரங் களிலிருந்து அறியமுடிகின்றது.

தெற்காசியப் பிராந்தியத்தின் முக்கிய நாடான இந்தியாவின் சம்மதம் கிடைத்தால் மாத்திரமே தனது பிரேரணையில் போர்க்குற்ற விசாரணை குறித்த ஷரத்துகளை அமெரிக்கா உள்ளடக்கும் என்றும் அவ்வட்டாரங் களிலிருந்து தெரியவருகின்றது.

எனினும், இது விடயம் சம்பந்தமாக டில்லி இன்னும் எவ்வித முடிவுகளையும் எடுக்கவில்லை. இலங்கை மீதான பிரேரணை தொடர்பில் தமது வகிபாகம் எவ்வாறு அமைய வேண்டும் என்பது குறித்து அது தற்போது தீவிரமாக ஆராய்ந்து வருகின்றது.

2012, 2013 ஆகிய வருடங்களில் இலங்கை அரசுக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் சபையில் தாக்கல் செய்யப்பட்ட பிரேரணைகளை டில்லி ஆதரித்திருந்தாலும் கொழும்பு மீதும் அது இவ்விரு சந்தர்ப்பங்களிலும் கரிசனைக் காட்டியது. அதாவது, பிரேரணையின் உள்ளடக்கங்களை அது நீர்த்துப்போக வைத்தது என்பது தெரிந்ததே.

எனவே, இம்முறையும் பிரேரணை விடயத்தில் இந்தியாவின் செல்வாக்கு நிச்சயம் தாக்கம் செலுத்தும் என அரசியல் அவதானிகள் சுட்டிக் காட்டுகின்றனர். இந்திய இணைத் தூதுவர் தேவயானி விவகாரத்தில் டில்லிக்கும் வொஷிங்டனுக்கு மிடையில் "நீயா, நானா?" என்ற கௌரவ இராஜதந்திர முறுகல் ஏற்பட்டுள்ளதால் இது விடயத்தில் இந்தியாவின் முடிவு கொழும்பு சார்பானதாக அமையுமா அல்லது வொஷிங்டன் பிரேரணையை ஆதரிக்கும் முடிவை எடுக்குமா என்பதில் சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

### இந்தியா - அமெரிக்க இராஜதந்திரிகள் பேச்சு

இந்நிலையில், இலங்கை மீதான பிரேரணை சம்பந்தமாக அமெரிக்க இராஜதந்திரிகள், ஜெனிவாவிலுள்ள இந்தியத் தூதுவர்களுடன் முக்கிய பேச்சுகளை நடத்தி வருகின்றனர். அத்துடன், டில்லி உயர் மட்டத்துடன் ஜெனிவா விவகாரம் குறித்து கலந்துரையாட அமெரிக்க குழுவொன்று எதிர்வரும் வாரம் இந்தியா செல்லவுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியிருந்தாலும் உத்தியோகபூர்வ அறிவிப்பு இன்னும் வெளியாகவில்லை.

எது எப்படியிருந்தபோதிலும் ஜெனிவாவில் இம்முறை டில்லி கொழும்பு எதிர்போக்கையே கடைப்பிடிக்கும் என்றும் எனினும், போர்க் குற்ற விசாரணைக்கு அது உடன்படாது என்றும் டில்லி தகவல்கள் தெரிவிக்கின்றன.

### சர்வதேச விசாரணையே ஒரே வழி மேற்குலகம் உறுதியான நிலைப்பாட்டில்

அதேவேளை, நல்லிணக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட இரண்டு தீர்மானங்களையும் நிறைவேற்றும் விவகாரத்தில் இலங்கை அலட்சியப்போக்கை கடைப்பிடித்துவருவதனால், சர்வதேச விசாரணையே ஒரே வழி என்ற நிலைப்பாட்டில் மேற்குலக நாடுகள் உறுதியாக இருந்துவருகின்றன. எனவே, இம்முறை ஜெனிவா இராஜதந்திரச் சமரில் இலங்கைக்குக் கடும் நெருக்கடி ஏற்படும் வாய்ப்பு அதிகமாகவே இருப்பதாக அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர். (ஐ-8)

# டீசலில் உள்ள இரசாயனம் குறித்து ஆராயவேண்டும்

## அமைச்சர் மைத்திரிபால உத்தரவு

கொழும்பு, பெப்.10



மைத்திரிபால சிறிசேன

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் டீசலில் அடங்கியுள்ள இரசாயனப் பதார்த்தங்கள் தொடர்பாக உடனடியாக ஆய்வுகளை ஆரம்பிக்குமாறு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தேசிய புற்றுநோய் தடுப்பு நிகழ்ச்சித் திட்ட மருத்துவ நிபுணர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

வளர்முக நாடுகளில் புற்றுநோய்களுக்கு உள்ளாவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. இதற்கு டீசலில் காணப்படும் சில இரசாயனப் பதார்த்தங்களே காரணம் எனக் கூறப்படுகின்றது.

அதனால் இந்த விடயத்தில் விசேட கவனம் செலுத்தி டீசலில் அடங்கியுள்ள இரசாயனப் பதார்த்தங்கள் தொடர்பாகவும் அவற்றின் அளவுகள் குறித்தும் உடனடியாக ஆய்வுகளை ஆரம்பிக் குமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

உலகில் புற்றுநோய் பெரும் பிரச்சினையாக வளர்ச்சி அடைந்து வருகின்றது.

அதன் விளைவாக இலங்கையில் வருடமொன்றுக்கு 15,000 பேர் புதிதாக புற்றுநோய் சிகிச்சைக்கென பதிவாகின்றனர். அதற்கு அமைய நாளொன்றுக்கு மூவர் வாய் மற்றும் நுரையீரல் புற்றுநோய்கள் காரணமாக உயிரிழக்கின்றனர்.

இதனால் புற்று நோய்களுக்குச் சிகிச்சை அளிக்கவென நாடெங்கிலுமுள்ள பிரதான. ஆஸ்பத்திரிகளில் விசேட பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த வருடம் புற்று நோயாளர்களுக்கான கதிரியக்க சிகிச்சைக்காக 900 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நோய்க்குரிய சிகிச்சைக்கான மருந்துகளைக் கொள்வனவு செய்ய 1,500 மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று அமைச்சின் அதிகாரியொருவர் கூறினார். (ச)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### சுயாதீன

கப்பட்டிருக்கக்கூடிய இடங்கள் உள்ளிட்ட அனைத்து இடங்களுக்குள்ளும் அனுமதிக்கப்படவேண்டும்.

வடக்கு - கிழக்குக்கு தகவல்கள் சென்று சேர்வதற்கான தடைக்கற்களை அகற்றி ஊடகங்கள் மீதான கட்டுப்பாடுகளை நீக்கும்படி இலங்கை அரசைக் கோரவேண்டும். அத்துடன் பத்திரிகையாளர்கள் மீதும் பத்திரிகை நிறுவனங்கள் மீதும் நடத்தப்பட்ட தாக்குதல்களில் குற்றவாளிகள் நீதியின் முன் நிறுத்தப்படவேண்டும்.

அமெரிக்காவின் அக்கறைக்குரிய மனித உரிமைகளை மதித்தல், ஜனநாயகம், சட்டத்தின் ஆட்சி, பொருளாதாரம், பாதுகாப்பு ஆகிய விடயங்களைப் பிரதிபலிக்கக் கூடிய வகையில் இலங்கை தொடர்பில் அமெரிக்க அதிபர் கொள்கை ஒன்றை உருவாக்க வேண்டும்.

இவ்வாறு தீர்மான வரைவு வலியுறுத்தியுள்ளது. (உ-5)

### 20 ஆவது

முன்னிலையில் இன்று தோண்டப்படுகிறது.

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 20ஆம் திகதி குறித்த பகுதியில் குடிதண்ணீர் இணைப்புக்காக தோண்டப்பட்ட குழியிலிருந்து மனித எச்சங்கள் வெளிக்கிளம்பின. சம்பவம் பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டு பின்னர் அந்த இடத்தில் தோண்டும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

கடந்த ஜனவரி மாதம் 31ஆம் திகதி வரை மன்னார் நீதிவான் ஆனந்தி கனகரட்ணம் முன்னிலையில் 19 தடவைகள் இந்த மனித புதைகுழி தோண்டப்பட்டுள்ளது. இதன் போது 55 மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன.

அவற்றில் 28 மனித எலும்புக்கூடுகள் பொதி செய்யப்பட்டு மன்னார் நீதிவான் ஆனந்தி கனகரட்ணத்தின் உத்தரவிற்கமைய மன்னார் பொது வைத்தியசாலையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் கடந்த மாதம் 31ஆம் திகதி புதைகுழியைத் தோண்டும் பணிகள் இடைநிறுத்திவைக்கப்பட்டன. இன்று புதைகுழி 20ஆவது தடவையாகத் தோண்டப்படுகிறது. (ஐ-56)

### வாஜ்பாய்

கருத்துத் தெரிவித்த வை.கோ, இலட்சக் கணக்கான ஈழத் தமிழர்கள் சிங்கள அரசால். படுகொலை செய்யப்பட்டதற்கு ஐக்கிய முற்போக்குக் கூட்டணி (காங்கிரஸ்) அரசின் துரோகமும் காரணம்.

அடல் பிகாரி வாஜ்பாய் பிரதமராக இருந்தபோது, ஈழத் தமிழர் பிரச்சினையில் கடைப்பிடித்த அணுகுமுறையையே நீங்கள் அமைக்கப் போகிற அரசும் பின்பற்ற வேண்டும்' என்று கூறியதற்கு, அப்படியே செய்வோம் என்று மோடி உறுதியளித்தார் என வைகோ தெரிவித்தார். (ஐ-5)

### தனது

சிவலிங்கப்புளியடியைச் சேர்ந்த பெண் வீட்டார் தமது மகளுக்குத் திருமணம் செய்து வைக்கும் நோக்கில் மணமகனைத் தேடியுள்ளனர். கிளிநொச்சியில் இருந்து அவர்களுக்கு ஒரு சாதகக் குறிப்பு கிடைத்தது.

சாதகங்கள் பொருத்தமாக இருந்ததால் இருவருக்கும் திருமணம் செய்வதற்கு பெண் வீட்டார் தீர்மானித்தனர். பெண்வீட்டார் திருமண ஏற்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டனர். திருமணத்துக்கு நாள் குறிக்கப்பட்டு உறவினர்கள், நண்பர்களுக்கு எல்லாம் அறிவிக்கப்பட்டது. நேற்று ஞாயிற்றுக்கிழமை திருமணத்தை நடத்த நாள் குறிக்கப்பட்டது.

மணமகன் மணவறையில் வந்து அமர்ந்தார். தாலிகட்டுவதற்குச் சில நிமிடங்களே உள்ளன. பெண்ணை அழைத்து வரவேண்டியதுதான் மிச்சம். அதற்கிடையில் எல்லாம் தலைகீழாக மாறியது.

திருமணத்துக்காக வந்திருந்திருந்த பெண் தரப்பு உறவினர் ஒருவர் அப்போதுதான் மாப்பிள்ளையை உற்றுப் பார்த்தார். மணமகனை அவருக்கு முன்னரே தெரிந்திருந்தது. அவருக்கு ஏற்கனவே திருமணமும் முடிந்து ஒரு குழந்தையும் உள்ளது என்ற உண்மையை அவர் சபையில் போட்டுடைத்தார்.

உண்மையைக் கேட்டுக் கொதித்துப்போன பெண் வீட்டினர் உடனடியாகப் பொலிஸாருக்கு அறிவித்தனர். மணமகன் கோலத்திலிருந்த குடும்பஸ்தரை தமது வாகனத்தில் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர்.

அவரிடம் விசாரணை மேற்கொண்ட பொலிஸார் அவர் ஏற்கனவே திருமணமானவர் என்பதை உறுதிப்படுத்தினர். விவரங்களை கிளிநொச்சியில் இருந்த அவரது மனைவிக்கு அறிவித்தனர். தனது குழந்தையுடன் அவரும் யாழ். பொலிஸ் நிலையத்துக்கு வந்தார். அவர்களிடம் இருந்தும் சந்தேக நபருக்கு எதிராகப் பொலிஸார் முறைப்பாட்டைப் பதிவு செய்து கொண்டனர். தான் முன்னர் பதிவுத் திருமணம் செய்துகொள்ளவில்லை என்றும் தெரிவித்த அவர் ஒரு குழந்தைக்குத் தந்தை என்பதையும் ஒப்புக்கொண்டார் என்கின்றனர் பொலிஸார்.

இதற்கிடையே இதேபோன்றதொரு சம்பவம் அச்சுவேலியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது என்றும் தெரியவருகிறது. (உ-4-14)

### சர்வதேச

றம் தொடர்பாக வெளிப் படையான விசாரணை தேவை என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை, பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் வலியுறுத்தி உள்ளார். இதையே பிரிட்டன் முழுமையாக விரும்புகின்றது. இலங்கையில் நல்லிணக்கம் ஏற்படுவதற்கான முக்கிய செயல்பாடாக சர்வதேச விசாரணை தேவைப்படுகிறது. பிரதமர் டேவிட் கமரூன் முன்னரே குறிப்பிட்டதன் பிரகாரம் எதிர்வரும் மார்ச் மாதத்திற்குள் வெளிப்படையான விசாரணை தொடங்கவில்லை என்றால் சர்வதேச விசாரணை நடத்த பிரிட்டன் முயற்சி எடுக்கும் என்பதில் சந்தேகம் இல்லை - என்றார். (ஐ-5)

### ஐ.நா.

களை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பது தொடர்பில் இவர் ஆராயவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கைக்கு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு வருகை தந்த ஐ.நா உதவிச் செயலாளரும், யு.என்.டி.பி.யின் ஆசிய, பசுபிக் பிராந்தியப் பணிப்பாளருமான ஹஓலியங் ஸுவை, இலங்கைக்கான ஐ.நாவின் வதிவிடப் பிரதிநிதி சுபைனோ நண்டி வரவேற்றார்.

இலங்கையின் உயர்மட்ட அரச அதிகாரிகளையும், சிவில் சமூகப் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசிய அவர், தொடர்ச்சியாக வடமாகாணத்தில் யு.என். டி.பியினால் முன்னெடுக்கப்பட்டுவரும் வாழ்வாதார அபிவிருத்தித் திட்டங்களையும் பார்வையிடவுள்ளார்.

2013 - 2017 ஆம் ஆண்டு வரையிலான ஐ.நா. அபிவிருத்தி உதவித் திட்டத்தின் கீழ் அதன் முதல் வருடத்தில் அடைந்த முன்னேற்றங்களை அவதானிப்பதை அடிப்படையாகக் கொண்டதே தனது பயணம் என்று ஸு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் ஐ.நாவின் பணிகளில் அநேகமானவை அபிவிருத்தியை மையமாகக் கொண்ட திட்டங்களாக நிலைமாற்றம் பெற்றுள்ளன. இதுவரை அடையப்பெற்ற முன்னேற்றங்களையும் அவதானித்து நாட்டின் மனித அபிவிருத்தி யை சிறந்த முறையில் அறிந்து கொள்வதுடன், ஐ.நாவின் குறித்த இலக்குகளை அடைவதற்கான உதவிகளை எவ்வாறு வலுப்படுத்துவது குறித்தும் இந்தப் பயணத்தில் ஆராயப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கிற்கு நாளை செவ்வாய்க் கிழமை வருகை தரும் ஸு, கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களுக்கு சென்று நிலைமைகளைப் பார்வையிடுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-5)

### ஆவா

என்றும் அவர்கள் கூறினர். கொக்குவில் பகுதியைச் சேர்ந்த குறித்த ஒன்பது பேரும் மல்லாகம் நீதிவானிடம் நேற்று முற்படுத்தப்பட்டனர். இவர்களில் நால்வர் ஆள் பிணையில் விடுவிக்கப்பட்டதுடன் மற்றைய 5 பேரையும் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

அவர்களிடமிருந்து கத்தி மற்றும் வாள்கள்-3, இரும்புக் கம்பிகள், பொல்லுகள், சைக் கிள் செயின், மோட்டார் சைக்கிள்கள்-3 மற்றும் இராணுவ சீருடைகள்-2 என்பன மீட்கப்பட்டுள்ளன என்கின்றனர் பொலிஸார்.

மூளாயில் உள்ள வீடு ஒன்றினுள் அண்மையில் இனந்தெரியாதோர் அத்துமீறிச் சென்று வீட்டு ஜன்னல் கண்ணாடிகளை அடித்து உடைத்திருந்தனர். அது தொடர்பில் யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் றொஹான் டயஸின் பணிப்பில் இரண்டு பொலிஸ் குழுக்கள் விசாரணை மேற்கொண்டன. அந்தச் சம்பவத்துடன் தொடர்புபட்டிருந்தனர் என்ற குற்றச் சாட்டில் குறித்த 9 பேரும் கைதுசெய்யப்பட்டனர்.

யாழ். குடாநாட்டில் பல இடங்களிலும் இடம்பெற்ற வாள் வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புபட்டிருந்த குற்றச் சாட்டில் கடந்தமாதம் ஆவா குறூப் என்ற பெயரில் இயங்கிய 11 பேரைப் பொலிஸார் கைது செய்திருந்தனர். (உ-4-86)

# சிவகுமாரன் வி.க. மகளிர் சம்பியன்



சிவகுமாரன் இளைஞர் கழக அணி



இமையாணன் இளைஞர் கழக அணி

யாழ்ப்பாணம், பெப்.10

கரவெட்டிப் பிரதேசத்துக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையிலான விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான பெண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் இறுதியாட்டத்தில் சிவகுமாரன் இளைஞர் கழக அணி வெற்றி பெற்றுச்சம்பியனாகத்தெரிவாகியது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் இமையாணன் இளைஞர் கழக அணியை எதிர்த்து சிவகுமாரன் இளைஞர் கழக அணி மோதியது.

அதில் சிவகுமாரன் இளைஞர் கழக அணி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனாகத் தெரிவாகியது. (ற-23)

**சிவகுமாரன் இளைஞர் கழக அணி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனாகத் தெரிவாகியது.**

## மாட்டுவண்டி சவாரிப் போட்டி ஞாயிறன்று

யாழ்ப்பாணம், பெப்.10

இளவாலை வருத்தப்படாத இளைஞர் கழகம் அளவெட்டி விவசாய சம்மேளனத்துடன் இணைந்து மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

இந்த மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி எதிர்வரும் 16 ஆம் திகதி வருத்தப்படாத இளைஞர் கழகத்தினரால் புதிதாக அமைக்கப்பட்ட கருவம்பனை மாட்டுவண்டிச் சவாரித் திடலில் இடம்பெறவுள்ளது.

போட்டியில் பங்கேற்க விரும்பும் போட்டியாளர்கள் போட்டி நடைபெறும் தினம் காலை சவாரித் திடலுக்கு வந்து தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும் என்று போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ற-23)

## உருத்திரபுர உழவர் ஒன்றிய மகளிர் கபடியில் சம்பியன்

யாழ்ப்பாணம், பெப்.10

கரைச்சிப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையே நடத்தப்பட்ட மகளிருக்கான கபடித் தொடரில் உருத்திரபுரம் உழவர் ஒன்றிய வி. க. அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

கடந்த சனிக்கிழமை உருத்திரபுரம் உழவர் ஒன்றிய வி.க. மைதானத்தில் இடம்பெற்ற இறுதி யாட்டத்தில் மகாதேவா வி.க. அணியை எதிர்த்து உருத்திரபுரம் உழ வர் ஒன்றிய வி. க. அணி மோதியது.

அதில் உருத்திரபுரம் உழவர் ஒன்றிய வி.க. அணி 56:12 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியனாகத் தெரிவானது. (ற-23)

# சதுரங்கத்தில் சம்பியன்



பா.செம்பூவினி



செ.அபிஷேக்

யாழ்ப்பாணம், பெப்.10

வடமாகாண ஆளுநர் வெற்றிக் கிண்ணத்துக்கான சதுரங்கப் போட்டியில் நெல்லியடி.மெ.மி.த.க. பாடசாலையைச் சேர்ந்த இரு மாணவர்கள் வடமராட்சி வலய சம்பியனாகத் தெரிவாகியுள்ளனர்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் கடந்த 3 ஆம் திகதி நடைபெற்ற இந்தப் போட்டிகளில் நெல்லியடி. மெ.மி.த.க. பாடசாலையைச் சேர்ந்த தரம் 3 இல் கல்வி கற்கும் செல்வநாயகம் அபிஷேக் இறுதிப் போட்டியில் கடுமையாகப் போராடி வெற்றி பெற்றுச் சம்பியனானார்.

அதேபோன்று தரம் 5 இல் கல்வி கற்கும் பாஸ்கரன் செம்பூவினி இறுதிப் போட்டியில் வெற்றிபெற்றுச் சம்பியனானார். (ற-422)

## இன்றைய ஆட்டம்

வலி. வடக்கு, பெப் 10

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நடத்தப்படும் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் தலைவர் 2013 வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தும் பதினொரு பேர் பங்கு விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்கள்.

**பிற்பகல் 3.30 மணி.**

குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகம் எதிர் குப்பிளான் விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகம்.


மாதகல் சென்தோமஸ் விளையாட்டுக் கழகம் எதிர் துணவி சென்.ஸ்ரார் விளையாட்டுக் கழகம். (ற-86)

## உதைபந்து தொடர் ஆரம்பம்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் பருத்தித்துறை சிரேஷ்ட வீரர்கள் குழு 9 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் ஒன்றை நடத்தவுள்ளனர்.

அந்தத் தொடரின் ஆட்டங்கள் எதிர்வரும் 15 ஆம், 16 ஆம் திகதிகளில் ஆரம்பமாகவுள்ளன என்று போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ற-23)

# சிரேஷ்ட லீக் உதைபந்து; யாழ்., முல்லைத்தீவு வெற்றி



யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்ற யாழ்.உதைபந்தாட்ட லீக் அணிக்கும் வலிகாமம் லீக் உதைபந்தாட்ட லீக் அணிக்கும் இடையே நடைபெற்ற விறுவிறுப்பான ஆட்டத்தின் ஒரு காட்சி.

யாழ்ப்பாணம், பெப்.10

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தில் அங்கம் வகிக்கும் லீக் அணிகளுக்கு இடையிலான சிரேஷ்ட லீக் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் யாழ்.உதைபந்தாட்ட லீக் அணி மற்றும் முல்லைத்தீவு உதைபந்தாட்ட லீக் அணி என்பன வெற்றி பெற்றுள்ளன.

யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ். உதைபந்தாட்ட லீக் அணியும், வலிகாமம் உதைபந்தாட்ட லீக் அணியும் மோதிக் கொண்டன.

இந்த ஆட்டத்தின் 39 ஆவது நிமிடத்தில் யாழ்.உதைபந்தாட்ட லீக் அணி வீரன் ஞானரூபன் தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தைச் சரியான முறையில் பயன்படுத்தி தனது அணிக்கான முதலாவது கோலைப் பெற்றுக் கொடுத்தார்.

அதையடுத்து வலிகாம உதைபந்தாட்ட லீக் அணியினர் தமது அணிக்கான கோலைப் பெறுவதற்குப் பல முறை முயன்ற போதும் அவர்களின் முயற்சிவெற்றியளிக்கவில்லை.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமானதும் 26 ஆவது நிமிடத்தில் யாழ்.உதைபந்தாட்ட லீக் அணிக்கு ஓர் தண்டனை உதை கிடைத் தது. அதனை திலீப் கோலாக் கினார். பதிலுக்கு 27 ஆவது நிமிடத்தில் வலிகாம உதைபந்தாட்ட லீக்கின் ஜீவராஜ் தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை கோலாக்கினார். தொடர்ந்து 29 ஆவது நிமிடத்தில் வினோத் தனது அணியினுடைய 2 ஆவது கோலைப் பெற்றுக் கொண்டார்.

ஆட்டநேர முடிவில் இரு அணியினரும் தலா 2 கோல்களைப் பெற்றிருந்தனர்.

அதையடுத்து போட்டி விதிகளுக்கு அமைய இரு அணியினருக்கும் மேலதிகமாக 15 நிமிடங்கள் வழங்கப்பட்டது.

இதில் முதல் 15 நிமிடத்தில் யாழ்.உதைபந்தாட்ட லீக் அணி 2:1 என்ற கோல் கணக்கில் முன்னிலையில் இருந்தது. இரண்டாவது 15 நிமிடத்தில் இரண்டு அணியினரும் தலா ஒரு கோலைப் பெற்றனர்.

ஆட்ட நேர முடிவில் யாழ். உதைபந்தாட்ட லீக் அணி 5:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

முல்லைத்தீவு உதைபந்தாட்ட லீக் அணிக்கும் வவுனியா உதைபந்தாட்ட லீக் அணிக்கும் இடையிலான ஆட்டம் உடுப்புக்குளம் அலை ஓசை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றது.

முதற்பாதி ஆட்டம் ஆரம்பமானதும் இரண்டு அணியினரும் எதிர் அணியினரின் கோல் பரப்பை ஆக்கிரமித்த வண்ணம் இருந்தனர்.

முல்லைத்தீவு உதைபந்தாட்ட லீக் அணிவீரன் ஸ்ரலின் ஆட்டத்தின் 35 ஆவது நிமிடத்தில் தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை சரியான முறையில் பயன்படுத்தி தனது அணிக்கான முதலாவது கோலைப் பெற்றுக் கொண்டார்.

வவுனியா உதைபந்தாட்ட லீக் அணி கோல்களைப் பெற பல முயற்சிகள் மேற் கொண்ட போதும் அவர்களால் சாதிக்க முடியவில்லை.


ஆட்டம் இடைவேளைக்காக இடை நிறுத்தப்பட்ட போது 1:0 என்ற கோல் கணக்கில் முல்லைத்தீவு உதைபந்தாட்ட அணி முன்னணியில் இருந்தது.

இரண்டாம்பாதி ஆட்டம் ஆரம்பமான போது வவுனியா உதைபந்தாட்ட லீக் அணியினர் கோல்களைப் பெற முயன்றபோது அவர்களால் கோல் எதனையும் பெற முடியவில்லை.

தொடர் முயற்சியின் காரணமாக முல்லைத்தீவு உதைபந்தாட்ட லீக் அணி வீரன் நிக்சன் 17 ஆவது நிமிடத்தில் தனது அணிக்கான இரண்டாவது கோலை அடித்தார்.

ஆட்ட நிறைவுக்கு 5 நிமிடங்கள் இருக்கையில் முல்லைத்தீவு உதைபந்தாட்ட லீக் அணி வீரன் பகி அணியின் மூன்றாவது கோலை அடித்து அணியின் வெற்றியை உறுதிப்படுத்தினார். ஆட்ட நேர முடிவில் முல்லைத்தீவு உதைபந்தாட்ட லீக் அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ற-23-86)

# போராடித் தோற்றது இந்தியா



இந்திய அணி வீரர் தவான்

விறு விறுப்பான டெஸ்ட் போட்டி ஒன்று நிறைவுக்கு வந்துள்ளது. இந்தியா, நியூசிலாந்து அணிகளுக்கிடையில் நடை பெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் நியூ சிலாந்து அணி 40 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

முதல் இன்னிங்சில் இந்தியாவை முழுமை ஆதிக்கத்துக்குள் வைத்து இருந்த நியூசிலாந்து அணி இரண்டாவது இன்னிங்சில் இந்திய அணியிடம் மாட்டிக் கொண்டது. இருப்பினும் இந்திய அணியின் மோசமான முதலாவது இன்னிங்ஸ் துடுப்பாட்டம் நியூசிலாந்து அணிக்கு வெற்றியை தந்தது. இந்திய அணி 407 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் துடுப்பெடுத்தாடியது.

இறுதியாக 366 ஓட்டங்களைப் பெற்று தோல்வியை சந்தித்தது. இதில் ஷிகார் தவான் 115 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். இது அவருடைய இரண்டாவது சதமாகும். விராட் கோஹ்லி 67 ஓட்டங்களையும், டோனி 39 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் நெய்ல் வக்னர் 4 விக்கெட்களையும், ரிம் சௌதி , ரென்ட் போல்ட் ஆகியோர் தலா 3 இலக்குகளையும் கைப்பற்றினர்.

முன்னதாக நியூசிலாந்து அணி இரண்டாம் இன்னிங்சில் 105 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. இதில் ரொஸ் டெயிலர் 41 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். பந்துவீச்சில் மொஹமட் சமி , இஷாந்த் ஷர்மா ஆகியோர் தலா மூன்று இலக்குகளைக் கைப்பற்றினர். சகீர் கான் 2 இலக்குகளை கைப்பற்றினார்.

நியூசிலாந்து அணி தனது முதலாவது இன்னிங்சில் 121.4 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 503 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. அணித்தலைவர் பிரன்டன் மக்கலம் 224 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். இது இவரின் இரண்டாவது இரட்டைச் சதமாகும். கேன் வில்லியம்சன் 113 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார். கூரே அன்டர்சன் 77 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். இஷாந்த் ஷர்மா 6 இலக்குகளைக் கைப்பற்றிக் கொண்டார். சகீர்கான் 2 இலக்குகளையும், கைப்பற்றினார்.

இந்திய அணி தனது முதல் இன்னிங்சில் 202 ஓட்டங்களைப் பெற்று சகல இலக்குகளையும் இழந்தது. இதில் ரோஹித் ஷர்மா 72 ஓட்டங்களையும், ரவீந்தர் ஜடேஜா ஆட்ட மிழக்காமல் 30 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் நியூசிலாந்து அணி சார்பாக நெய்ல் வக்னர் 4 இலக்குகளையும், ரிம் சௌதி , ரென்ட் போல்ட் ஆகியோர் தலா 3 இலக்குகளையும் கைப்பற்றினர்.

நியூ சிலாந்து அணியின் பந்து வீச்சாளர்கள் முதல் இன்னிங்சிலும், இரண்டாம் இன்னிங்சிலும் ஒரே மாதிரியாக இலக்குகளைக் கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. போட்டியின் நாயகனாக பிரன்டன் மக்கலம் தெரிவு செய்யபப்பட்டார். 2 போட்டிகள் கொண்ட தொடரில் நியூ சிலாந்து அணி 1 - 0 என முன்னிலை பெற்றுள்ளது. (த)

## ஐ.சி.சி நிர்வாகக் கட்டமைப்புக்குள் பெரும் சீர்திருத்தங்கள் விரைவில்

International Cricket Council

சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையான ஐ.சி.சி தம்முடைய நிர்வாக கட்டமைப்புக்குள் பெரிய சீர்திருத்தங்களைக் கொண்டுவர தீர்மானித்துள்ளது. சிங்கப்பூரில் நடந்த ஐ.சி.சியின் செயற்குழு கூட்டத்தில், சீர்திருத்தத்துக்கான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

ஐ.சி.சியில் நிரந்தர உறுப்புரிமை கொண்ட பத்து நாடுகளில் இலங்கையும் பாகிஸ்தானும் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை என்றாலும், மற்ற எட்டு நாடுகளின் ஆதரவுடன் சீர்திருத்த தீர்மானங்கள் நிறைவேறியுள்ளன.

இந்தச் சீர்திருத்தங்களின் மூலமாக உலக கிரிக்கெட் கட்டுப்பாட்டு அமைப்பில் இந்தியா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா ஆகிய மூன்று நாடுகளுக்கு மட்டும் சிறப்பு அந்தஸ்து ஏற்படுத்தப்படுகிறது என்று கூறி பாகிஸ்தானும், இலங்கையும் தீர்மானங்களை எதிர்த்துவந்திருந்தன.

தென்னாபிரிக்காவும் தனது எதிர்ப்பைத் தெரிவித்திருந்தாலும் கடைசியில் அது இந்தத் தீர்மானங்களுக்கு ஆதரவாக வாக்களித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

ஐ.சி.சிக்குள் புதிய செயற்குழு ஒன்றையும் நிதி மற்றும் வர்த்தக விவகாரக் குழு ஒன்றையும் ஏற்படுத்திக் கள அளவில் நிர்வாக தலைமைத்துவத்தை கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது. இந்த புதிய குழுக்களில் ஐந்து நாடுகள் பங்கு பெறும். அவற்றில் இந்தியா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து ஆகிய நாடுகளின் கிரிக்கெட் நிர்வாக அமைப்பு நிரந்தர உறுப்பினர் களாக இருக்கும் என்று தெரிகிறது. மற்ற இரண்டு நாடுகள் ஐ.சி.சி நிர்வாகக் குழுவால் தேர்ந்தெடுக்கப் படுவார்கள்.

## அமெரிக்காவுக்கு முதல் தங்கப் பதக்கம்

குளிர்கால ஒலிம்பிக்கின் முதல் தங்கப்பதக்கத்தை அமெரிக்க வீரர் சேஜ் கோட்சென்பார்க் தட்டிச் சென்றார். ரஷ்யாவின் சோச்சி நகரில் 22ஆவது குளிர்கால ஒலிம்பிக் போட்டி நடந்து வருகிறது. 88 நாடுகளைச் சேர்ந்த 2,800க்கும் மேற்பட்ட வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர். ஏராளமான பொருட்செலவில் தொடக்க விழா முடிந்து, நேற்று முதல் போட்டிகள் நடக்கின்றன. ஸ்னோபோர்ட்' போட்டியில் ஆண்கள் ஸ்லோப்ஸ் டைல்' பிரிவில் அமெரிக்காவின் 20 வயது வீரர் சேஜ் கோட்சென்பார்க், முதல் தங்கப்பதக்கத்தைத் தட்டிச் சென்றார். நோர்வேயின் சாண்ட்பக்குக்கு வெள்ளியும், கனடாவின் மெக்மோரிசிற்கு வெண்கலமும் கிடைத்தது. (த)




சேஜ் கோட்சென்பார்க்

## தென்னாபிரிக்கத் தொடரில் ஷேன் வொட்சன் சந்தேகம்

தென்னாபிரிக்கா மற்றும் ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையில் தென்னாபிரிக்காவில் நடைபெறவுள்ள டெஸ்ட் தொடரில் ஷேன் வொட்சன் விளையாடுவதில் சந்தேகம் எழுந்துள்ளது. முதல் போட்டியில் விளையாடமாட்டார் என உறுதி செய்யப்பட்டுள்ளது.

கெண்டைக்கால் சதைப்பிடிப்பு ஏற்பட்டுள்ளமையே இதற்குக் காரணமாகும். பயிற்சியில் ஈடுபட்ட வேளையிலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது. கடுமையான பயிற்சியில் ஈடுப்பட்டமையினாலேயே இந்தத் தசைப் பிடிப்பு ஏற்பட்டுள்ளது.

இரண்டாவது போட்டிக்கு முன்னர் அவரை குணப்படுத்திவிட முடியும் என உடலியக்க நிபுணரும், வைத்தியரும் நம்பிக்கை வெளியிட்டுள்ள போதும் அதை உறுதிப்படுத்தவில்லை.

ஷேன் வொட்சனின் இடத்துக்காக ஷோன் மார்ஷ் தென்னாபிரிக்கா பயணமாகவுள்ளார். ஏற்கனவே உபாதை அடைந்து இருந்த ஷோன் மார்ஷின் இடத்துக்குப் பிலிப் ஹியூஸ் சேர்த்துக் கொள்ளப்பட்டு இருந்தார். இருப்பினும் ஷோன் மார்ஷ் குணமடைந்துள்ள நிலையில் மேலதிக வீரராக அணிக்கு அழைக்கப்பட்டுள்ளார். (த)




ஷோன் மார்ஷ்

## துரதிஷ்டவசமான தோல்வி


இந்தியா- நியூசிலாந்து அணிகளுக்கு இடையேயான முதல் டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து அணி வெற்றி பெற்றுள்ளது. இந்தப் போட்டியில் தோல்வி அடைந்தது குறித்து இந்திய அணியின் அணித்தலைவர் டோனி கூறுகையில், பந்துவீச்சு மிகவும் சிறப்பாக இருந்தது. இந்திய பந்துவீச்சாளர்களின் இப்படி ஒரு சிறப்பான பந்து வீச்சை நான் இதற்கு முன்பு பார்த்தது இல்லை.

இலக்குக்கு நேராக நேர்த்தியுடன்வந்துவீசினார்கள். தொடர்ந்து இது மாதிரி அவர்கள் பந்து வீசியது அவசியமாகிறது. முதல் இன்னிங்சில் எங்களது துடுப்பாட்டம் நன்றாக அமைய வில்லை. மோசமானதாக இருந்தது. 2ஆவது இன்னிங் சில் எங்களது வீரர்கள் சிறப்பாக துடுப்பெடுத்து ஆடினர். சில ஆட்டமிழப்புகள் துரதிஷ்டவசமானவை. ரகானேக்கு கொடுக்கப்பட்ட எல்.பி.டபிள்யூ முடிவு துரதிஷ்டவசமா னது. முக்கியமான கட்டத்தில் இந்த ஆட்டமிழப்புக் கொடுக் கப்பட்டதுகடினமான ஒன்றாகும் என்று தெரிவித்துள்ளார். (த)



டோனி

# தோல்விக்கு பீட்டர்சன் பலிகடாவா?
## முன்னாள் வீரர் கடும் தாக்கு


பீட்டர்சன்

ஆஷஸ் கிரிக்கெட் தோல்விக்கு பீட்டர்சனை பலிகடா ஆக்குவதா என இங்கிலாந்து அணியின் முன்னாள் வீரர் பிளிண்டாப் கேள்வி எழுப்பியுள்ளார். அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஆஷஸ் கிரிக்கெட் தொடரில் 5-0 என்ற கணக் கில் இங்கிலாந்து அணி தோல்வி அடைந்தது.

இதனைத் தொடர்ந்து அணியை வலுப்படுத்தும் நடவடிக்கை என்ற பெயரில் இங்கிலாந்து கிரிக்கெட் அணியில் இருந்து முன் னணி பேட்ஸ்மேன் கெவின் பீட்டர்சன் நிரந்தரமாக நீக்கப்பட் டுள்ளார். இவர் நீக்கப்பட்டது குறித்து பல்வேறு விவா தங்கள் எழுந்துள்ளன.

முன்னாள் வீரர் பிளிண்டாப் கூறுகையில். ஆஷஸ் தொடரின் தோல்விக்கு பீட்டர்சன் பலி கடா ஆக்கப்பட்டு விட்டார்.

இதுபோன்ற முடிவுகள் தவறானது. தனிப்பட்ட வீரர் மீது இதுபோன்று நடவடிக்கை எடுப்பது அணியின் உத்வேகத்தை சிதைத்து விடும் என்று தெரிவித்துள்ளார்.

# டெஸ்ட் கிரிக்கெட்டுக்கு
# ஊக்கம்

டெஸ்ட் கிரிக்கெட்டை ஊக்குவிப்பதற்கென விசேட நிதி ஒன்றை உருவாக்குவது. டெஸ்ட் விளையாடும் அனைத்து நாடுகளும் தங்களி டையே ஒப்பந்தங்களைச் செய்துகொண்டு அடுத்த பத்து ஆண்டு களுக்கான டெஸ்ட் பந்தயங்களின் ஒருங்கிணைந்த அட்ட வணை ஒன்றை உருவாக்குவது என்று தீர் மானிக் கப்பட்டுள்ளது.

2017ஆம் ஆண்டும் 2021ஆம் ஆண்டும் நடத்தப்படுவதாக இருந்த டெஸ்ட் கிரிக்கெட் உலகக் கிண்ணத்துக்குப் பதிலாக அவ் வாண்டுகளில் சம்பியன்ஸ் கிண்ணப் போட்டி களை நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட் டுள் ளது.

நான்கு நாடுகளை வைத்து இறுதிச் சுற்று போட்டிகளை நடத்துவதென்பது டெஸ்ட் கிரிக்கெட்டுக்குப் பொருத்தமாக இல்லை என்பதால் அந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. ஐ.சி.சியில் தற்காலிக உறுப்புரிமை கொண் டுள்ள நாடுகள் டெஸ்ட் போட்டி கள் விளை யாடும் அந்தஸ்தைப் பெறுவதற்கான வழி ஒன்றும் தற்போது வகுக்கப்பட்டுள்ளது. (த)

# ஏலத்துக்கு சிக்கல்

INDIAN PREMIER LEAGUE 2014

7ஆவது பிரிமியர் தொடருக்கான ஏலம் குறித்த வழக்கு. உயர்நீதிமன்றில் விசாரணைக்கு வர இருப்பதால், திட்டமிட்டபடி இது நடக்குமா என சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

கடந்த 6ஆவது பிரிமியர் தொடரில் நடந்த சூதாட்டம் தொடர்பாக, நீதிபதி முகுல் முத்கல் தலைமையிலான குழு விசாரித்து வருகிறது. இது இன்று திங்கள்கிழமை அறிக்கை தாக்கல் செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதில் சென்னை அணி உரிமையாளர் சீனி வாசன், மருமகன் குருநாத் மெய்யப்பனுக்கு உள்ள தொடர்புகள் இடம் பெறும் எனத் தெரி கிறது.

இதனிடையே 12ஆம்,13ஆம் திகதிகளில் 7ஆவது பிரிமியர் தொடருக்கான வீரர்கள் ஏலம் நடக்கவுள்ளது.

இதனால், இதில் நீதிமன்றம் தலையிட வேண் டும் என இந்திய கிரிக்கெட் சபை அங்கீகாரம் பெறாத, பீகார் கிரிக்கெட் சங்கச் செயலர் ஆதித்ய வர்மா உயர்நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்தார்.

இதில், 6ஆவது தொடரில்நடந்தசூதாட்டம்குறித்து, நீதிபதி முகுல் முத்கல் அறிக்கை விரைவில் வரவுள்ளது. இது சென்னை அணிக்கு எதிராக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதை யடுத்து, சென்னை அணி பங்கேற்பது உறுதி யில்லாமல் உள்ளது. இதனால், வீரர்கள் ஏலத் தில் நீதிமன்றம் தலையிட வேண்டும், என, கூறப்பட்டு இருந்தது.

மனுவை ஏற்றுக் கொண்ட நீதிபதி ஏ.கே.பட் னாயக் தலைமையிலான ஆயம். இன்று திங்கள்கிழமை விசாரிப்பதாகத் தெரிவித்தது. இது குறித்து ஆதித்ய வர்மா கூறுகையில் சென்னை அணியின் உரிமம் உத்தரவாதம் இல்லாமல் உள்ளது. பெரும்பாலும், இது ரத்தா கும் எனத் தெரி கிறது என்றார். (த)

**கையடக்கத் தொலைபேசி திருத்தும் பாடநெறி**

நீங்கள் பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தியவரா? சுயதொழில் ஒன்றை எதிர்பார்ப்பவரா?
வேலை செய்துகொண்டு பகுதி நேரமாக வருமானம் ஈட்டவேண்டுமா?

புதுப்பொலிவுடன் யாழ் நகரில் உங்கள் எதிர்காலத்துக்கு மாதம் 150000/= க்கு மேல் வருமானம் ஈட்ட ஒரு வாய்ப்பு

திருத்தும் முறையில் 10 வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரும் இலங்கையில் 2000 இற்கும் மேற்பட்ட மாணவர்களை உருவாக்கிய முதற் தர ஆசிரியருமான Ganesh.K பாட நெறிக் கான கட்டணத்தை முதல் மாதத்திலேயே சம்பாதிக்க முடியும். நவீன Mobile Phone Repairing முறைகள் பயிற்றுவிக்கப்படும்.

04 Day Course

BTEC
BRITISH TECHNOLOGY ENGLISH COLLEGE
#21, Sirampiyadi lane Jaffna.
TP: 0217904468
MO:0777444225

**பதவி வெற்றிடம்**

1) உதவி முகாமையாளர் ஆண் / பெண் பட்டதாரிகள் மாத்திரம் 50 வயதுக்குட்பட்டவர்கள் 2 வருட வேலை ஒப்பந்தம்
2) அலுவலக உத்தியோகத்தர் (பெண்கள்) A/L சித்தி 50 வயதுக்குட்பட்டவர்கள் 2 வருட சேவை ஒப்பந்தம்

நேர்முகத்தேர்வு
12.02.2014 புதன்
பி.ப. 5.30 மணி
அனைவருக்கும் சனி, ஞாயிறு வேலைநாளாகும்
வெள்ளிக்கிழமைகளில் ஓய்வு வழங்கப்படும் தினமும் பி.ப. 6 மணிக்கே பணி நிறைவடையும்
பொதுமுகாமையாளர்
திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்.

**SPOKEN ENGLISH**
WITH DIPLOMA CERTIFICATE

O/L எழுதியோர், அரச, தனியார் ஊழியர்கள், இளைஞர் யுவதிகள், வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.
ஆங்கிலத்தில் ஓரெழுத்து தெரியாதவர்கள் கூட எமது பயிற்சியில் இணைந்து பயிற்சிபெற முடியும்.
வாரநாள் பிரிவு ஆரம்பம் 12.02.2014 புதன்கிழமை
பிரிவு:1 09.00-11.00 பிரிவு:2 11.00-01.00
3 மாதத்தில் எவராவது சரளமாக ஆங்கிலம் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம் வழங்கப்படும்.
பல்லாயிரக்கணக்கான மாணவர்களும் ஆசிரியர்களும் படித்து பயன்பெற்ற பாடநெறி.

SAAMSON Language School
179, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
077 621 4567

HP யின் உத்தியோகபூர்வ வியாபார பங்காளர் நளினின் **Mega offer**

NALIN Information Technologies(Pvt)Ltd.
**NALIN INFORMATION TECHNOLOGIES (PVT) LTD.**

யாழ்ப்பாணத்திலும்
HP Pavilion 15 i3 3rd gen
500 GB / 4 GB / 15.6" LED Wifi / BT / Webcam/ Optional Win 8
Free STC HSPA 7.2 Multi Dongle, Head phone, Mouse, HP Original Bag
With Warranty
64,900/= மட்டுமே
முந்துங்கள்! கையிருப்பு உள்ளவரை மட்டுமே!

BRANDED PC & Laptop
HP Genuine warranty
1 year parts Warranty
2 years service free

சுன்னாகத்திலும்
Assemble Pc யின் விலையில் நீண்டகால பாவனைக்கு HP Dualcore Pc
2030 Dualcore processor
500 GB (7 200) / 2 GB (DDR 3)/ DVD writer / Card Reader / 18.5" LED HP / Optional Win 8
49,500/= மட்டுமே Free Head phone

021 222 1121 | 077 766 7975 | 021 222 4994 | facebook/nalin_it
Branch: No. 116 G, K.K.S. Road, Chunnakam. 021 224 2222 077 714 0431



# சிங்கப்பூர் ஜுவல்லறியின்
## புதிய கிளைத் திறப்பு விழா

இன்று(10.02.2014) திங்கட்கிழமை நண்பகல் 12.00-2.00 மணிவரையுள்ள சுபவேளையில் இல.28, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தில் கோலாகலமாகத் திறந்து வைக்கப்படுகின்றது என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

நவீன அழகிய சிங்கப்பூர் நகைகளுக்கு
**சிங்கப்பூர் ஜுவல்லறி**
T.P:021 459 0260
28, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



(சி/11515)(3.6.4)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.02.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.